F.D.R.C. 3252
R.R.No 110-2-92

/892 MKP4,G
M91
116960

உ

கணபதிதுணை

தேவிசகாயம்.

# கெங்கையம்மன்

## நாடகாலங்காரம்,

இஃது
வடவேங்கடமென்னுந்
திருப்பதியில்-ஜனித்தோங்கும்
கெங்கையம்மன் மீது;

விழுப்புரம் தாலூக்கா
விக்கிரவாண்டி சாலை

## கிருஷ்ணப்பிள்ளை

இயற்றியது.

இஃது
கோகுலாபுரம்
**அருணாசல முதலியாரால்**
பார்வையிடப்பட்டு,

திருப்பதி
**இரத்தினமுதலியாரவர்களது**
கலைக்கியான முத்திராக்ஷர சாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1891-ளு

Registered Copy Right.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS
16 MAY. 92

உ

கடவுள்துணை

# விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில் சென்னப்பட்டணம் பெத்துநாய்க்கன்பேட்டை முத்துகிருஷ்ணன் தெருவில் கிழக்கண்டைவாடை ௬௪-வது நெம்பர் வீட்டில் இருக்கும் ம-௱-௱-ஸ்ரீ திருப்பதி இரத்தினமுதலியாரிடத்திலும், பண்ணுருட்டியில் புஸ்தகவியாபாரஞ்செய்யும் சின்னசாமிநாயுடு விடத்திலும், திண்டிவனம் புஸ்தகவியாபாரஞ்செய்யும் நணிகாசலமுதலியாரிடத்திலும், புதுவை ராஜவீதி நெம்பர் வெளவில் புஸ்தகவியாபாரஞ்செய்யும் அரியபுத்திராயகரிடத்திலும், கணேசர்ஜாவளி, சரஸ்வதிஜாவளி, பழனியாண்டவர்ஜாவளி, ஷை இரண்டாவதுபாகம், கெங்கையம்மநாடகம், சயிந்தவநாடகம், இரணியநாடகம், பதினெட்டாம்போர் நாடகம், இந்திரசபா, பவழேந்திரசபா, பதினெண்சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய செல்லாக்கோர்வைகளும், இன்னும் பலவித தமிழ்-தெலுங்கு வயித்திய ஜோதிடங்களும், பெரியோர்களால் செய்யப்பட்ட சாஸ்திரங்களும், புஷ்பாரதச்செட்டியார்புஸ்தகங்களும், நாவலர்புஸ்தகங்களும், டிபோபுஸ்தகங்களும், இன்னும் வேண்டியபுஸ்தகங்களும் விலை சரசமாக விற்கிறபடியால், வேண்டியவர்கள் ஷை யாரிடத்தில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

கெங்கையம்மன் நாடகாலங்காரம் - விலை-அணா-௪.

சயிந்தவ நாடகாலங்காரம் - விலை-அணா-௪.

பதினெட்டாம்போர் - விலை-அணா-௪.

இப்படிக்கு,

ஜே. தி. இரத்தினமுதலியார்.

11690

உ

கடவுள்துணை

தேவிசகாயம்.

# கெங்கையம்மன்-நாடகம்.

## விநாயகர் - காப்பு.

பாயிரம்

விருத்தம்.

சீர்பரவுமூலகேந்தூர் கங்கைகுலவாசன் செஞ்சடையிலிருந்தாடுங் கெங்கையம்மன், பேர்பரவுஞ்சரிதையதைஞ்ஞலகந்தன்னிற் பேசரியநாடகமாய்ச்சொல்லவோங்கும், பார்பரவுமிமையகிரி வேந்தனீன்ற பார்வதியாள்தந்தவருமுகற்குமூத்த, கார்பரவுந்திருவணிமால்மருகனான கணபதியினிருசரணங் காப்புதானே.

சுப்பிரமணியர்துதி.

விருத்தம்.

ஆதிமால்மருகனை வையகரன்பாதம்போற்றி
சோதிசேர்கெங்கையம்மன் ஞானநாடகத்தைப்பாட
வேதியன்றனைச்சிறையடித்த வேலணிகரத்தோனை
சோதியாகுமுமையாளீன்ற குமரவேள்பாதம்போற்றி.

விநாயகர்வருகிற - விருத்தம்

பாரிலங்குங்கைலைமலை நாதன்றனும்
பண்புடனேயுமையாளினிதாய்த் தந்தபாலன்
பேரிலங்குங்கனகமணி மகுடமுன்னப்
பெருச்சாளிவாகனத்தி லன்பாய்
ஏரிலங்குங்கரிமுகமுந் துதிக்கையோடே
யிங்கிதஞ்சேர்முனிவரமரர் சொரிந்துபோற்றச்
சீரிலங்குமவலுடன் கன்னல்வேழுந்
செங்கழனிவைத்தாரும் வருகின்றாரே,

கோயிற்காவருகிற-தரு-இ-ம-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தாரோசெங்கழுனிநாதர் வல்லபையாகன்
வந்தாரோசெங்கழுனிநாதர்

அநுபல்லவி.

| | |
|---|---|
| வந்தார்விநோதமாக | வானவர்மலர்சொரிய |
| யிந்திராதிமுனிவர்கு | ளிருபுரம்நெருங்கிட (வந்) |

சரணங்கள்.

| | |
|---|---|
| மணிமகுட மிலங்க | வண்ணப்பணிகளாட |
| அணியணியாய்க்கணங்க | ளனேகநெருங்கிடவே (வந் |
| அங்குசபாசமிலங்க | ஆகுவாகனமேறி |
| வெங்கயமுகமிலங்க | கிண்கிணியணியிற்கொஞ்ச (வந்) |
| இன்புளவளவநகர் | நிலவுங்கணநாதர் |
| அன்புடனேசெங்கையம்ம | னருந்தமிழ்க்கருட்செய (வந்) |

வசனம்.

அதோதேப்படியென்றால் இந்தப்பிரகாரம் வளவனூரில் திருக்கோயிற்கொண் டெழுந்தருளிய ஸ்ரீ செங்கழுனி விநாயகர் செங்கையம்மன் சபைக்கு வந்தபோது அக்கடவுளைப் பூசிக்கும் குருக்கள் வருகிற விதங் காண்க.

பொது-விருத்தம்.

கோதிலாவளவனூரிற் குலவிவாழ்கணநாதற்கு
வேதாகமத்தெளிவோ டாடி விதிப்படிபூசைசெய்ய
தாதவிழ்மலர்நீறொடு தண்புனற்கொண்டுவையர்
சோதிருப்பிரிதாய்முன்ன ஞரிதமாய்வருகின்றாரே.

குருக்கள் வருகிற தரு-இ-ம-காம்போதி-அட தாளம்.

பல்லவி.

| | |
|---|---|
| வேதியர்வந்தாரோ | பூசனைபுரி |
| வேதியர்வந்தாரோ | |



அநுபல்லவி.

| | |
|---|---|
| ஓதற்கரும்வளவனூரிற் | றுலங்கிநாளும் |
| நீதியாயருட்செய் | நிமலனைப்பூசிக்க (வேதி) |

சரணங்கள்.

| | |
|---|---|
| மஞ்சனீராடி | வெள்ளிக்குடத்தில் |
| மலர்கள் | பலவுந்தேடி |
| தஞ்சமென்றடைந்தோர்க்கு | தயைசுரக்கும்பெம்மானை |
| குஞ்சிதபாதத்தானை | கோதிலானைப்பூசிக்க (வேதி) |
| பஞ்சாக்கரங்கள்துலங்க | திணிகொள்மார்பில் |
| பளிங்குமாமணி | விலங்க |
| செஞ்சாலிகளுஞ்சூழ்ந்தே | செழிக்கும்வளவனூரில் |
| மஞ்சாருங்கோபுரங்கள் | வயங்குங்கோயிலைநாடி (வேதி) |
| அப்பமுப்பழத்தோடு | யவற்கடலை |
| யடிசிற் | பலவுநீமெ |
| செப்பரியநாதற்கு | சிந்தைமகிழ்கொண்டு |
| சேணுலகோர்தமது | சித்தம்பிரமிக்கப்பண்ட (வேதி) |

வசனம்.

இந்தப்பிரகாரம் கணநாதனைப் பூசைசெய்யும் குருக்களானவர் மஞ்சனமாடி ஜெபதபங்களை முடித்துப் பின் வெள்ளிப்பாத்திரத்தில் அபிஷேகநீரும்-மல்லிகை-முல்லை- யிருவாட்சி யென்னு மலர்களுங் கொண்டு ஆராதனைக்கு வேண்டிய அவற்கடலை யப்பமுப்பழ மென்றிருண்டையுடனும்வந்து கணநாதனுக் கபிஷேகஞ்செய்து மலர்சூடி விதிப்படி பூசை செய்யும் விதங்காண்க.

குருக்கள்-கணேசனைப் பூசிக்கும் மந்திரம்.

| | |
|---|---|
| ஓம்-சுமுகாயநமஹா | ஓம்-ஏகதந்தாயநமஹா |
| ஓம்-கபிலாயநமஹா | ஓம்-கஜகர்ணிகாயநமஹா |
| ஓம்-லம்போதராயநமஹா | ஓம்-விகடாயநமஹா |
| ஓம்-விக்னராஜாயநமஹா | ஓம்-க[illegible]திபதேயநமஹா |
| ஓம்-தூமகேதாயநமஹா | ஓம் கணாதிதேக்ஷாயநமஹா |
| ஓம்-பாலசந்திராயநமஹா | ஓம்-சூர்ப்பகர்ணாயநமஹா |
| ஓம்-ஹேரம்பாயநமஹா | ஓம்-ஸ்கந்தபூர்வஜாயநமஹா |

ஓம்-மஹாகணதிபதேயநமஹா.

வசனம்

இந்தப்பிரகாரங் கணநாதனைப்பூசித்தருந்தன் சென்றபிறகு சத்ய லோகவாசியாகிய பிரமதேவன் சபைக்குவருகிறபடியால் அச்சபையை அலங்காரஞ்செய்து காக்குங் கட்டியக்காரன் வருகிறவிதங்காண்க,

கட்டியன்வருகிற பொதுவிருத்தம்

வடிவாளுங்கரத்திலேந்தி வாகுவல்லயமும்வெள்ளித்
தடியுடன்சரிகைப்பாகை ஜமுதாவுமலங்கரித்தே
கெடிபெறமுருந்துரிசை செப்பிரமாய்த்துலக்கக்
கடுகியேபிரமன்வாசற் கட்டியன்வருகின்றனே,

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் பிரமதேவன் சபையைக் காக்கும் ஜமுதாவுமாகிய பிரம்புகொண்டு ஆக்கியித்து மீசையுமுருக்கி யெதிர்நின்றவர்களை யதட்டிவருகிற விதங்காண்க.

தரு இ-ம் அபதுபம் ஆதி.

பல்லவி.

வெண்ணெயுண்டமாயன்றந்த வேதனிடவாயல்காக்கும்
வண்ணமுள்ளகட்டியனும் வந்துமேவினான்

சரணங்கள்

பொற்சரிகைப்பாகை ... பூண்டபணிகள் துலங்க
கன்னபரிசையிலங்க கட்டியக்காரன்மேவினான் (வெ)

கட்டிலாகிர்த்தியோங்க மாயன்மைந்தன்வாசல்காக்கும
கட்டாரியுடைவாள்பூண்டு கட்டியக்காரன்மேவினான் (வெ)

தங்கப்பணிகள் துலங்கத் தாவியேநடைநடந்து
தங்கையம்மன்பாதம்போ... கட்டியக்காரன்மேவினான் (வெ)

வசனம்

அகோதெப்படியென்றால் ஆ-ஆ-சத்யலோகவாசனாகிய பிரமன் சபைக்கு வருகிறபடியால் யாவரும்பேசாதிருங்கள் பேசாதிருங்கள் சத்தி சத்து



பிரமதேவன் சபைக்கு வருகிற-தரு

பொது-விருத்தம்

உசிதவெண்கமலவாணிக் குகந்திமெழுகுகாந்தன்
பசுபதிபரமன்மெச்சப் பாரியகெங்கையையேந்தி
யிசையுளதேம்பாட வெழிற்பணியலங்கரித்தே
திசைமுகமுடையபிரம்ம தேவனும்வருகின்றனே

வசனம்,

அகோதெப்படியென்றால் கலைமகட்கினியவனாகியும் சத்யலோகமாளப்பட்டவனாகியுமிலங்குந் திசைமுகபிரமன் ஆனந்தம்பணிகளைப்பூண்டு பரமனாகிய கைலாசபதி மெச்சும்படியாய் சபைக்குவருகிற விதங்காண்க.

தரு இ-ம் வராளி-அடதாளம்.

பல்லவி.

வேதனும்வந்தாரோ வுலகளிக்க
நாதனும் வந்தாரோ

அநுபல்லவி

சீதாருடனே செந்திருவும்களிக்க
தேசலாவியவுகசுகாம் — வாசனிருசியமாலையாடவே (வேத)

சரணங்கள்.

அண்டர்களியாவரும் கண்டடிதாழ்வே
வெண்டிசை அதிபெற தண்டகைரத்திலேந்தி
யிலகுமணிமுடி தகதகென்னவே
பாவிதப்பணி யொளிகள்மின்னவே (வேத)

கன்னியர்நடமாட விற்றைுயர்க
ஞன்வித மாகப்பாட
அன்னவாகனத்திலேறி யாணிமுத்துப்பணிமின்ன
தன்னிகர்குடைகவிக்கச் சாமனாகிளங்குப்போட (வேத)

சதுர்சேர்மு கிலர்வீச அக்ஷதையள்ளி
ஆதியிகத் தேவர்பேச
மதுரவாணியுடன் வடிவுன்னாகிலக்குமிக்
(ரதிபதிமக்கள தொளியெங்குமோங்கவே (வேத)

பிரமன்சொல்-விருத்தம்.

சிந்துருழலகோர்மெச்சச் சீர்கொளுஞ்சபையிலோங்கும்
விந்தைசேர்மருவென்றேது மேதகுமந்திரிகேளாய்
உந்தியாலெனையளித்த வுலகளந்தோன்களிக்க
சந்தரமவன்றனேத்திச் சிறுடன்வாழுவோமால்

வசனம்

அகோதெப்படியென்றால் கடல்சூழுலகில் ஓங்கும் மாந்தர்கள் சீரம்படியாகிய விந்தையையும் மதியையுமுடைய மருவென்று செரி த்தக்கமந்திரி என்னை தனது உந்திக்கமலத்திலிடமாய் ஜனிப்பித்துபு ன்கண்மிகுந்த ஏழுவகைத் தோற்றத்தையுஞ் சிருட்டிக்கும்படியாகி ருளைத்தந்த அண்டவனது பதாம்புயத்தை யநுதினமு மறவாமல் அ ருவருவோம்மந்திரி,

எமதருமராஜன் கொலுவிற்கு வரும்

பொது-விருத்தம்,

செம்முடிதன்னைச்சூடி திகிரிதாங்கண்டமேந்தி
அடியிணைகால்தாத ரஞ்சமிசொறுமு
சிடிகொறும்பட்டிலும்மீது கிரியதுபேகமேறாது
மிடிகீர்குரலிரம்பி யெமராஜன்வந்தானே

இராகம்-தரு-இம்-சர்வேரி-அடதாளசாப்பு

பல்லவி.

தேசதண்டனைசெய்யு மசேனமதரும
ராஜவிஸ்வாசன்வந்தான் மிடாவிலேறி-ராஜ

அநுபல்லவி

மாசிலாமணிமுடிபேசும் கதிர்பெற்றன்ன
தேகலாவும்பிரமன் சிறப்புதெங்கறுமன்ன
மற்றுமுள்ளநிகழ்தவிரரும் சித்தாதியோர்பத்திசெய்யவே

சரணங்கள்

நிலகிரியதுபோற் றேனிரண்டிமிலங்க
சூரனுபாசறுக்கைமிற் றுமெதண்டந்நலக
நிகரில்ருசிசமிக்குணமலங்கதின்ன-பகருமவர்கள்பன்பதாய்து



வந்ததூதரொவரு மலரடிவணங்கிட
மூந்தும்பிரமைப்போலத் தந்தங்களொளியிட
வண்மைசேர்தாளமூரிபேரிகையெண்ணிலாதட மாமொலிசெய (தேச)

உருண்டவிழிபதெட்டுதே மிரண்டபார்வையுடனே
பெருண்டமலையைப்போலே திரண்டபுயத்துடனே
மூந்துமொளியுடன்வந்தசூரியன்-விந்தையாகவே-தந்தநருமணி (தேச)

எமன்-சித்ராபுத்ரனுக்குச்சொல்-விருத்தம்

செய்தொழிலறிந்திருக்குஞ் சித்ராபுத்ரனேகேளாய்
அய்பழுற்றுலகமெங்கு மக்ரமமிகுத்ததாலே
மெய்மதற்கொழிவிலாத வேலைகள்வந்துதிப்போ
தெய்வமேயித்தருவேறே செய்தொழிலரிகிலேனே

வசனம்.

வாருமப்பா சித்ராபுத்ரனே உலகின்கண் என்றால் நடாத்தப் பு ங்தொழில்யாவுமறிந்தவியாதலால் இப்போதுபுவியில் அக்ரமங்கள் மிரு தியாவிருப்பதால் எனக்குஒழிவில்லாதவேலைகள் நேரிட்டிருப்பதால் இ தற்கென்செய்வேனப்பா.

இராகம்-புலம்பல்-தரு-இம்-கமாசு-அடதாளம்.

கண்ணிகள்.

சூரியன்சுதனெனவிரியஞ்செலுத்திடுன்வந்தேனே-இப்போ
பாரிலக்ரமமின்றி மாறாததொழில்செய்து நொந்தேனே

ஆலகாலமுண்ட சூல்பாணியிங்கோலமாச்சதையோ-எந்தன்
காலநாதருக்கும் வேலையொழிவில்லாமல் போச்சதையோ

பதவிக்கிடமில்லாமல் மதங்கொண்டார்மானிடர் சங்கரனே-தொழி
மிதமில்லையாதலினால் வேருவகையறியேன் சங்கரனே (வேர

மண்டலத்துமாகிடர் துண்டதர்ணத்திலே சங்கரனே-அவனா
கண்டிக்கவோவெனதுதேகள்மிகச்சே [illegible] னக்கு
[illegible]ரமேயிவ்வுலகிலிற்பாபமிகுத்ததாலே சங்க[illegible]
[illegible]ரவர்த்தொழில்மிஞ்சி வருத்துதென்செய்கு[illegible] சங்கரனே

அன்னியாயமாயுலகிரக்ரமமிகுத்திடச் சங்கரனே-எழையு
மென்னுல்முடியுமோயிவ் விருந்தொழிலதுசெய்ய சங்கரனே

இருவுமரு-விருத்தம்.

காலதூதுவரேயெந்தன் கருத்ததைச்சொல்லக்கேளீர்
வேலைகள்மிகுத்துவந்த விதமதையகற்றவேண்டி.
சாலஞ்செய்யாமலந்த சதுர்முகன்றன்பாலியாமுன்
காலமதெடுத்துரைக்கக் கடுகவேசெல்வோம்வாரீர்

வசனம்

வாருங்களப்பாகாலதூதர்களே உலகத்திலிருக்கும் மானிடர்களால் அக்ரமங்கள்மிகுதியும் விசேஷப்பட்டு நமக்கும் ஒழிவில்லாமல் துன்பத்தைதருவேலைகள் வாய்த்திருக்கின்றமையால் ஜாலஞ்செய்யாமல் சதுர்முகனுகிய பிரமனிடஞ்சென்று நமதுகுறையைச்சொல்லுவோம்வாருங்கள் தூதர்களே.

இயமன்-பிரமனைப்பணிந்து-கூறும்-கவி

சதுர்முகதேவாவோது சத்தியலோகவாசா
மதுரவாணியின்சமேதா மலரடிபோற்றிபோற்றி

(பிரமன்-இயமனுக்குச்சொல்-கவி)

கதிரவன்மைந்தாவாழி காலதூதுவர்களூழ
மதிமுகம்வாடிவந்த வகையெனக்கறிவிப்பாயே

இயமன்சொல்லுந்-தரு-இ-ம-பியாகடை-தாளம்-ரூபகம்

பல்லவி.

வேதனேநீயறியாச் சேதியொன்றுமில்லை
மெய்[illegible]னேகேளுமை [illegible]யா

அநுபல்லவி.

[illegible]னிலே நீதிநெறிகளிற்றுப்
போகயாற்றொழில்மிஞ்சு லாகயால்மனமஞ்ச



சரணங்கள்.

வஞ்சகமுஞ்சூதுஞ் சஞ்சலமுந்தீதும்
வாகுகளுமிஞ்சியேலோகமதில்
பஞ்சபாதகத்திற கஞ்சாயல்மானிடர்கள்
பயபக்தியில்லாவையோகம்
என்சொல்லுவோம்தொழில் மிஞ்சவேநொந்திட்டோம்
கஞ்சனேயுன்பாதசரணவேவந்திட்டோம் (வேத)

பூமியிலேமெத்த காமியர்க்கேகாலம்
புண்ணியமில்லாஜென்மம்
ஆமிதுபொய்யதாமென்றுரைக்கவு
மதங்குஞ்சாட்சிசொலுங்கன்மம்
வேமயநெறிக்கறி வைத்தோரைக்கண்டிக்க
வாமோவொருவனுலே யதைக்கண்டேதெண்டிக்க (வேத)

திருக்குகளுலகத்திலிருக்கவேண்டுமென்றால்
தேவனேயென்தள்ளிப்போடும்
வுருக்கமாய்நானுமே யிருக்கவேண்டுமென்றால்
வுலகில்சிலர்க்குசொற்கந்தேடும்
பொறுக்குமோவுலகங்கள் பூவைப்படைத்தய்யா
அருக்கன்சேயனேனையு மாதரித்திடுமெய்யா (வேத)

(பிரமன்-இயமனுக்குச்சொல்-விருத்தம்)

மறலியேயஞ்சவேண்டா மானிடர்தமக்குசொர்க்கம்
தரணியிலென்னுலாமோ தயாபரன்றனைப்பணிந்து
வரமதுதரவுனக்கு வகைதேடிவருவேனிப்போ
பரமனார்பக்கலுக்குப் பரிவுடனேகுவோமே

வசனம்.

ஆ-இரவிமைந்தனுகிய மரலியே நீயுனக்குமஞ்சவேண்டாம்பூமியில் [illegible]மார்தர்களுக்கு மோக்ஷசாம்பிராச்சியந்[illegible]கொடுக்க என்றால் [illegible]ஆதலால்தயாபரமூர்த்தியாகிய ஸ்ரீகயிலாசபதி[illegible]டஞ்சென்று வுன [illegible]வேண்டியவரங்களைத் தரும்படியாய்ப்பணிந்து கே[illegible]ளுவே வாருமப்பா யமராஜனே.

(கைலாசபதியாகிய-பரமசிவன்வருகிற-பொருட்-விருத்தம்.

அரியயனமரர்சித்தர் ருமுனிவோர்கள்போற்ற
வரிசிலைக்குலம்வேலும் மான்மழுகரமிலங்க
கரியுரியரவமாடக் கங்கைசெஞ்சடையிலாட
பரிவுடன்விடையிலேறிப் பரமனும்வருகின்றாரே.

——(*)——

(ஈசன்வருகிற-தரு-இ-ம-ஆரபி-ஏகதாளம்.

பல்லவி.

ஈசன்வந்தாரே கைலாச வாசன்வந்தாரே.

அநுபல்லவி.

மாதுமைதனை வாமத்திலேந்திர
மன்னனுந்தேவாதி மாதவத்தோர்களும்
தேசவைக்கருட காந்தர்வர் சித்தர்
திவ்யவித்யாதரரும் புகழ்ந்தேத்திட (ஈச)

சரணங்கள்

மாமறைகளொன்று ஓதக்க - கணங்கள்
ஆய்மணிக்குடைகளேந்தாங்க
சாமரைகளரம்பையர்கள்வீச தக்கவிருதுயாகபுகழ்பேச
காமன்கணை துலைந்தயேற கழலினைகளுந்தொழுவோர்விண்
வாச (ஈசன்)

வசனம்

அகோ தெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஸ்ரீ கைலாசபதியாகிய உமாமகேசன் முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள்கருடகாந்தர்வர் சித்தவித்யாதரரியாவரும் புடைசூழ மாதவத்தோர்கள்முடிதாழ சிவகணங்கள் [illegible] நித்தகச்சிதமாகியகுடைகளேந்த அரம்பையராதியப்சரஸ்திரீ [illegible] வட்டக்-காலவட்டமுதலிய சாமரைகள் வீசக் கொலுவிற்றிருக் [illegible] கயில் மறலியாகிய யமனும் மலரோனென்னும் பிரமதேவனுந் தங்கள்மனதிலுள்ள குறைதனைப் பரமசிவனிடம் பணிந்து அர் த்தின்ற விதங்காணக



தரு-இ-ம-உசேனி-தாளம்-ரூபகம்.

கன்னிகள்

சங்கரா சிவ கங்கைவேணியா ஓமரோஹரா
சாம்பசிவனே சரணமையனே
திங்களணியுஞ் செஞ்சடைப்பரனே ஓமரோஹரா
செப்புதற்கரு மான்மழுகரனே
வண்மைசேர் மண்ணுலகமதனிலே ஓமரோஹரா
வளர்ந்தபாப மறந்துபுண்ணியம்
அண்ணலேயும தெண்ணமகற்றி ஓமரோஹரா
அக்ரமங்களுமிகுதியாச்சுதே
பஞ்சபாதகர் பாரிலோங்கியே ஓமரோஹரா
பாழாசெயல் பான்மையோசொலாய்
அஞ்சிநாமுமைத் தஞ்சமென்றுமே ஓமரோஹரா
அந்தகனவன் சிந்தைவாடுறான்
உற்றசேதியுன்சித்தமறியவே ஓமரோஹரா
வும்மிடம்வந்தோ முண்மையாகவே
பக்தியாகவே வெற்றிதந்திட ஓமரோஹரா
பாருங்கிருபைதாருமாதனே.

இதுவுமது-விருத்தம்.

பூமியிலேகுலம்பழுதாகேரலாலும்
பொய்சாட்சிசொல்லிகடன்கழிப்பதாலும்
காமிகளாலக்ரமங்கள்மிகுந்ததாலும்
கடன்கொடுத்தோர்நாணமுற்றேயிருப்பதாலும்
நேமமுடனீதிநெறிபிசகலாலும்
நிதியில்லாயேழையர்கள்வாடலாலும்
ஆமிதுவேபரகதிக்குவழியில்லாம
லந்தகனுமகொந்துவந்தானறிகுவீரோ.

வசனம்.

கேளும் சர்வலோகசரண்யனாகிய சிவபெருமானே பூமியின்கண்ணுங் குழ்மாக்களது வாண்ணஸ்ரமங்கள் பிரண்டிருப்பதாலும் அரசின்முன்னி

லையில் சிலமானிடர் பொய்சாட்சிகள்சொல்லித் தங்கள் துகாலத்தைக்கழித் துவருவதாலும் தங்கள் தங்களுக்குரிய இல்லாளிருந்தும் மோகவிகாரத்தால் பரஸ்திரீகமனஞ்செய்து அக்ரமமிகுத்து நடப்பதாலும் தாங்கள்தேடிய பொருளை வீணிற்செலவழித்து பிறர்பால் கெஞ்சிவாங்கியபொருளைக் கடனுக்கொடுத்தவர்கள் கேழ்க்குங்காலையில் அவர்களது மனநோகப்பேசுங்காலும் கொடுத்தவர்களது மனம்நொந்து தலைதுனித்திருக்கும் தன்மையினாலும் அவ்வவ் வர்ணாஸ்ரமதர்மத்திற்குரிய நீதியின்படி ஜெபதப ஓமவிரதங்களை யநுஷ்டிக்காத தன்மையினாலும் பொருட்குன்னியராகிய ஏழைகள்மிகுதியுந்தங்களது மனவாட்டமுற்றிருப்பதாலும் அன்னவர்கள் தென்றிசைத்தலைவனது ஆட்களாய் வருத்தத்தைக்கொடுத்து முத்திமோட்சத்தை யடையாமலிறக்கின்றார்கள் நாதனே.

சிவபெருமான்சொல்-விருத்தம்.

மலரயன்மாலிகேளீர் வருத்தநீர்படவேவேண்டாம்
உலகெலாமன்பருக்கு முதவியுந்துஷ்டருக்கு
கலமுடன்தெண்டித்தேன்தென் னவாபதம்பேணவேண்டி
இலகவேமனங்களித்தும் மிருப்பிடஞ்சேருவீரே.

வசனம்.

கேளும் சிருஷ்டிப்புக்குரிய பிரமனையும் தெண்டனைக்குரிய அந்தகனையும் வயந்துக்கண்ணியர்களே உலகத்தின்கண்ணேயுக்கும் அன்பர்களுக்கு கருணைசெய்தும் துஷ்டர்களைச் சிட்சைசெய்தும் தென்னவனைப் பணியும்பொருட்டா யாவுஞ்செய்து களிப்பிக்கச்செய்யுந் தன்மைநம்மிடத்திலிருப்பதால் நீங்கள் யாதுக்குமஞ்சாமல் உமதிருப்பிடம்போய்ச் சேருவீர்களப்பா.

பொது-விருத்தம்.

பசலவனெனவேநிலப கிணிகளுமலங்கரித்து
சகலருமதிசயிக்க சரிகைபட்டாடைமின்ன
தகதகவெனவேதண்டை சதங்கையுஞ்சிலம்பொலிக்க
ஜெகமெல்லாந்துதிக்கவெங்கா தேவியும்வருகின்றாளே.

கெங்காப[illegible]ி-வருகிற-தரு-இ-ம.

பல்லவி.

கதிரொத்தமணிசித்ர மதியொத்தமுகின்மிக்க
ஜெகதாபுவாணிவந்தாள் பரமன்பக்கல்(கெங்)



அநுபல்லவி.

துதிபெற்றமாதர்கள் வதனத்திலுமிக்க
சோலைக்கிளிமொழி வாலைக்குயிலென
சேலைக்கதிர்குண சாலிவஜ்ஜிகரி (கதி)

சரணங்கள்.

சங்கரன்சடைதனில் தங்குந்தயாபரியாள்
தையல்சிகாமணி வந்தாள்
தங்கவளைகள்கொஞ்சக் சங்கணங்கரத்தாட
தாவுநற்பத கோனவக்கனியிரமு
தேவரடியார்கள் சிரமவிமோசனி (கதி)

பச்சைக்குரும்பைக்கொங்கைக் கச்செங்கனுமேமின்ன
பதக்கம்பளப ளென்னவே
வச்சிரக்கோந்தளவோலை யுச்சிதலாமஜொலிக்க
வாடைபரவிய வாடைபரிமளம்
பேடைத்திருநடை ஜாடையாகவே (கதி)

மாதர்கவரிவீச வேதமுனிவர்பேச
மங்கையர்புடை சூழவே
பாதச்சிலம்புமிஞ்ச நாதகீதங்களமிஞ்ச
பாசத்துடன்மிகு வாசமிகுத்திட
கேசத்துடன்சரு வேசனைக்காண (கதி)

கெங்காபவானிசொல்-விருத்தம்.

விதிசிரமணிந்தகையா விடமுண்டநீலகண்டா
மதியணிசிவமேயுந்தன் மலரடிபோற்றிபோற்றி
அதிவினாவாகவிந்த வமரர்குழ்சபைக்கழைத்த
அதிபெரும்விதமெனக்குச் சுந்தராவருள்செய்வீரே.

வசனம்.

பிரமகபாலத்தை யேந்திய கரனே நீலகண்டமூர்த்தி மூன்றாம்பிறையைத்தரித்திலங்கும் பெம்மானே தேவரீரது உபயபாதாரவிந்தங்கள் போற்

றிபோற்றி தேவர்முதலியயாவரும் புடைசூழ்ந்திருக்கு மிச்சபையின்கண் அடியாளை அதிதீவிரமாய் வருவித்தகாரணம் யாதோ வதனை திருவாய்மலர்ந்தருளவேண்டும் சுவாமி.

கெங்காபவானிக்குப் பரமசிவன்சொல்.

விருத்தம்.

கெங்கையரோகேள்வாழி புலரிற்பாபங்
கனக்கவெமன்றொழில்மிகுத்து வயனுக்கோர்த
பங்கயனுர்வந்துரைக்க நமன்களிக்க
பாசமுடன்வரமளித்தே னதற்குநீயு
மங்களஞ்சேர்மறைகுலத்திற் செல்வியாகி
மானிடர்க்குவினைமூட்டி மகிமைகாட்டி
பொங்கமுடன்தெண்டிக்கச் சுறிப்பார்கம்மைப்
புகழுமுண்டுபுவனத்திற் கேகுவாயே.

வசனம்,

கேளும்பெண்ணே கெங்காபவானியே உலகத்தில்வியங்கும் மானிடர்களால் அக்ரமங்களாகிய துற்செய்கைகள்மிகுந்து அதனால் பாபமதிகரிக்க அக்குற்றமுடையவர்களைத் தெண்டிக்கும்பொருட்டாய் நியமித்திருக்கும் அந்தகனாகிய யெமனுக்கு ஓழிவில்லாமல் தொழிலதிகப்பட்டிருப்பதால் அவன்பிரமனிடத்தில் முறையிட அப்பிரமன் என்னிடம்முறையிட்டபடியால் அத்துன்பமகலும்படியா யவனுக்கு அநுக்ரகித்தேனதலால் நீ அதன்பொருட்டாய் புவியின்கண்ணேங்கும் மங்களகரமாகிய மறையவர் குலச்செல்வியாய் ஜனித்து துன்மார்க்கமுற்றவர்களுக்கு வினையைப்பூட்டி உனது மகிமையைக்காட்டி சந்தோஷகரமாய் தெண்டிப்பாயாகில் அப்போது நம்மை யாவரும்புகழ்ந்து நன்மார்க்கத்தில் நடந்துவருவார்களாதலால் பூலோகத்திற்கேகுவாய் பெண்ணே.

கெங்காபவானிசொல்-தரு-இ-ம்-சங்கரா-ரூபகம்

கண்ணிகள்.

நாதாநவசீதாயிதுநமக்கு நல்லதல்லவேசொல்லும்
பேதாபேதமுண்டோ வென்னைப் பிரியமனமவருமோ



பிஞ்சகனேமனம் சஞ்சலமாகவே
அஞ்சவேசெய்திடும் வஞ்சகமேதோ (நாதா)

பரமசிவன்சொல்-தரு-இ-ம்-அடாணா-ரூபகம்

கண்ணிகள்.

சொன்னமொழிதவறும துதிக்கமன்னனேறுன்னே
வண்ணக்குயிலேகீர்த்தி வருமேமலர்தருமே
மண்டலதிற்ஜென்மங் கொண்டுமேநீயிரு
துண்டர்கடம்மையே தெண்டனைசெய்யவும் (சொ)

கெங்காபவானிசொல்-தரு-இ-ம்-சங்கரா-ரூபகம்

கண்ணிகள்

நலமோயிதற்கென்செய்வே னட்டிபெடர்காட்டல்சுவாமி
உலகோரென்னைவைவாரையோவோ துய்கவசீதா
உத்தமதேவனே சித்தமும்வாடுதே
பத்திசேர்மறையவர் புத்திரியாவது (நல)

பரமசிவன்சொல்-தரு-இ-ம்-அடாணா-ரூபகம்.

கண்ணிகள்,

கண்டேயுந்தன்மகிமை கருத்திலன்புகிருத்தி
கொண்டாடுவோர் குறைதீரக்கோரு கிருபைக்கன்பாரு
குற்றமேதுவடிவுத்தமியாளே
மெத்தவேகலம் பெற்றிடுவாய்கீ (கண்)

கெங்காபவானிசொல்-விருத்தம்

முப்புரமெரித்தநாதா முக்கணஞானமூர்த்தி
யொப்பிலாப்பரனேயுந்த னொளிபெருஞ்சடையினின்று
மெப்படிநீங்கினு மிருந்துபூலோகந்தன்னில்
தப்புணாயின்றிவாழத் தையலாளறிகிலேனே.

வசனம்

ஐ திரிபுரதகனை திரிநேத்திரதாரியாய்விளங்கும் ஞானமூர்த்தி ஒப்

பொருவில்லாதபரமே உமதுவொளிபொருந்திய சடாடவியினின்றும் அடியாள்செப்படிப்பிரிந்து பூலோகத்தில் ஜெனித்து யாதொருகுற்றமுமின்றி வாழவரிவேணுசுவாமி.

பரமசிவன்-கெங்காபவானிக்குச்சொல்-தரு-இம்-சஹாநா

கண்ணிகள்

கவலைவேணுனக்கு புவனாங்கியெனும் கங்கைதாயுமி நீயே
கருகருமுலகினில் பெருமையடைந்துமே களித்திருப்பாயே
னைமாகவே தினமாமறை
யினையாகுவ தனமேவிடு (கவலை)

கெங்காபவானிசொல்-தரு-இம்-பியாகடை-ரூபகம்

கண்ணிகள்

உம்மைப்பிரிந்திருக்கவாமோ வுமையாள்பாகா
வோராய் மறுகுலத்தி லிருக்கவுந்தேயே
வராபயனே மேனா மதுகரா
ஓதுந்தந்தபரனே பரசபரா (உம்மை)

பரமசிவன்சொல்-தரு-இம்-சஹாநா-ரூபகம்.

கண்ணிகள்

மண்ணும்விண்ணும்புகழ்பிரசித்தமானதாயே
வளருங்கீர்த்தியதனைத் தள்ளுவதேன்வேண்டாம்
மகிமைசெலுத்துவாய் மதியிலுனை
பதியென்றுமானிடர் கதியைச்சேர்க்க (மண்ணு)

கெங்காபவானிசொல்-தரு-இம்-பியாகடை-ரூபகம்.

கண்ணிகள்

இருப்புவிபிறந்தெப்படியிருக்கப்பலபவா
பெண்ணாவெவர்துதிப்பார்சேகராயகனேசொல்
எந்தன்வல்லமையேதுநாதனே
பிசகேர்லிசவாசனேசனே (இரும்)

பரமசிவன் கெங்காபவானிக்குச்சொல்-விருத்தம்

வேதியன்பனவியாகும் விரதமுற்றிருப்பாள்நீபோய்ச்
சோதிசேர்செல்வியாகத் தோன்றியேவளர்ந்துமின்று
மாதிமாவருநேர்ப்பெற்றே யபார்வினையகற்றேவர்
வாதிமுனிவர்களுன்னை வரபார்த்திப்புகழ்கொள்வார்.



வசனம்.

கேளும்பெண்ணே கெங்காபவானியே பூமியின்கண் வேதியர் மரபில்வுதித்த வேதவதியென்னு மோர்பார்ப்பினியானவள் குழந்தையில்லாததன்மையால் கெங்கைக்கரையில் விரதமநுஷ்டித்து வருகின்றாள் நீ போய் அதிரூபலாவண்யமுடைய பெண்குழந்தைவடிவமாய் அக்கெங்கையிற்றோன்றி மிதப்பாயாகில் அன்னவளுன்னைக்கண்டெடுத்துக்கொண்டுபோய்வளர்த்துவருங்காலையில் நீயவளின்றும் நீண்டுவிட்டு வேங்கடத்துறையும் வள்ளலாகியசுவாமியைப்பணிந்து அவரால் வேண்டியவரங்களைப்பெற்றுலோகத்தில் விளைக்குரியதெய்வங்களோடு வாதமிட்டுஜெயித்து வுன்வசப்படுத்திபூமியெங்கும்புகழ்நாட்டியாவருக்குமருட்செய்து அக்ரமங்களைப்போக்கிவருவாய் பெண்ணே.

கெங்காபவானிசொல் விருத்தம்.

என்னயான்செய்வேனோ யிச்சொல்லினைகேட்டவுடனே
உன்னிதவார்த்தையாலே வுருகியேயெனதுநெஞ்சம்
துன்னியபேறிவாழ்ச் சோருதேதன்னுடலெல்லாம்
அன்னவூர்தியினையப்போ லருஞ்சடைநீங்கினேனோ.

வசனம்.

யான் இனியென்செய்வேனோ ஜகதீசனேயென்னுநாயகனே செய்த கட்டளையாகிய உன்னிதவார்த்தையைக் கேட்டவுடனே யெனதுநெஞ்சமானது வுருகி பிரகாசம்பொருந்திய மேனியுங்குலைந்து வுடலுஞ்சோர்ந்து துடிக்கின்றதே இவற்றையோசிக்குங்கால் அன்னவாகனனும் பிரமன் விதித்ததுவோ சடாடவியைவிட்டு நீங்கலாகினேன் என்செய்வேன் ஆண்டவனே

இதுவுமது-தரு-இம்-வர்த்தா-அடதாளம்.

பல்லவி

என்னஜென்மமெடுப்பேன் பூமியின்கண்ணில்
யெப்படிசகித்திருப்பேன்;

அநுபல்லவி

அன்னமேறும்பிரம தேவனையீந்தையோ
வாசாபாசமுடனே யிசனுசெருசடையினில்
கூடாமலிருந்தேனே மோசம்வந்ததேயிப்போ (என்ன)

சரணங்கள்.

எத்தனைபேரென்னை சேவிப்பாரோ வினையக
மேல்வினைபதால் பத்தி செய்வாரோ

பத்தினிவேதநாயகி பெற்றமகளென்றும்
பாவியவளைவிட்டுத் தாவிவினையைத்தொட்டு
மேவிமாளிடர்யாரு மாவிபதரிட்டவே (என்ன)

திங்களணியுங்கடவ காலனே இனியென்
செய்வேன்மங்களகுண லோலனே
கங்கைப்பிணியென்றென்னைக் காசினியோரேசவைத்தாய்
காருமுமதுக்குபை யாரும்பராபரனே
சிரும்புகழுங்கொள்ளத் தாரும்வரமெனக்கு (என்ன)

முக்கியிப்படியோர்கால் நொந்தேனைசுரால்
யெந்தன்வுடலம்வாடி வந்தேனே
அந்தவிதமாச்சதையோ வதிலேலோகந்துதிக்க
வாராத்துயரமுடன் பாரோர்வினையுறவே
மாறுக்கவுலையுடன் தாரார்புகழ்தரவே (என்ன)

வசனம்

அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரம் கெங்காதேவி புலம்பிக்கொண்டிருக்கையில் திருப்பதியென்னுந்தலத்தில் வாசஞ்செய்துகொண்டிருக்கும் மறைகுலச்சிகாமணியாகிய பூசுரர்வேங்கடத்தானை தெரிந்து மனைக்குவருகின்ற விதங்காண்க

மறையவர்வருகிற-தரு-இ ம்-ச ஹராஹ-ஆதி.

பல்லவி.

வேதசாதனம்பெற்றே நீதியில்மனம்வைத்த
வேதசிகாமணிவந்தார் மனைக்கன்பாக (வேத)

அநுபல்லவி.

ஆதிமாலரவிந்த பாதமனதந்துதித்து
வாசுசபாகவேதராம் வீசிநடைநடந்து (வேத)

சரணங்கள்

முத்துகுல்லாவுந்தரித்தே வெற்றிமொழிகள்பேசி
மோகனமாலைக வாடவே
கைதலந்தன்னிலே கடகம்பளபளென்ன
வித்தையிலுயர்ந்திடும் வேதவேதியர்மெச்ச (வேத)



பட்டாமங்துலங்கக கட்டுங்கலையிலங்க
பதக்கம்பளப ளென்னவே
வட்டக்குடைபிடித்தே வாடைக்கமகமென்ன
அட்டியில்லாமலே யழகார்நடைநடந்து (வே)
உலகெலாம்பணிந்தேத்துந் தலைவன்மீதுமிக
வோதும்வேதங்கள் பேசியே
பலகலைகளுமாய்ந்து நிலைபிசகாததீரன்
நலஞ்சேர்பணமூலாவு நறுமலர்களைச்சூடி (வே)

வசனம்,

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் விதிகுலசிகாமணியாகிய பிராமணன் தனது மனைக்குவருவதைக்கண்டு அவர்தேவியாகிய வேதநாயகி வருகிறவிதங்காண்க.

விபதை

அருமறைகுலத்துதித்தே யழகியவதனவஞ்சி
பெருமதிமுகமிலங்கப் பின்னலார்ஜடையுங்குப்பி
திருமணிப்பணிகளாடத் தேன்மொழியணையின்னாள்
நறுமணவீசவேதநாயகிவருகின்றாளே,

வேதநாயகிவருகிற தரு-இ-ம்-ச ஹராஹ-ஆதி

பல்லவி.

சீதரனருளைப்பெற்ற செல்விகாளிதியாளென்னும்
வேதநாயகிவந்தாள் நாதனைக்காண (வேதநாயகி)

அநுபல்லவி

ஓதும்பலமணிக ளொதிரவேஜடையில்
சீதமலர்க்கதம்பம் திகழ்ந்திடப்புவிமீது (சீத).

சரணங்கள்,

பாடகந்தண்டைகொலுசு பதக்கம்பளபளென்ன
நாடெலாம்பரவிய நாரணனெனவேவோதுமன்ன (சீத)
சிற்றிடைபட்டுடுத்திச் செம்பொன்னொட்டியாணமிட்டே
முத்துமாலைகளணிந்தே மூதுணர்ந்தோரோதிய (சீத)
பைந்தொடிமார்புடைசூழ பண்புளோரெவருந்தாழ
விந்தைசேர்நடைநடந்தே வேங்கடத்தானெனவோதும் (சீத)

வேதநாயகிசொல்-விருத்தம்.

வந்தனம்பிராணநாதா வயதறுபதுமாச்ச
குந்தகயில்லைசெல்வக் குறைதவில்லையிருவருக்கும்
சந்ததியுற்றிடாத தன்மையாற்றயங்கிவாடிச்
சிந்தையுமுருகுதையோ தேவனேயென்செய்வேனே,

வசனம்,

சரணம்சரணமையா பிராணநாயகா நமக்காகுல்வயது அறுபதிற்கு மேலாகியும் இதுவரையில் புத்திரபாக்கியமில்லாமல் மற்றபிறரபாக்கியங்களால் கதியுண்டாமோ என்னசெய்வேன் எனது பிராணவல்லபா.

---

இரு-இ-ம்-விருவிடைக் கண்ணிகள்.

என்னபாவஞ்செய்து பிறந்தோமோ அடிபெண்ணேகண்ணே
யிந்தஜன்சந்ததியுமில்லையே
அன்னலூர்விதிதன்னை வெல்லவே என்னாலேயேனே
யாராலாகுமோஷோ ஆவாய் அடி பெண்ணேகண்ணே (யா

விடை. பிள்ளையில்லாப்பாவியாகியே யென்பிராணநாதா
பெருமையிழந்தேனே நாயகா
வள்ளலார்செய்தவிதி வள்ளம்வாடினேனுமக்கு
வந்தபாவியேர்தன்விதியோ என்பிராணநாதா (வந்த

வினா. கோதையாளேவாதையேதுக்கு யென்பெண்ணேகண்ணே
குலந்தழைக்கசமுமில்லையே
ஆதிமாயன்பாதம்போற்றி யன்பர்கட்குதவிசெய்து
மருந்தவமிழைத்துமில்லையே அடிஎன்பெண்ணேகண்ணே (அ

விடை. பட்டணமெய்துங்குழந்தையை யென்பிராணநாதா
பார்த்துகண்கள்பூத்துநொந்தேனே
கட்டளைபிரமன்செய்தவமோ வல்வினையேசு
காசிமலடியானேனே என்பிராணநாதா (காசி

மறையவன்சொல்-விருத்தம்.

பொருந்தியவெவ்வகத்திற் புத்திரனுதிக்குங்காலம்
வருந்தினோம் மிக்கசந்தானம் வருகுமோகாலந்தானே
யிருந்துமுத்தந்தன்னி லெந்நின்மிதுலைந்தாசை
மறந்துமவாழ்நாட்டன்னை மகிழ்வுடன்போக்குவோமே



வசனம்.

கேளாயெனது பிராணநாயகியே உலகத்திலோர்க்கும் மானிடர்களுக்குரிய காலங்களில் எவ்வனகாலத்தில் புத்திரபாக்கியம் கைகூடுமேயன்றி மூப்பில் கூடமாட்டாது அதுபோல் நமதுஎவ்வனத்தில் எத்தனைகோன்பு களிழைத்தும் அறமுறைவழாது நடந்தும் கிடைக்காமற்போய்விட்டதுகையால் இப்போதுகிடைக்கப்போகின்றதா ஆகலால் அவ்வெண்ணத்தை மறந்து முத்தத்திலிருந்து மகிழ்ச்சியோடும் நமதுவாழ்நாளைக்கழிப்போம் பெண்ணே.

பொது-விருத்தம்.

மங்கையும்விசனமுற்று மதுமொழியுரைத்திடாமல்
நங்கையும்ஸ்நானஞ்செய்து நதிக்கரைதன்னில்வந்தே
கங்கையின்கரையினின்று கால்நாட்டியன்புபூட்டி
குங்குமக்களபம்பூசிக் குறித்துமேதுதிசெய்வாளே,

வசனம்

அகோதெப்படியென்றால் வேதநாயகியெனும் பார்ப்பினி தனதுநாயகனுரைத்தமொழிக்குப் பதில்யாதும்பேசாது தினந்தோறும் கங்கைநீராடி குங்குமசந்தனங்களணிந்து அக்கெங்காபவானியைத் தியானித்துக் கால்நாட்டி அன்புபூட்டி புத்திரபாக்கியங் கிடைக்கும்படியாய்த்துதிசெய்யும் விதங்காண்க.

வேதநாயகி-கெங்காபவானியைத்துதிசெய்யுந்தரு-இ-ம்-துக்கடா,

கண்ணிகள்.

சிந்தையிலன்பாகவந்தே ஸ்நானஞ்செய்துக்கொண்டேன்-இவ்வு
கந்தமிருந்திடும் நந்தவனமதைக்கண்டேன்
மல்லிகைமுல்லை மருவிருவாட்சிகள்புன்னை-மருச்
வில்வமுங்கோர்த்துடன் வேண்டியமாமலர்தன்னை
பரிவாகக்கண்டே நதிக்கரையிற்கல்லைநாட்டி-ஓதும்
நெறியாகப்பூசைகள் செய்தேன்மனதின்பம்பூட்டி
யீசன்சடையிலிருந் தாடுங்கெங்கையென்றுமே-வனைக்
கெழில்சேரும்புத்திர பாக்கியந்தந்தருள்வாயே
பாரெங்கும்புகழ்ந்திடும் பாபவிமோசனிதாயே-இந்த
சிரோங்குமுலகத்தில் ஜீவதயாபரிநீயே.

இதுவுமது-தேவாரப்பண்.

சங்கரன்சடையில்வாழ்ந்த தயாபரியானநீயே
எங்குமேநதிகளாகி யிருப்பவளுலகில்நீயே
நங்கையேசர்வஜீவ ரட்சகியானநீயே
என்குறைதவிரபதற்கே யின்பம்வைதருள்வாய்போற்றி

நீரில்லாவுலகமேது நீயிலாக்கதிவேறேது
மாரிலார்செல்வமேது வையகந்தழைப்பதேது
ஆரில்லாவுலகுக்கெல்லா மறுகெதுவடியாருக்கு
பேரில்லாக்குறைபகற்றும் பேதையுன்பாதம்போற்றி.

பொது-விருத்தம்.

நிலத்தினிற்குரியதெய்வம் நீயெனநிதம்பூசிக்க
நலத்தினில்மிகுத்தயீசன் நல்லுரையாலேகெங்கை
சலத்தினில்மிதந்துவந்த சந்தானமதனைக்கண்டு
குலத்தினில்மிகுத்தமாது குழந்தையையெடுத்துச்சொல்வாள்.

வசனம்.

அகோ தெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வேதநாயகி யென்னும் பார்ப்பினியானவள் தினந்தோறும் கெங்கையில் ஜலக்கமாடிக் கந்தபுஷ்ப பரிமளங்களால் கெங்காதேவியை புவனத்திற்குரிய தெய்வ முன்னையன்றி வேறில்லையாதலால் ஏழையேனது மனக்குறையைத் தவிர்த்தாளவேண்டு மென்று பூசித்துவருங்காலையில் நலத்தின்மிகுத்த சந்திரஜடாதரமூர்த்தியி னது விடைபெற்ற கெங்காதேவியானவள் குழந்தைவடிவமாய் அந்த நதி யில் மிதந்துவந்ததைக்கண்டு அதியாவலோடும் அக்குழவி யெடுத்தணைத் துக்கொண்டு கூறுவாள்.

வேதநாயகிசொல்-தரு இ-ம-ஆனந்தபைரவி-ஆதி

பல்லவி.

என்னவடிவமிதுவோ நல்ல
மெழின்மிகுத்தொளிதர விண்ணுலகசுந்தரி யோ (என்)

அநுபல்லவி.

கன்னல்மதன்ரதியோ கார்க்கேயனார்சதியோ
கன்னைநீயாமலர் நங்கையோவிவ்வுரு
வொங்குமுடனேவந்து யென்குறைதீர்த்தவள் (என்)

சரணங்கள்.

பர்வதராஜன்செல்வியோ நிசைகுழுமிப்
பாரெங்கணுந்துதிக்கச் சீருடன்வந்தவள்பச்சை மரகதவல்லியோ
கரகமலங்கள்போலுங் கதிரோனுதயம்போலும்
காணுதேபல்விதம் வேணதுண்டதிசயம் (என்)
கெங்கைகடாட்சமிதுவோ பேதையின்குறை
தேட்டானந்தங்கொண்டேன்தன் வாட்டம்விலவந்த கோபிரமவுருவே



செகமலநங்கையொத்த சிலந்தயெய்யினழகுக்
செகமெலாந்துதித்திட மகிமையைமதித்திடப்
புகலுதற்கரிதான பகிரதிதானோ (என்)
காணாதகாட்சிகண்டேனே ஏழையின்பங்கில்
இக்கையிலுற்றிருக்கமல வல்லியைப்பெற்றே
கருதருகாட்சி கொண்டேனே
தேனுறுந்தோணுதே சுந்தரிதன்னையிங்கே
சுத்தமுடனேயிதைப் பெற்றேயென்றிதவாகன்
மித்தலந்தன்னிலுள வுத்தமராவோ (என்)

இருவுமதா-விருத்தம்

மார்சிவாக்கங்கையின தருளினாலே
மகவைக்கண்டேடிய வரிவியில்லாத
ஆசையினாற்குழவிதனையெடுத்துக்கொண்டே
யன்பரகமனைநாடிக்கணவன்பக்கல்
நேசமுடனடிப்பணிந்தென்பிராணநாதா
நெடுங்காலமாமடைந்தநுன்பந்தீர
வீசுமணிச்செல்விதனை கெங்கைதந்தாள்
வேதகுலநாயகனே விரும்புவீரே

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வேதநாயகி யென்னும் பார்ப்பினியானவள் விரதமநுட்டித்துவருநாளில்குற்றமற்றகெங்காபவானியினருளால் கோடிசந்திரபிம்பம்போன்ற சூர்யெண் குழந்தைஜலத்தில்மிதந்துவருதலை கண்டு அதிகேயாவலோடுமோடி யக்குழந்தையையெடுத்து மார்போடு தழுவிக்கொண்டவளாய் தன்னுமனைக்குவந்து பிரமகுலோத்துங்கனுகிய நாயகனதுபாதகமலங்களைப்பணிந்து ஓபிராணவல்லபா நெடுங்காலம் நாமடைந்திருந்ததுன்பந் தீரும்பொருட்டாய்குருமணிபோலிலங்கு மோர்பெண்குழந்தையைத்தந்தாளிந்தாருட்டாருமென்று புருஷனிடங்கொடுத்தாள்.

விருத்தைடுத்தரு இ-ம.

பல்லவி.

ஏதடிநீயிந்த குழுகள்பேசுறாய்
யிதுமெச்சதலமல்லபோடி.

அநுபல்லவி.

காதலாகயெந்த மாதர்கள்பிள்ளையைக்
கன்னங்களாவுசெய்து வந்தாயோ
பாதகியிதனாலே நீதுகள்நேருமே
பயங்கொண்டேனீமெத்த நயங்கொண்டுபேசாதே (ஏத)

சரணங்கள்

உள்ளநாளுமெந்த னுள்ளத்தைநீகண்டு
வொளரவித்தேபனது விண்டாயோ
தள்ளியகாலமெல்லாங் கள்ளஞ்செய்துவந்த
சங்கதியேதென்று கண்டாயோ
தெள்ளுமிவ்வுலகத்தில் பிள்ளைகளைத்திருடும்
நீரொருவர்களாருண் டுலகததில் (உள்)

தண்ணிமீதுபிள்ளை விண்ணுமிதக்குமோ
சங்கதிநீசொல்வ தேது
உண்ணும் பெரியோனைக் கொண்ணுவிடுந்தண்ணி
வுனக்குப்வசனமிது ரூது
எண்ணப்பாராமலே யென்வீணைப்பேசுராய்
வண்ணமறியாமல் வந்துகீகூசுராய் (தண்)

விடை

சிந்தைதடாகத்தில் வந்துமிதந்துதே
மெய்யென்றேயென்சொல்லை நம்பும்
வந்தவகைகண்டு சிந்தைமிகக்கொண்டு
வைத்தேனேநான்மெத்த அன்பும்
அந்தடாகத்தி லாருமில்லைப்போ
சுந்தரியைக்கொண்டு வந்தேனாளிப்போ (சிந்)

வினா.

எப்படியொப்பலாஞ் செப்பியமாமொழி
யெங்கேயாகிலுஞ்சொல்லிப் பாரும்
செப்பமிலாவிந்த வொப்பில்லாபாலகி
தேசத்தோர்காணாத நேரம்
கப்பியவாடையின் கந்தமணக்குதே
யெப்படியோமன தெண்ணிநினைக்குதே (எப்)

விடை.

கட்டியபாவாடை போட்டுக்கழுத்திலே
காணுதகாட்சியுங் கண்டேன்



வெட்டியமாமரம் போலவேஞானப்போ
விழுந்துதண்டன்செய்துங் கொண்டேன்
அட்டியில்லாமலேவோடி யெடுத்தேனே
மட்டில்லாதமுத்தம் நாடிக்கொடுத்தேனே (கட்டி)

வினா

ஆர்பெற்றபிள்ளையோ நேர்பெற்றிருந்திட
வதற்குகாலபலமு முண்டு
சீர்பெற்றிருந்திட நேர்பெற்றதுன்கையால்
சிந்தைகளிப்பாகக் கொண்டு
ஏர்பெற்றபிள்ளையா லெவ்விதநேருமோ
ஆர்பெற்றிடவென் துன்பங்கள்சாருமோ (ஆர்)

விடை

பேதகமெண்ணியே வாதுகள்பேசுநீர்
பிள்ளைக்குமில்லைக முண்டோ
பாதகியென்றாலும் பிள்ளையைக்கண்டால்
பரிவுகொள்ளாதவ ருண்டோ
நாதனேநீர்விடை தாரும்வளர்க்கவே
பேதநானென்னிட வுள்ளங்கனிக்கவே (பேத)

—(*)—

மறையவன்சொல் கொச்சகம்

வேதகுலநாயகியே மெய்யொளிவுங்கையழகும்
பாதவிரல்மோதிரமும் பட்டாடைப்பொட்டழகும்
சோதிமதிபோன்முகமுந் தொல்லுலகோர்பிள்ளையல்ல
பேதமில்லாக்கெங்கையம்மன் பேரளித்தேனீவளர்ப்பாய்

வசனம்.

வாரும் என துபிராணநாயகியே நமக்குக்கிடைத்தகுழந்தைதேசசை யுஞ் சந்திரபிம்ப போலிலகும் முகாரவிந்தமும் பாதவிரலிலணிந்திராநின்றமோதிரங்களினழகும் இடையில்உடுத்தியிருக்கும்பட்டாடையினழகும் சிரோருகம்போன்ற கரங்களினழகும் நோக்குமிடத்தில் இவ்வுலகவாசிகளுக்குரியபிள்ளையல்லவோதற்றேணப்படுகிறதாகையால்யாதும்பேதகமில்லாமல் இக்குழந்தைக்கு கெங்கையம்மனென்று நாமகரணஞ்செய்தேன் சந்துருஷ்டியோடும் வளர்த்துவாருவாய்பெண்ணே.

வேதநாயகிசொல்-விருத்தம்

மறைகுலங்களிடேற வந்தகங்கையம்மனுக்கும்
புலவர்கள்கொண்டாட பொற்பணிகளலங்கரித்தே

தினைகட்டலோர்மெச்சிடவே சீராட்டித்தாலாட்டி
வினையமுதூட்டி நேசமுடனே வளர்ப்பேன்.

வசனம்

கேளும் என்னுடைய பிராணநாயகா வேதகுலமீதேறும்படியாய் எனக்குக் கிடைத்த கெங்கையம்மனை இராஜராஜாக்கள் கொண்டாடும்படியாய் யாவரும் மெச்சத்தக்க பொற்பணிகளா லலங்காரஞ்செய்து சீராட்டித் தாலாட்டி அமுதூட்டி மிகப்பிரியோடும் வளர்த்து வருவேன் காதனே.

பொது-வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஸ்ரீகைலாசபதியாகிய சோமசேகரனுடைய சடாடவியில் விளங்கும் கங்காதேவியானவள் வேதநாயகியம்மனிடம் நாளொருமேனியுமாய் வளர்ந்து ஐந்தாவது வயதானபிறகு தனக்குச் சமரசமாகிய அயலாத்துப் பெண்களுடன் கூடி விளையாட்டுப் பூசல் செய்ய வருகிறவிதங்காண்க.

இதுவுமது-விருத்தம்

சந்திரசூரியப்பிறையணியிலங்கத் தனிமுத்துச்சுட்டிகளாட
சம்பிரமாய்ச்செம்பொற்சரங்கள் ராக்கடியுஞ்சடைப்பின்னல்குப்பியுங்கு
லுங்க
சுந்திரமிலகுந்தங்கயனாரங்கள் அலங்கியகங்கணைகடகந்
சோதியின்மிகுந்தவுறைமணிகிண்கிணி துலங்கியரத்னமூக்குத்தி
சுந்தமும்பூசிவிழியிலஞ்சனமூம காலினிற்கொலுசுதண்டைகளும்
கனகப்பட்டாடையொட்டியாணமுமிறுக்கிக் கதிரொளிபோல் மிகஜொலிக்க
அந்தணர்குலங்கடழைத்திடவந்தாளாயல்வீட்டுப்பிள்ளைகள்சூழ
வழுதுடன்தெருவில் விளையாடகெங்கை யம்மனும்வந்து தோன்றினளே.

கெங்கையம்மன்வருகிற-தரு-இ ம்-ரூபகம்

பல்லவி

அகிலமெல்லாந்துதிக்கு புகழ்மைசெலுத்துங்கெங்கை
யம்மனிதோ
வந்தாள்.

அநுபல்லவி.

திகில்படப்பகைவர்கள் மிகுவக்ரபார்வையுடன்
கிலகிலமுனிவரும் பலபலமணிதரும்
நலமுடன்றுதிசெய்யக் கலகலவென்றிந்த (அகி)

சரணங்கள்.

சிருங்கார்பணிபூண்டு கொஞ்சி பாருர்புகழ்ந்தெங்கும்
ஜெகத்துபாநாபி
வந்தாள்
ஆருமெதிரில்லாத பேர்பெற்றமகிழ்மிக்க
அன்பர்கள்கண்டிட கெண்டமுஞ்செய்திட
தண்டையலங்கிட மன்றிலொலித்திட (அகி)



பொது விருத்தம்,

தண்ணீரிலாடும்போது சந்தோஷமாகக்கெங்கை
எண்ணியேமகிமைகாட்ட வின்பமாய்மூழ்கியிருக்க
கண்ணீர்கள் சிந்தப்பெண்கள் கெங்கையைக்காணாதாலே
குண்ணியேதாய்தந்தைக்கு கோள்சொலவருகின்றாரே

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் யாவருஞ்சந்தோஷகரமாய் ஜலத்திலிறங்கிவிளையாடும்போது கெங்கையம்மனானவள் தன்மகிமையைக்காட்டும்பொருட்டு மனதிலெண்ணங்கொண்டவளாய் அங்கினில் மூழ்கி யசைவற்றிருக்கும்போது மற்றயாவருங்கண்டு திப்ரமைகொண்டு கண்ணீர்விடுத்தழுது அன்னவள்தாய்தந்தையரிடம்போய்ச்சொல்லுவோமென்று வருகின்றவிதங்காண்க.

அயலாத்துப்பெண்கள்சொல்-தரு-இ-ம்-சாவேரி,

கண்ணிகள்.

| | |
|---|---|
| கன்னியரெல்லாமிருக்க | அக்கமாரே-நல்ல |
| கெங்கையம்மனெங்கையடி | தங்கைமாரே |
| பின்னிடைந்துமூழ்கினளே | அக்கமாரே யவள் |
| பின்பெழுந்துவரக்காணோம் | தங்கைமாரே |
| தாவித்தாவிநான்பிடிக்க | அக்கமாரே-நடுத் |
| தண்ணியிலேபோய்மறைந்தாள் | தங்கைமாரே |
| ஆவிவாடுதென்னசெய்வோம் | அக்கமாரே-அவ |
| ளழகையென்றுகாண்பமடி | தங்கைமாரே |
| ஓடியிந்தசேதிசொன்னால் | அக்கமாரே-அவர் |
| வுடனேவந்தெடுப்பாரடி | தங்கைமாரே |
| தேடியிந்தசேதிகூறத் | தாயுந்தந்தையு-மனந் |
| தேறியேபிழைப்பதேது | தங்கைமாரே |
| தங்காமலேயோடிச்சொல்வோம் | அக்கமாரே-நம்மேல் |
| தப்பிதங்கள்நேராவண்ணந் | தங்கைமாரே |
| கெங்கையம்மன்வீழ்ந்தசேதி | அக்கமாரே-பதியிற் |
| கடுகியேபோய்ச்சொல்வம் | தங்கைமாரே |

இதுவுமது-விருத்தம்.

மிக்கதோரன்புள்ள [illegible] கேளாய்
அக்கரையோரம் [illegible] யாவருமாடும்போது
பக்தவமுடையவுந்தன் பாலகிகெங்கையம்மாள்
தக்கவேஜலத்தில்வீழ்ந்தாள் தயங்கியேவந்தோமம்மா.

வசனம்.

கேளு மம்மா வேதநாயகியே பெறுதற்கரிய நின்றுபுத்திரியுடன் நாங்களெல்லாருங்கூடிக்கொண்டு நதிக்கரையிடஞ்சென்று விளையாடிக்கொண்டிருக்கையில் [illegible] ஆசையலாவண்யபக்குவத்தோடேகூடியிருக்கும் தெய்வகையம்மனானவள் [illegible] திடீரென மூழ்கியதைக்கண்டு நாங்களுமிரங்கித்தேடியுங் காணமற்றதனால் வும்மிடஞ்சேதி சொல்லவந்தோமம்மா.

பெற்ற-விருத்தம்.

வரிசையாய்ப்பெண்கள்சொன்ன வாக்கியஞ்செவியில்வீழ
அரிஹரியென்றுகூறி யப்பிஞளைநைந்தாள்மார்பில்
வருகியேமனதுவாடி வோவெனக்கதறிவீழ்ந்து
பரிவுடன்மகளேயென்று பரதவித்தழுதினளே.

வசனம்.

அகோ தெப்படியென்றால் இந்தப்பிரகாரம் அசலாத்துப்பெண்கள் கூட்டமாய்க் கூடிவந்துரைத்த மொழியைக்கேட்ட வேதநாயகியம்மனானவள் அரிஹரியென்று செவியைப்பொத்தி வயிற்றிலுமார்பிலுமறைந்துகொண்டு பூமியிற்சாய்ந்து வென்றுந்தோன்றுதவளாய் கணவிடை மெழுகைப்போலுருகிக் கண்ணீர்தாரைதாரையாய்ப்பெருக வோவெனக்கதறிசகிக்கப்படாத துன்பத்தோடும் பரதவித்திருக்கும் விதங்காண்க.

---

வேதநாயகியம்மன்புலம்பல்-தரு-இ-ம-பீலாம்புரி

கண்ணிகள்.

ஐயோபாவித்தெய்வமே செய்யாதகுறைசெய்து
அரும்பாவியாகினேனே — என்மகளே
மெய்யானசேதிசொல்லக் கைகால்நடுக்குதையோ
வீணாகவாசைகொண்டே — னென்மகளே
மகளேயுந்தனைவேண்டி வெகுநாள்தவமிருந்தேன்
வாயில்மனோசாற்றினையோ — என்மகளே
ஜெகமெலாந்துதிசெய்யச் செல்வியுனைவளர்த்துச்
சிறுகுலையலாச்சே — யென்மகளே
எப்போதெந்தனைக்கண்டு செப்புவாயம்மாவென்றே
யிறந்தாயோயென்னைவிட்டே — என்மகளே
தப்பாதமொழியுள்ள வொப்பொருவரில்லாத
தங்கச்சிரோன்மணியே — என்மகளே
பஞ்சரத்தினம்போலச் சஞ்சலந்தீர்க்க
பைங்கிளியேயென்செய்வே — னென்மகளே
வஞ்சகஞ்செய்ததெய்வம் னெஞ்சில்நினைத்ததுவே
வயற்றிலெரியுதையோ — என்மகளே



கட்டும்பட்டாடையின்ன — பொட்டும்பளபளென்ன,
கதிர்மணிபணி — அன்னவே
சிட்டிக்கொண்டஜடையும் — செங்கைக்கடகமாட
சிதளம்பெருகிய — போதுகள்வீசிட
பூதலத்தன்பர்கள் — பாதவமோங்கிட (அ)
வேதகன்னியர்கள் — போதநெருங்கிடவே
விளையாட — நடந்தாளே
வீதிவீதியிலுள்ள — மாதர்கள்நயம்பேச
விரியமாமலர் — சூடியபரிமளம்
வருகியபொன்னிற — வொளிசெய்யுருபி (அ)

தெய்வகையம்மன்சொல் - விருத்தம்.

நங்கைகளக்தமாரே சந்தோஷமாகக்கூடி
யெங்கையாகிலுமெல்லோரு மிச்சையின்படி நடந்தே
சிங்காரக்கொம்மிக்கொண்டான் சிலநேரமாடிப்பாடிப்
பொங்கமாய்மனைக்குவந்து போஜனம்செய்குவோமே.

வசனம்.

வாருங்கள் அக்கமார்களே தங்கைமார்களே நாமனைவருஞ் சந்தோஷமாகக்கூடிக்கொண்டு நமதுஇச்சையின்படி எங்காகிலுஞ் சவுக்கியமாயிருக்குமிடஞ்சேர்ந்து சிங்காரக்கொம்மிமுதலிய விளையாட்டுகளை சிலநேரமாடிப்பாடி மனக்களிப்போம் அவரவர்களாத்திற்சேர்ந்து போசனஞ்செய்து சுகித்திருப்போம் வாருங்களம்மமார்களே.

---

தெய்வகையம்மன் சொல்-தரு-இ-ம-பரஸ்-ஆதி

கண்ணிகள்.

என்னடியக்கமாரே யின்னந்தாமசமேண்டி
யெல்லோருங்கூடியிங்கே யிருந்துகொம்மியடிப்போம்
பொன்னனதங்கைமாரே [illegible] போடுங்கொம்மிகள்பார்ப்போம்
போகாமல்நின்றுயிங்கே [illegible] புகழ்ந்துகொம்மியடிப்போம்
பட்டாடையுரப் [illegible] காலி [illegible] டாடகக்களொலிக்க
பட்சமுடன்கை [illegible] பணிந்துகொம்மியடிப்போம்
விட்டாடைவ [illegible] பரிட
விதவிதமாய்ப்பாடி மிஞ்சிகொம்மியடிப்போம்
மாறுச்செல்வமளிக்கு மயிலேறும்பெருமானின்
மலரடியைத்துதித்தே மகிழ்ந்துகொம்மியடிப்போம்

தீராதவினையைத்தீர்க்குந் திருவேங்கடமுடையான்
சீரடியைத்துதித்தே சேர்ந்துகொம்மியடிப்போம்
ஆசையுடனமது வருமொளிநங்கெங்கை
யவளுக்கோர்பதம்பாடி யடிப்போமடிகொம்மி
யீசன்சடாடவியி லிருந்தாடுகின்றகெங்கை
யிணையடியைப்பரவி யிருந்துகொம்மியடிப்போம்,

இதுவுமது-விருத்தம்.

அந்தணர்குலத்திலோங்கு மழகுளதங்கைமாரே
வந்துநாம்நதியின்பக்கல் மனத்தினிலிச்சையான
விந்தைசேர்கொம்மித்தும்பி விளையாடியோய்ந்துபின்றே
சந்தோஷமாயெல்லோருஞ் ஜலத்தினிலாடுவோமே.

வசனம்.

வாருங்கள் மறையவர்குலத்திலோங்கும் அக்கமாரே தங்கைமாரே நா மியாவரும் நமதிச்சையின்படியே கங்கைக்கரையருகிற்சேர்ந்து விந்தைவி த்தைகளாகிய கொம்மிமுதலியவிளையாட்டுகளைச்செய்து வெப்சலித்து பின் றேம் இனிசந்தோஷமாய் ஜலத்திலிறங்கிவிளையாடுவோம் வாருங்களம்பு மார்களே.

இதுவுமது-தரு-இ-ம்-ரூபகம்.

கண்ணிகள்.

உத்தமிகாள்பத்தினிகா ளுயர்குலமாதேங்கள்
உள்ளாடையுடனிரில் வாருங்கடி
சத்தகண்டைச்சிலம்பொலிக்குந் தங்கைமார்களே நீங்கள்
சலியாமலலையோங்க கொம்மியடிப்போம்
ஆசையுள்ளபாசமான வம்புஜமேயடிநாம்
ஆரமாட்டத்திரமாகக் கொம்மியடிப்போம்
நேசமுடன்விசிக்கர நேத்தியுடனொமும்
நேராகக்கைதந்தே கொம்மியடிப்போம்
சஞ்சலமில்லாமலே சந்திரவதனிகளே
சம்பிரமுடன்மின்பமாக கொம்மியடிப்போம்
வஞ்சகமில்லாமலே வயங்குங்கன்னியர்களே
வரிசைக்கலையாமலே கொம்மியடிப்போம்
கங்கையின்மகிபாடிக் [illegible]
உங்கள்வினைகள்தீரக் கொம்மியடிங்கோள்
யெங்குமிப்படியாகப் பாருங்கடி நீங்கள்
யெங்களையென்னைக்குங் கோறுங்கு).



இதுவுமது-விருத்தம்.

என்னிடமகளேனையோ யெப்படி துணிந்திருப்பேன்
வுன்னிட வடிவுக்கொப்பா யுலகினிலொருவர்காணேன்
மன்னுமிவ்வுலகளித்த மாதாவென்றுனை பூசித்தேன்
அன்னையென்வாயில்மண்ணை யள்ளநீமறைந்திட்டாயோ,

வசனம்.

ஆ ஆ என துசெல்வமே என்னைவிட்டுநீ யெப்படிமறைந்தாய் ஐயோ கோடிசந்திர லாவண்யம்போன்ற உனது வதனத்திற்கிணையான பெண்க ள் எவ்வுலகினுங் கிடையாரே கடல்சூழ்ந்தயிவ்வுலகனைத்துக்குந் தாயாக வென்று உன்னையான் பணிந்துவந்த குறைதீர எனக்குச் செல்வியாகத் தோன்றியும் எனதுவாயில் மண்ணைப்போட்டு மறைந்தாயோ மகளே.

இதுவுமது-புலம்பல்-தரு-இ-ம்,

கண்ணிகள்.

ஐயோமகளே யெந்தன்மன தெப்படி துணிவே
னரும்பாவியாகினேன் ஓ-தெய்வமே
பொய்யாமுலகவாழ்வை மெய்யென்றுநம்பியுன்னை
பூசித்துவந்தனம்மா ஓ-தெய்வமே
கங்கைக்கரையிலுந்தன் காட்சியெனக்களித்தே
கணத்தில்மறைந்தாயோ ஓ-தெய்வமே
இங்கிதஞ்சேருனதுமழலைச்சொல்லமண்மீது
யென்றுநான்கேட்பேனம்மா ஓ-தெய்வமே
கோடிசந்திரபிம்பம்போற் குலவுமதிமுகத்தை
கொடும்பாவியென்றுகாண்பேன் ஓ-தெய்வமே
மெய்யழகினைக்கண்டால் மேதினிமயங்குமே
வினையேனினியென்செய்வேன் ஓ-தெய்வமே
உய்யவெனதுகுல முருவத்தைக்காட்டியிப்போ
வோடிமறைந்தனையோ ஓ-தெய்வமே
செய்யும்வகையறியேன் சிற்றிடையாயடியுன்
சிந்தைநைந்துமாண்டாயோ ஓ தெய்வமே

[illegible]ருத்தம்.

வேதநாயகியின்துக்கம் விப்பிரரெவருங்கண்டு
சீதமென்கங்கைநாடிச் செல்வியர்தனைகாணாது

பேதினிசெய்வோமென்று யேங்கியேமனைக்குவந்து
கோதிலாள்பாரில்வந்து கூறுவாளுண்மைதானே.

வசனம்.

அதேதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வேதாவபிரம்மன் புலம்புவதைக்கண்ட அன்னவள் மனைவியும் சிலபிராமணர்களுங்கூடிக் கங்கைக்குச்சென்று சீரிரங்கி யெங்குந்தேடியுங் காணாது யினியென்செய்வோமென்றுயேங்கி மனைக்குவந்து குற்றமற்றகோதையிடங்கூறுவார்.

வினாவிடை-தரு-இ-ம்

கண்ணிகள்.

| | |
|---|---|
| ஆசைக்கினியவளே | பெண்ணரசே-நாமு |
| மரும்பாவியாகிவிட்டோம் | பெண்ணரசே |
| மாசிலாத்தேவியரே | பெண்ணரசே-இனி |
| வாடியழுதாலுண்டோ | பெண்ணரசே |

விடை.

| | |
|---|---|
| வருந்திவிதிர்ப்பியேனெந்தன் | மணவாளா-இந்த |
| வகைக்கினியென்னசெய்வே | மணவாளா |
| தெருவில்விளையாடவந்தாள் | மணவாளா-செல்வி |
| தெரியேனொளித்தவிதம் | மணவாளா |

வினா.

| | |
|---|---|
| அரியாதபாலகியாள் | பெண்ணரசே-யொளித்து |
| தாரதிவார்மண்மீது | பெண்ணரசே |
| தெரியாமல்வேதைகொண்டாள் | பெண்ணரசே-இதுவுந் |
| தெய்வச்செயலென்றேகளிப்பாய் | பெண்ணரசே |

விடை.

| | |
|---|---|
| களித்தெப்படியிருப்பேன் | மணவாளா-எந்தன் |
| கண்ணாற்பிணத்தைக்காணாமல் | மணவாளா |
| ஒளித்தமகளினைச | மணவாளா-எந்தன் |
| உயிர்போனாலொழியுமையோ | மணவாளா |

| | |
|---|---|
| ஐயோயிதுவிதியோ | பெண்ணரசே-நமது |
| அருமைக்கிளிமகளை | பெண்ணரசே |
| ஒய்யாரமாய்வளர்த்தோம் | பெண்ணரசே-இனிமேல் |
| லொருக்காலுங்காண்பதுண்டோ | பெண்ணரசே |



விடை.

| | |
|---|---|
| காண்பதுண்டோவென்குறீர் | மணவாளா-அவளைக் |
| கட்டிக்கொடுக்கவிருந்தேன் | மணவாளா |
| வீண்பழியேற்றுக்கொண்டோம் | மணவாளா-இதுவும |
| வேதன்விதித்தமையோ | மணவாளா |

வினா.

| | |
|---|---|
| உத்தமிபோனவகை | பெண்ணரசே-நாமும் |
| மொருவகையுங்காண்கிலோம் | பெண்ணரசே |
| செத்தவர்வருவதுண்டோ | பெண்ணரசே-உந்தன் |
| சிந்தைகளித்திருப்பாய் | பெண்ணரசே |

விடை.

| | |
|---|---|
| சிந்தைகளித்திருப்பேனோ | மணவாளா-எந்தன் |
| சித்திரப்பதுமைக்காணாமல் | மணவாளா |
| இந்தஜலத்தில்வீழ்ந்தே | மணவாளா-நானும் |
| யிறப்பேனிதுவுண்மைகாண் | மணவாளா |

இறையவன்சொல்-விருத்தம்

இருவவும்பெண்ணேயிக்கதைதனைக்கேளாய
சேணுலகில்மருமகட்பால்யாமிதந்த
பேரோமோராக்கீர்கவந்து
மூற்றுமதைவித்தவளும்பொருளைச்சேர்த்தே
தாராளமாய்ச்சேர்க்கபணத்தைக்கொண்டு
சரியிலாபாடகஞ்செய்தகாவிற்பூண்டை
நீரோவொருமோரோகொலும்
சேர்ந்தகதைபோவெனக்குகிகழ்த்திறையே.

வசனம்.

கேளும்பெண்ணே பிராணநாயகியே ஒருதேசத்தில் செட்டிகாரியென்னும் ஓரிடைச்சியானவள் மூத்தியென்னும்தனது மருமகளிடத்தில் நாள்தோறும் ஒருபணம் அவளுக்கு பணத்திற்கு மோரை விலையிட்டுக்கொடுத்து விற்பனைசெய்துவரும்படியாக அனுப்பிவைக்கும்போது அவள் அப்பதிக்கு மேற்பாலாகத்தோன்றும் ஆற்றுக்குபுறமாய் விற்கப்போகின்றவள் அந்தமோரிலே இடைக்கிடை ஜலத்தைக்கலந்துக்கொண்டு விற்பனைசெய்துவந்தபணத்தில் பாதியை மாமியார்வசத்திற்கொடுத்து மற்றபாதிபணத்தை சிலவுசெய்யாமல் பத்திரப்படுத்திவைத்து முப்பது ரூபாய்

சேர்ந்தவுடனே அதைமாமியாரிடத்திற்கொடுத்து மோரிற்றண்ணீர்கலந் தசங்கதியைச்சொல்ல மாமிகளித்துத் தன்னிடங்கொடுத்தருபாய் முப்ப துக்கும் பாடகஞ்செய்து மருமகளுக்கு காலுக்குத்தரிக்க அவள் அப்பாட கத்தோடும் மோர்விற்பனைசெய்து வருங்காலத்தில் ஓர்நாள் ஆற்றில்ஜலம் பூரணமாய்ப்போகும்போது இவளணிந்திருக்கும் பாடகத்தில் ஒருகால் பாடகம் விடுபட்டு ஆற்றில்நழுவிவிட்டமையினாலதைக் கரையேறியபின் கண்டு விசனமுற்றவளாய் ஒற்றைபாடகத்தோடும் மாமியிடம்வந்து சொ ல்ல அதற்கவள் அடி மருமகளே மோரோடேவர்தது காலோடேவந்து நீரோடேவந்தது ஆரோடேபோயிற்று அதற்கு நீ அழுவாமோவென்று தேற்றினளாதலால் அதுபோல் நீராலேவந்தபிள்ளை நீரோடுகலந்துவிட் டதென்று மனந்தணிவுகொண்டு ஸ்நானஞ்செய்துவிடுவாய எனதுஉயி ர்த்துணைபோன்ற பிராணநாயகியே.

—⁂—

கந்தார்த்தம்.

வேதனையுற்றுவாடும் வேதநாயகியைத்தேற்றி,
மாதர்களபிடித்துக்கொண்டு வந்துமேஜலத்தில்மூழ்கி
ஆதகங்கழிக்கூந்தல் தூக்கிபின்னொறிந்துகோக்கக்.

(காதலாய்கடுஜலத்தில்)

கங்கையுநின்றாள் - மகளைத்தாயும் - பொக்கமாய்க்கண்டாள்
எங்கெங்குந்துதித்திட அம்கம்பளபளென்ன
திங்கண்முகமிலங்கத் தங்கச்சிரோன்மணி (கங்கையுநின்றாள்)

வேதநாயகிசொல்-விருத்தம்.

வேதமொழிசெவிடனுக்கு வுணர்ந்தாப்போலும்
விழியில்லான்கண்டவியன் மணியைப்போலும்
ஆதவனைமுகிலினங்க ளடர்ந்தாப்போலும்
அக்கினியைவெண்ணீரான் மறைத்தாற்போலும்,
மாதவமேசெல்வியதாய் வந்தவுந்தன்
மகிமைதனையாரறிவார் மண்மேலோங்கும்
பாதகனையாதரித்துக் காப்பாயுந்தன்
பாதாரவிந்தமலர் போற்றிபோற்றி.

வசனம்.

ஆ ஆ உலகின்கண் ஐங்குஞ்செவிடர்களினதுசெவியில் வேதவாக்கி யங்களேபோதித்தவைபோலும், பிறவிக்குருடனாகயிருப்பவனுக்குஉயர்ந்த



த்தினங்களிருடத்தவைபோலும், சூரியனை அடர்ந்துமறைந்தமேகக்கூட் டங்களைப்போலும் நீர்பூத்தநெருப்பைப்போலும், மாதவமே யோர்வடி வாகிச்செல்வியைப்போல்வந்தவுனதுமகிமைஇவ்வுலகில்யாவரும் மாந்தர்க ளாலறியக்கூடுமோ ஆசலாற்பாதகராகியயெங்களை யாட்கொண்டருமபடி யாய் உனதுஉபயபாதாம்புயங்களுக்குவந்தனம் வந்தனமம்மா

—(⁎)—

இருவுமது - தரு - இம்

பல்லவி.

தஞ்சமுமதுபாத - மஞ்சவிசெய்தனம்
தாயேசரணமமா - தஞ்ச

அநுபல்லவி

அஞ்சகமேயடியரிருவினைகளகல
வருட்சுரப்பாயோதுங் காவகாலாந்தகி

சரணங்கள்

நீலிகங்காதரி நிறைந்தபஞ்சாக்ஷரி
நிகிலபுவனி நீயே
குவிபாஞ்சோதி மகவையாகிவந்த
கந்தரியுனையன்றி வேறில்லையாதலால் (தஞ்ச)
உன்னைத்துதிப்பவர்க்கு வோதும்வினைகளேது
வோர்நமோ நாராயணி
பொன்னேர்கரகபாலி புகலுஞ்சடாக்ஷரி
புத்திகரகமலம் பொருந்திநிற்குஞ்செந்தேனே (தஞ்ச)
என்னையுமுருசெய்தா யுன்னைத்தேடியெவ்வோரும்
யிரங்கிடுமை சுகுணசுரி
தன்னேரிலாப்பொருளா யோக்குசதயாபரியே
சற்காற்பதுன்பாரம் பார்மிசையம்மணி (தஞ்ச)

கெங்கையம்மன்-வேதநாயகிக்குச்சொல்லும்

அகவல்

தஞ்சமென்றுரைத்த தங்கையர்கேளே
அஞ்சவேவேண்டா மடியவரவா
நியம்புவேன்கேளு யிப்புவியதாயம்
பொய்யொருதும் புகலொணுக்களவும்
மிஞ்சியிருப்பதான் மீதலமதனில்
காயிகளாலே காலனுக்கதிக

வேலைகள்பிஞ்சி விதியுடனுறைக்க
பாலைக்கிழத்தியின் பண்பனுமீசன்
தன்னுடனுவாக்கச் சதிர்கொண்டமனோன்
என்னிடமுனைந்த வெழிலுமாகொண்டே
கங்கைகாணுங்கள் கவலையைத்தீர்க்க
பொங்கமாய்வந்தேன் புத்திரியாகி
இனியிப்பூமியி வெங்குமிறைந்தே
தனியாய்வகைகட்டி தண்டித்து துஷ்டனை
அன்பரைக்காத்து வடையவேசொற்கம்
இன்பமாய்த்தக்துயேமனுமகளிக்கச்
செய்திடவந்த சேதியிதம்மா
தெய்வமாயென்னைச் சிந்தித்துவந்தால்
ஒவ்வொருகாவ முங்கள்முன்வருவேன்
செவ்வையாயிங்கள் சிறப்புடன்வாழ்வீர்
கற்கதியுடைய நல்வரந்தருவேன்
மைக்குழல்தாயே மனைக்கேகுவாயே

பொது-விருத்தம்

வரம்பெற்றதங்கைதாயு மனாடிப்போற்றிசெய்தே
வரம்பெற்றுமனையகாடி யுளமகிழ்ந்திருக்கும்போது
திறம்பெற்றுக்கொளவேண்டித் திருமலைவேங்கடேசன்
திறம்பெற்றசரணமுன்னி நிகரிலாத்தபஞ்செய்வானே

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கெங்கையம்மனிடத்தில் பெறுதற்கரியவரங்களைப்பெற்ற வேதநாயகியம்மனும் அவர்மணாளனும் அப்பூவையின்பாதகமலங்களுக்கு அனேகவந்தனஞ்செய்து மனமகிழ்ச்சியோடுந்தங்களுடைய இல்லாத்திற்சேர்ந்து வாழ்ந்துவருங்காலையில் ஜகதீஸ்வரியாகிய கங்கைதனக்குசுந்திரம் பெற்றுக்கொள்ளவேண்டி வடவேங்கடமென்னுந்திருப்பதிமலையில் அஷ்டாக்ஷரப் பொருளாய்வழங்கும் வேங்கடாசலபதியினது சேர்ந்தாமரைக்கமலையபோன்ற இணையடிகளைமனத்திலிருத்தித் தபஞ்செய்கின்றவிதங்காண்க.

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்

| | |
|---|---|
| வேதமுடிவில்விளங்கியசோதியே | ஆதிமூலா |
| பண்ணவர்களுக்கிருகண்ணாய்விளங்கிய | ஆதிமூலா |
| ஆதிமூலமென்றவானைக்கருள்தந்த | ஆதிமூலா |
| அடிமுடிகளில்லனாதியாகின்ற | ஆதிமூலா |

இராக்கும்படியின்றசெகமெலாஞ்சிருட்டிக்கஆதிமூலா
இந்தநிகொள்ளீட்டவிதியையுந்தீயி வரச்செய்தஆதிமூலா



மட்டற்றஜெனனங்கள் மண்மீதுதிக்கச்செய்தாய்ஆதிமூலா

| | |
|---|---|
| மன்மகாராஜனைமைந்தனாகத்தந்த | ஆதிமூலா |
| பாபவிமோசனஜீவனந்தன்ழந்திட | ஆதிமூலா |
| உந்தன்பதத்திலெனைத் தந்தபராபரா | ஆதிமூலா |
| தேவரெவருங்காணுத் திருவடிகாண்கா ண | ஆதிமூலா |
| திருமலைகளைவிட்டுவருவாய்மனமிரங்கி | ஆதிமூலா |
| ஈரடியாலிந்த வுலகத்தையளந்தவா | ஆதிமூலா |
| பக்ஷமாகஜெகரக்ஷகனேவருவாய் | ஆதிமூலா |
| பூதகிபாலுண்டநாதனேயிவ்வேளை | ஆதிமூலா |
| சிறியாள்செய்தவத்திற்குச்சீதாவருட்செய்யும் | ஆதிமூலா |

இதுவுமது-விருத்தம்

சங்குசக்காக்கோதண்ட கெண்டவாளேந்தித்
தனிக்கெருடன்மீதேறிமுனிவர்சூழச்
சிங்காரஞ்சேரட்ட மின்கள்சாதா
செகந்துதிக்கும்காசாம்பூவண்ணனேயென்று
பங்காளாபாரளந்த பாதங்காணப்
பார்வதியாள்சோதரனே பட்சமாக
மங்காமற்காத்தருளு மாலேயுந்தன்
மலரடிக்குவெகுகோடி சரணம்சாமி

இதுவுமது-விருத்தம்

| | |
|---|---|
| ஆதியாயனாதியாயகிலலோகாத | னே |
| வேதியன்றனையளித்த வெண்ணெயுண்டவாம | னே |
| கோதிலாதமதிகுலத்துக் குந்திமைந்தன்வளவ | னே |
| சோதியாகவென்முன்வந்து தோன்றுவேங்கடேச | னே |

பொது-வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரந் தபஞ்செய்துவரும்படியாகிய கெங்காபவானியின்தபத்திற்கிரங்கி ஸ்ரீவைகுந்தனாதனாகவும் அஷ்டாக்ஷரப்பொருளாகவும் அழகியதிருவேங்கடாசலபதியாகவு மிலங்குஞ் ஜகதீசன் வருகிறவிதங்காண்க

இதுவுமது-விருத்தம்

அருமறைமுனிவரோத வஷ்டலட்சுமிகள்சூழத்
திருவாழிசங்கம்வாளுத தெண்டுடன்கிலையுமேந்தித்
கருடவாகனமீதேறிக் கங்கையுமனங்களிக்கத்
திருமலைவேங்கடேச தேவனுமருகின்றாரே

இருவுமது-தரு-இராகம்.

கண்ணிகள்.

சிங்காரகெருடனேறித் திருமலைவெங்கடேச ன்
கங்கையம்மன்மகிழ்ந்திடவே தேவாதிதேவ ன்
கண்ணனிதோவந்துதோன்றினு ன்

ரத்தினமகுடமின்ன நங்கையர்கவரிவீ சு
பத்தர்கள்பாபவிமோசன தேவாதிதேவ ன்
பாரளந்தோன்வந்துதோன்றினு ன்

ஆழிதண்டஞ்சங்கம்வாளமழுதுலுஞ்சிலையுமேந் தி
வாழிவாழியென்றோதத்தேவர்கள்தேவாதிதேவ ன்
மங்களமாய்வந்துதோன்றினு ன்

திருப்பதிகிரிவாழுந் திருநற்ரத்தினபூப ன்
ஸ்ருப்பமாய்ப்பணியுகேசவன்தேவாதிதேவ ன்
வேதநாதன்வந்து தோன்றினு ன்

கெங்கையம்மன்சொல்-சீசபதிபம்

சேர்முகுந்தனே தேவாதிதேவனே
செழுமலர்த்தாட்கடியவள்சரணமிதுவே
மாதலாவுலகோரடிக்குண்ணளந்தவா
மலரடிக்கடியவள் கோடிசரணம்
யாதவாசீமூன்பு சிலைதனைப்பெண்ணாக்கு
மரவிந்தவடிகளுக்-கையசரணம்
வேதனைத்தந்தவா மெய்யர்க்குமெய்யனே
விப்பிரர்கள்பூஜிதாவேணசரணம்
ஏதுகுறையேதுபிழைசெய்தபோதும்
இதெல்லாம்பொருத்தருளுந்தேவதேவா
காதலாய்முன்வந்த கருணைமுகிலே
பாதகமிவேறில்லைபகருவீரே

கெங்கைக்கு-வேங்கடேசப்பெருமான்சொல்-விருத்தம்

பிரியாமலென்பதத்தி லிருக்கக்கெங்கை
பிரம்மகுலபுத்திரியா யுருவங்கொண்டே
பரிவாகவென்பதத்தை நாடிநீயும்



பட்சமுடன்தபமிழைக்க வன்புபூண்டன்
னெறிகின்றகீமகிழக் காட்சிதந்தேன்
நீவேண்டித்தவம்புரிந்த நிலைதானென்ன
சரியாகவேண்டியதோர் வரத்தைக்கேட்டால்
தப்பாமற்றந்திடுவேன் வாழிநீயே.

வசனம்.

கேளுமம்மா கங்கையே நீ சதாகாலமும் என்னுடைய பாதகமலமி ன்றும் நீங்காதவளாதலால் இப்போது பூமியின்கண் வேதகுலப் பெண் ணுக்ஜனித்து என்னைநோக்கித்தபஞ்செய்த காரணமியாது அதை நீ அறி விப்பாயாகில் அவ்வாறே வரமளிப்பேனம்மா கங்கையே.

கெங்கையம்மன் சொல்-விருத்தம்.

அச்சுதனே நீரறியா தொலிலுண்டோ
வரமுடையகபாடனைக் கொண்டுவந்தேன்
நச்சரவந்தேர்ன்மகிழும் நாதாகேண்மோ
நானுமிந்தவுலகமெலாஞ் சஞ்சரித்தே
அச்சமிற்றேவனதாபிணிகளெல்லா
மடங்கியெந்தன்சொற்படிக்கு நடக்குமாகில்
கொச்சையுள்ளமானிடர்க ளனைவரு
கொண்டவர்களெனைத்துதிக்க வருட்செய்வீரே.

வசனம்.

கேளும் வெங்கடாசலபதியாகிய பகவானே அகிலசராசரங்களுக்கு ம் நீரறியாதசெய்கையுமுண்டோ, பேதையாகியயான் ஸ்ரீகைலாசபதியா கிய பரமசிவன்கட்டளையின்படி இவ்வுருவங்கொண்டு பூலோகத்திலுள் ள துர்த்தேவதைகளையும் வல்வினைகளையும் எனதுவசமாக்கி அக்ரமமி குந்த துஷ்டர்களைக்கடிந்தும் இஷ்டர்களைக்காத்தும் எமனுடையதொழிலை மி குந்தவொட்டாமலடக்கியும் இப்புவனமுழுதும் என்னைக் கொண்டாடும்ப டிவேண்டிவந்தால் அதுபோல் கடாக்ஷம்வைத்தருள்வேண்டும் தேவனே.

வேங்கடாசலபதிசொல்-தரு-இராகம்.

விருத்தங்கண்ணிகள்.

தடையில்லாவரந்தந்தேன் கங்கையே-நீயும்
சதுர்மறைசவேண்டாந் தங்கையே
கொடியவினைகளொழியும்படியாசெலுந்துநீக்கி
நிலைகாட்டியுன்கொடி யுலகெங்குமிருந்திடத் (தடை)

விரு.

நல்வரம்பெற்றேனே மாதவா-இனி
வில்லியிலிருந்திடுவாய்யாதவா

சா

செல்வமிகுத்திடுந் திரவெலருமஞ்சக்
கல்வியுளோரென்று கழலுக்கடிமைசெய்ய (நல்ல)

விடை.

வெற்றிகொள்வாருமுண்டோ வந்தனே-உனக்கு
மெத்தவுந்தந்தேனுனே வின்சிந்தனே
நித்தமுமுன்பாதம் நிவகாமர்பூசித்து
பத்திசெய்யுமன்பர் பரகதிக்கிடமாக (வெற்றி)

வினா.

கண்டுயெதிர்த்தோரை வெல்லவே-இந்த
மண்டலத்தினில்கீர்த்தி செல்லவே
தண்டொடுவேற்சூலந் தநுர்வாள்கேடயமுத
லுண்டானவாயுத முகந்துதந்தருள்வீரே (கண்டு)

விடை.

சூலம்வேல்வில்லம்புக் கடுகள் நல்ல
காலதண்ட முஞ்சிக்கத் தோடுகள்
மேலானவாகன விருதுகள்தந்தேனே
காலகாலமுமிக்த காசினிபுகழவே (சூலம்)

வினா.

மூர்த்திதுணையாக வந்திட-எந்தன்
சிந்தைத்தேறவரந் தந்திட
வந்தனருளில்லாம லுலகத்திலொருவரை
யெந்தவிதத்திற்செல்லு மேகமூர்த்திதேவர் (மூர்த்தி)

விடை.

போர்த்தொழிற்செயவுன்று லாகுமோ-எந்தன்
வார்த்தைவிணுகவே போகுமோ
தீர்த்துடன்புவியிற் செப்புப்பிணியைத்துணடி
நேரத்திலஞ்சாமலிவெற்றிபூணுவாய் (போர்த்)

வினா.

சக்கரமேந்திய சுகபனே-அன்பு
மிக்கயிருக்கவேண்டுந் துய்யனே
பக்குவமாயுந்தன் பாதந்துதிசெய்ய
மிக்கவினைகளும் விட்டுப்பறக்கவே (சக்கர)

பொது விருத்தம்.

ஆயனும்வரப்பாலிக்க வம்மனுக்கிச்சையாகி
மாயவன்துணையைக்கொண்டு வந்துசஞ்சரிக்கும்போது
வோயாமல்வினைகளோட வுக்ரகோபங்கள்கொண்டே
தாயவச்சிவனுல்வந்த சுரங்களையறிகுவீரோ.



வசனம்.

அதோசெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கெங்கையம்மனுக்கு ஸ்ரீ ஸப்பதியாகிய வேங்கடாசலபதி வரம் பாலித்த பான்மையைக்கொண்டு அன்னவர்துணையாற்றனியளாய் வுலகிற்சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் பரிசுத்தபரமசிவனச்செய்யுமையறிந்து தனது சடாடவியினின்றுங் கெங்கைநீங்கியதன்மையாற் கடுங்கோபங்கொள்ள வங்கோபக்கனலானது சுரவியாதியாகி உலகவாசிகளைப் பொருதுகின்றவிதங்காண்க.

இதுவுமது-விருத்தம்.

கருக்குடன்விழியைக்காட்டிக் கால்மூன்றுந்திரிகண்டங்கள்
பெருக்கமுமொட்டைகாக்குட பிரிப்படவருங்கரத்தில்
நெருக்கியசூலப்வேலும் கிரிலாத்தநுர்வாளேந்தி
கருக்குடன்கன்னகமுன்னர் சுரமவருவனகனையப்பாரீர்.

சுரமேவருகின்ற-தரு-இ-ம்

பல்லவி.

சுரமிந்தவுலகத்தில் வுரமுந்திரமுங்கொண்டே
பரவும்பான்மையைப் பாருங்க ள்

அநுபல்லவி.

பரமனருளாலிந்தப் பாரெங்கணும்பரவிப்
பாலம்வேறபிண்டி சூலவாளியு ங்
கோலமார்தண்ட மேலுமின்ன வே (சுரம்)

சரணங்கள்.

திரித்திரிகண்டங்காட்டி விழிக்கொண்டதநுர்பூட்டி
சிறந்தகோரமேட்டி விரிந்தநாவைக்காட்டி
அரிகண்டம்படுமாந்தர் நெரிகொண்டேசலித்திட
ஆறுமிஞ்சவே பேருமிஞ்சி ய
கோரமாகவே வீரியத்துட ன் (சுரம்)

நடுக்கங்கொள்ளவேபாரு யெடுக்குதகழுங்கீர்த்தி
நாடெல்லாம்பரவிய தாடாண்மையோபூர்த்தி
துடுக்குள்ளமலிதனை யடக்கத்தீரமுள்ள
சுத்தவீரியம் பெற்றுகாமதி ல்
சுத்திகேடயம் பற்றிவீசி யே (சுரம்)

காட்டித்தன்பகிமையை வாட்டியேயுலகோரைத்
தருக்காய்விழித்துமீசை முறுக்கியேதோள்தட்டி
நாட்டங்கொண்டுவெந்துயர் மேட்டிமையாகவே,
நாடியெங்களைத் தேடிவந்தவ ர்,
வோடிப்போகவே ஜாடிவேனெ ன (சுரம்)

சுரநோய்-கெங்கையம்மனுக்குச்சொல் விருத்தம்.

அண்டொருரைக்காலமெல்லா மகிலத்திற்சஞ்சரித்தேன்,
தண்டித்துவீரங்கூறிச் சவுரியஞ்செலுத்தவந்தாய்
கண்டித்துவிட்டேயென்றன் கையினுலாகாதுண்டோ,
துண்டித்துவட்டவெவந்த சூரத்தனத்தையுரிகுவாயே,

வசனம்.

ஆ ஆ பளாபளா யான் பரமசிவ னுன்னையினலே அகிலமெண்டி-சையும் எனதுவீரியஞ்செலுத்தி வெகுநாளாய் சஞ்சரித்துவர இப்போது நூதனமாகவெண்டித்துச் சவுரியஞ்செலுத்தவந்த நீயாருன்னைக்கண்டிக்கவும் தெண்டிக்கவும் எனக்குப் பராக்ரமமுண்டாதலால் யெதிர்த்துவாருவ கன்னிகையே.

சுரநோய்க்கும்-கங்கையம்மனுக்கும்-தர்க்கம்

வினவிடைத்-தரு-இ-ம்-உசேனி-தாளம்-ரூபகம்.

கன்னிகள்.

மறைதலகங்கையம்மனை-ர-அடா-சைவசுரமே
மகிழ்ந்துவீரம்புகழ்ந்துபேசுராய-அடா-சைவசுரமே - மகி

விடை.

பேசும்வீரம்பின்புதெரியுமே ஓ-கங்கையாளே
பேதையேதுக்குவாதநேருமே ஓ கங்கையாளே - பேதை

வினு.

வாதைப்படவும்வேண்டாங்களிதுமே-ஓ சைவசுரமே
வந்துபணிவாயெந்தன்பாதமே-ஓ-சைவசுரமே - வந்து

விடை.

பாதம்பணிவாயென்றவுந்தன்-ஓ-கங்கையாளே
பதைக்கவதைக்கப்பாணமெடுத்தனே-ஓ கங்கையாளே - பதை

வினு.

எடுத்தவில்லையத்தடுத்தேன்பாரடா-ஓ-சைவசுரமே
ஏண்டாய்வீணுய்மாண்டுபோகிறாய் ஓ-சைவசுரமே - ஏண்டா

விடை.

மாண்டுபோகவந்தேயெதிர்த்தனே-ஓ-கங்கையாளே
மாருச்சுரங்கள்மீறவிடுத்தனே ஓ-கங்கையாளே - மாரு



வினு.

மீறிமீறிவருகுஞ்சுரங்களை அடாசைவசுரமே
வெட்டியெறிவேனட்டியேதடா அடாசைவசுரமே-வெட்டி

விடை.

அட்டியில்லாமலேவிட்டசரங்களை ஓகங்கையாளே
அஞ்சிபோட்டுவெறிஞ்சியடிக்கிறேன் ஓகங்கையாளே-அஞ்சி

கங்கையம்மன்சொல்-விருத்தம்

அடிக்கிறேனென்றுவீணு யாண்மைகள்மிகவுங்கூறிப்
படிக்குருய்க்கற்றதெல்லாம் படிக்கிலென்விவ்வினைத்து
கொடிக்குறுன்றலையுங்கையும் நொறுக்கிப்பேசிதறியோடப்
பொடிக்குறேனிதோமுன்பாகப் பூட்டிமேனன்பாணந்தானே,

வசனம்.

அடாசைவசுரமே-அடிக்கிறேனென்று நீவீணுய்க்கற்ற வித்தைகளெல்லாம்வாயில்வந்தபடி பிரற்றுவதால் என்னபிரயோசனமாம் இதோ பார் ஓர்நிமையப்பொழுதில் வில்வளைத்து யுனதுசிரமுங் கரங்களுஞ் சிதறிப்போகும்படியாய் கணையைத்தொடுக்கின்றேன் பாரடாசைவசுரமே

சைவசுரத்திற்குங் கங்கையம்மனுக்கும்-தர்க்கம் தரு-இ-ம்.

வினு-விடைக்-கன்னிகள்

உக்ரமுகபாணத்தாலேமிக்கவுந்தன்பாணந்தன்னை
வெட்டியெநமனுக்கின்றுகாட்டுவேன்
திக்ககனிறைந்திடவே யக்கினிச்சரங்கடன்னைத்
தீட்டியேதநுவிற்பூட்டி மீட்டுறேனுன்றனைக்கொல்ல உக்ர

விடை

கொல்லவந்த தனுந்தனையும் கல்லதுவல்லதாகட்டுங்
கோடானகோடிசரங்கள்-தாக்குவேனிதுவன்றியுந்
தொல்லுலகமுழுமையும வல்லமைசெலுத்தவேண்டித்
தோருமற்ஜெயங்கொண்டே சொற்கூற்றனுலகேற்றிடவே கொல்

வினு

விட்டசரமதுவல்லால் மட்டிலாச்சரந்தொடுத்தே
மீறிவந்துதாக்காமலே ஜாடினேன்
அட்டியில்லாதுன்றனையும் வெட்டிநாயினரிந்திடவே
ஆமோகமாகப்பாணந்தன்னைத்தூண்டுறேன்பாரடாயிப்போ வி

விடை

என்னிடாருக்குவங்கள் தன்னை நீயெதிர்த்திடாமல்
யேதடாவீரியமெத்தப்பேசுறாய்
மின்னியசரங்களாலே பின்னமாகச்செய்வேன்
வெற்றிமொழிமெத்தப்பேசி வீசுறாய்விதிமாண்டதோ என்

சைவசுரஞ்சொல்லுங்-கந்தார்த்தம்

கண்டஞ்சியுலகோரே நுங் காரியமறியவே நான்
பெண்டஞ்சவீரம்பேசா பெலத்தினைப்பார்க்கவேண்டித்
தண்டந்தோமரமும்வேலும் சக்கரம்வில்வாளேந்தித்

துண்டந்துண்டங்களாகத்

துண்டிப்பேன்பாராய்-சரங்களாலே கண்டிப்பேன்பாராய்
துண்டந்துண்டமாகவே-மண்டைசிதறவே
கொண்டுதோமரத்தாலே நின்றுநான்ஜாடியே (துண்டி)

கங்கையம்மன்சொல்-கந்தார்த்தம்

உற்றதுசொல்வேன்கேளு-வுன்னிடவலுவைக்காண
யித்தனைநேரமாக-விருஞ்சினமீமெறுட்டாது
பத்தியைக்கண்டறிந்தேன்-பதைக்கின்றாய்மிகவுமீறிக்

வெற்றிகள்பெறுவேயுக்ர

வீரியங்கொண்டேன்-வலுமைபேசும் காரியங்கொண்டேன்
மீறிவுகிரமும்-பிரப்பிரியெழ
வீரியகணைகளை-பாரிபோறசொரிய (வீரியங்)

சைவசுரஞ்சொல்-கந்தார்த்தம்.

ஒப்பில்லாத்தாயேபோற்றி-யுலகமாதாவுநீயே
யெப்படியிறைஞ்சுவேனம்மா யென்னைநீவதைக்கவேண்டாம்
செப்பியமறைகுலத்துச் செல்வியென்றுனையெதிர்த்தேன்

தப்பிதந்தனைப்பொறுத்து

தாயேநீகாரும்-உனக்குரிய-மாய்கைகளையச்கூறும்
தாயேயென்னிடகாயமுன்னதே
வாயினால்சுரஞ்சேயனக்கருள்-தாயேநீகாரும்

கங்கையம்மன்சொல்-கந்தார்த்தம்.

இலகியகயிலைவாழு மீசனார்சடையிலோங்கும்
பெலமுளகங்கைநானே பிராமணக்கன்னியாகி
யுலகினிலிருக்குந்தெய்வ முங்களைவசப்படுத்தக்

கலகஞ்செய்துலகில்மாய்கை

காட்டிடுவேனே-எனதுபுகழ் நாட்டிடுவேனே
காட்டி துஷ்டரை-வாட்டியன்பரை
காட்டிலன்புகழ்-பூட்டவந்தேன் காட்டிடுவேனே

கெங்கையம்மன்சொல்-கொச்சகம்

இன்பம்பெறும்படியா யென்னிடத்தில்நீயிருந்து
துன்பந்தருந்தகாமே சொற்படிக்குக்கேட்டபோ



சுரநோய்சொல்-கொச்சகம்

அன்பாருமென்தாயே யாரறிவாருன்மகிமை
தெம்பாயுன்சொற்படிக்கே சேவகமுஞ்செய்திருப்பேன்

பொதுவசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்ரகாரம்-திருப்பதிமலையி லெழுந்தருளியிருக்கும் வேங்கடாசலபதியினது அருள்பெற்றிலங்குங்கெங்கையம்மனவள் தன்னைப் பற்றவந்த சைவசுரத்தையெதிர்த்து வில் வேல் வாள் முதலிய ஆயுதங்களாற்போர்புரிந்து பின்னர்தன்தமகிமையை யெடுத்துக்காட்டியச்சுரத்தைத் தனதுகைவசப்படுத்திக்கொண்டபின்னர் விஷ்ணுசுரமென்னும் வர்தசுரம் வருகிறவிதங்காண்க.

இதுவுமது-விருத்தம்

மூக்காலுந்திரிகண்டங்கள் மூப்பிறைதந்தமோங்க
யெக்காலுமுலகமஞ்ச வீரிருகரங்களோடு
திக்கோரும்திசயிக்கச் சேலையொட்டியாணமிட்டே
சொக்கதவிழிகள்காட்டிச் சுரம்வருந்தன்மைபாரீர்

விஷ்ணுசுரம்வருகின்ற-தரு-இ-ம்.

கொண்டிச்சிந்து.

சுவாமிதேர்வந்ததுபார்-விஷ்ணு
சோதிமதிபோலுந்தந்தம் மாதர்வடிவாய்
கரமதிலாயுதங்கள்-தாங்கியே
கண்டவர்கள்கிடவே-கொண்டமிடிபோல்
அதட்டியேபொறிபறக்க-மூன்றுகால்
ஆறுகரமூன்றுசிரமீறிவடிவாய்
பதட்டமாயதட்டைக்கவ்வி-யாக்ரமித்துப்
பன்னுக்கடற்றிரைபோல நாக்குநீட்டி
சேலைச்சரிகைமின்னவே கெக்கலிகொட்டி
சித்திரப்பலபணிகள் மூற்றுமிலங்க
காலிற்சிலம்பொலிக்கவே-வீசிநடந்து
கண்ணைப்புரட்டிக்காட்டி-விண்ணவரஞ்ச
ஆரடிமிரட்டவந்தவள் உலகந்தன்னில்
ஆதிமாலருளால்வந்த வர்தசுரம்நான்
பாரடியென்னிட வீரியம்-ஒருநொடிக்குள்
பற்றியுன்னைத்தத்தளிக்கவைத்திடவந்தேன்- தனனுங்- தனதனனு

இதுவுமது-விருத்தம்

வையகமெல்லாமஞ்சும் வைணவசுரமென்றாலே
பொய்க்கபடங்கொண்டென்னைப் பிடிக்கவந்தாயன்றோ

மெய்யகத்திறமுங்கொண்டு விடுவேனைவிளம்பிப்போது
செய்யவென்மாயன்பாதஞ் சிந்தையிற்சிந்திப்பேனே

வசனம்

ஆரடிபொய்வேடங்கொண்டு என்னை நீபிடிக்கவந்தாயன்றோ ஆ-ஆ-வைணவசுரமென்றால் வையகமெல்லாருக்கு மென்பதறியாயோ- இதோ வுன்னை எதிர்க்கின்றேன்பாரடி

பொது-வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கெங்கையம்மனவள் தன்னைவந்தெதிர்ந்த வைணவசுரமென்னும் வாதசுரத்தைக்கண்டு கோபங்கொண்டு வின்வுகின்றவிதங்காண்க,

கெங்கையம்மனுக்கும்-வைணசுரத்திற்கும்-தர்க்கம்-தரு

வினு-விடைக் கண்ணிகள்

ஏதடிச்சுரியஞ்சுரமே என்னை
எதிர்த்தாலறிகிறேனன்றிற மே
சூதடிநீமெத்தச்சொல்லும் வசனமெல்லா ம்
சுரமாகவந்தகாரியமறிவேன டி- ஏதடி

விடை

ஆரடிநீயிங்கேவந்தாய் என்னை
யதட்டியதட்டிமொழிந்தா ய
கூறடியுன்னிட ஒருமபெருமறிய க்
கொஞ்சத்திலவிடுவேனோ நெஞ்சத்திலறிந்துவா ய் ஆரடி

வினு

மறைகுலந்தனில்வந்தகங்கை யானும்
வந்தேனேயுனைத்தேடியிங் கே
தரைபுகழ்கீர்த்தியுஞ்சவுரியந்தெரியாம ல்
தாணடிக்குதிக்கலாமோ மூன்றுகாலாள்களு ம் மறை

விடை

கங்கையேயுனக்கென்னதீரம் என்னைக்
கடிந்திடச்செல்லுமோவீர ம்
மங்கையேயெதிர்த்தென்னை மடிந்திடக்கால மோ
மாட்டிச்சிலையதனிற் பூட்டுவேன்பாரைக க ள் கங்கை

வினு

வரிச்சிலைபெடுக்கிறேன்பாரு சர
மாரிசொரிந்திடுமின்னே ரு
அரிதாகிய வெகுவன்கிரம் வருகுது
அங்கமடைதரிலாட்ச் செங்குருதிக ளோட வரிச்



விடை

அடிப்பேனென்னும்வீரமேது வது
வறியாமற்செய்கிறாய்வா று
துடிப்புவசனமாமோ சூரதனைக்காண வே
துன்னுங்கணையினுலேபின்னப்படவிடுப்பே ன்— அடி

வினு

சந்தன்மகிமைகாணப்போமோ அடி
யென்னை ஜெயிக்கவுன்னுலா மோ
வந்துவந்துவீணைவல்லாண்மையேசுரா ய்
வாட்டிவிடவேயிதோ பூட்டினேன்பாணங்க ள்— சந்

விடை

தொட்டாலுனக்கொருதீரம் வருமோ
சோலுலகோர்கள்விசார ம்
விட்டாலருஞ்சுரங்கள் வெல்லவல்லமையுண் டோ
வீரியம்பேசாதேகாரியமுணராம ல்— தொட்

கங்கையம்மன்சொல்-விருத்தம்

கனகமாரொளிவுதன்னைக் கண்ணிலான்காண்பதுண்டோ
வனசமாமலரின்தன்மை மண்டூகமறியப்போமோ
எனதுளமகிமைதன்னை வெளிதல்லவறியாநீயும்
உனதுளமறியவேண்டி யொடுங்கியிருக்கின்றேனே

—(*)—

வசனம்

அடி-மாதவ்சுரமே-பளாபளா-செத்தகெட்டிக்காரிதான் உலகின்கண் தங்கக்கட்டியினது பிரகாசத்தைப் பிறவிக்குருடனறிவானோ தாமரையின் மணத்தைத்தவளைகளறியுமோ அதுபோல்என துமகிமையை நீயறியமாட்டாய் உன்னுடைய திறத்தையறியவேண்டி யானிதுபரியந்தமடங்கியிருந்தேன் இனிமேல்உன்னைதெண்டிக்கத் துணிவுகொண்டேன்பாரடி

பொது-வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்ரகாரம் கங்கையம்மன் கூறியதைக் கேட்ட மாதவசுரமாகியபெண்ணானவள் மகாகோபங்கொண்டு கண்களிற் றீப்பொறிகிளர்தக் கங்கையைநோக்கிக்கூறுவாள்

மாதவசுரத்திற்குங் கங்கையம்மனுக்குந் தர்க்கம்-தரு-இ-ம.

விஞவிடைக்கண்ணிகள்

மறைகுலப்பெண்ணேநீயாரடி — விளமக்குண்
மாய்த்துன்னை விடுகிறேன்பார — டி
திறமறியாமலே செப்புகிறாயே — தோ
சேதிக்குறேனண்டம் பேதிக்கும்படி — யாக—மறை

விடை

அண்டம்பேதிக்கவும்வல்லையோ — எனறு
அஸ்தத்திலேசிலையில்லை — யோ
கண்டந்துண்டமாகக் கண்டித்தென் வாளியால்
காட்டுகிறேன்கழுக் கூட்டுகிறேனுன்னை—அண்

விஞ

கழுகுக்கிறைபாகச்செய்வதும் — இந்தக்
காசினிமேல்நீநின் றுய்வது — ம்
முழுதுமறியவேமூட்டுகிறேன்றீ — ஞா
முன்னின் றுபேசாதே மூடடியுன்வாயை — கழு

விடை

வாயைமூடச்சொன்னநாயே — இதோ
வருகுதுபார்சூலம்பே — யே
நோயாயெழுந்த வுனக்கேனித்தகொட்ட — ம்
நொறுக்கியேதண்டத்தால் முறுக்கிறேன்கரங்களை—வாயை

விஞ-கந்தார்த்தம்.

காசினிபுகழுகின்ற கங்கையுஞ்சினந்துமீறி
வீசியேவிட்டசூலம் வீழ்ந்திடவதைக்கண்டித்தே
கூசியேயவளும்வாடக் கொக்கரித்தெழுந்துநின்று

தேசிகனென்னைமெச்ச

தீரமுடனேதொடுத்தே-னகோரபாணம்
தீரமும்பலவீரமுமஞ்ச — வே
பாரமாங்கணைகள்கோரமிஞ்சவே—தீரமுடனே

விடைகந்தார்த்தம்

சுரமென்றுவுனக்குவஞ்சுஞ்-சுந்தரிஞனேவல்ல
பரமன்செஞ்சடையிற்றங்கும் பாவையென்றறிந்திடாமல்
வுரமிஞ்சிவந்ததேநீ வுள்ளமும்பதறிவாடி



காமிஞ்சிநதொழுதேநிற்கக்

காட்டினேன்மகிமைபாரடி-அகோரபாணம்பூட்டினேன் மனநு
காட்டியேயுந்தனை வாட்டியேயடக்கவே (தேறடி
கூட்டினேனென்கெடி-நாட்டில்நிற்கவே—காட்டி

விஞ கந்தார்த்தம்

மிக்கவேருகொட்டி-வீரியந்தனையடக்கி
வக்கிரிதன்னைமூட்டியதஞ்செய்ய-நொந்தேனம்மா
வுகரகோபங்கள்கொண்ட வுன்னிடமகிமைதன்னை

கக்ஷிகள்போலவந்த

காரியந்தனைக்கூறுவாய்-என்னையெதிர்த்த - வீறிபஞ்சொல்லியேமீறுவாய்
காரிபமேறுநீ-கொறிப்பிடிக்கவே
பாரிலெந்தனைமீறியடக்கவே—காரியந்

விடை-கந்தார்த்தம்

திங்களைத்தரித்தயீசன்-செஞ்சடைதனிலிருக்கும்
கங்கைகாண்பூலோகத்தில் கன்னிகையாகவந்தேன்
மங்கைகுறவுகொண்டு மானிடர்தம்மைக்காக்க

உங்களைவசப்படுத்தி

உலகில்சஞ்சரித்திடுவேன்-எந்தனக்கோ-வலுமைகள் செலுத்திடுவேன்
உலகிலன்பர்கள்-நலமதுசெய்திட
பலபலதுஷ்டருஞ் சிலபிணியொழிக்கவே—உலகில்

பொது-விருத்தம்

அம்மையின்மகிமைதன்னை யறியாமலெதிர்த்தோமென்று
பெருமையாய்ப்பிணிகளெல்லாம் பின்புசொற்படிநடந்து
வருகவேகங்கையம்மன் மகிமையையுலகிற்காட்ட
குருகியேகாளியம்மன் கோபித்துவருகின்றாளே

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஸ்ரீகைலாசபதியாகிய உமா மயேசனது சடாடவியில் விளங்குங்கங்கையாகிய மறைகுலப் பெண்ணினுடையமகிமையை இன்னதென்றறியாமலெதிர்த்தோமென்று நடுங்கிப் பிணிகளெல்லாம்வந்து அம்மனைப்பணிந்துநிற்க அவைகளைத் தன்சொற்படி நடக்கும்படியாய் வசப்படுத்தி பின்னர்தனதுபெருமையையுலகத்திற்றெரிவிக்க அப்போதுஅதைக்கண்ட வடபத்திரகாளியானவள் கங்கையின்மீதுகோபித்து மகாவுக்கிரத்தோடும் வருகிறவிதங்காண்க.

இதுவுமது-விருத்தம்

அண்டரண்டங்களெல்லா மதிரவேபார்ப்பரித்துத்
தண்டமுஞ்சூலம்வேலுந் தனுவுடன்சுரிகைபால
கொண்டுபொற்பணிகள்மின்ன கொடியராக்கதர்கள்பூதம்
கண்டிடவணங்கிச்சூழக் காளியுமெதிர்த்திட்டாளே.

வடபத்திரகாளிவருகிற-தரு-ஷ்ராகம்.

பல்லவி

வந்தனளேவடபத்திரகாளி-நல்ல
மகிடசங்காரியுத்தரிகிட்டதகவென
தந்தனங்களாபாடிவர பூதங்களிந்த
தாரணியில்கெடி பெற்ற-நாரணியகோரி
சிங்கவாகனத்தின்மீதிலேறி-நல்ல
செகச்சோதியாயிலங்கு மங்கலகாரணி
சம்பிரமுடன்முரசறைய செறித்தலினச்
சாரிவரும்பேய்பூத மீறித்துடிக்க
ஆடைபரிமளம்வீச செப்பரிய
அண்டர்முனிவர்கள் கண்டுதுதிபேச
பாடகச்சதங்கைகள்கொஞ்ச-திரைசூழும்
பாரினைத்துய்புகழ்பெற்ற சண்டனுமஞ்ச
தண்டமொடுவில்லும்வேலும-வாளும்நல்ல
சங்காழிச்சூலமும் பிண்டிபாலமுடனே
கொண்டுகரகங்களாட-நல்ல
குறளிகணங்க ளெங்கும்புகழ்பாட
வந்தனளே வடபத்திரகாளி

காளிசொல்-விருத்தம்

பாவையேயச்சமறப் பாரெலாம்புகழுசெந்தன்
காவலேயகற்றிக் கடிந்திடப்பிணியைவிட்டு
மேவியகங்கைதானென்ன விடுவதேதுன்னையிப்போ
தாவியேவாளினாலே சங்கரித்திடுவேன்பாராய்.

வசனம்

ஆ-ஆ-ஆரடிகன்னிகையே நெடியகடல்சூழ்ந்தஇப்புவனமனைத்தையும் பாதுகாத்துவரும் வடபத்திரகாளியென்று சற்றேனுமஞ்சாமல் உலகினங்களைவாழ மானிடர்களுக்குப்பிணிகளைத்தூண்டி வீரியஞ்செலுத்திவரும் உன்னை யனாதவீரவாளுக்கிரையாகச் செய்வேன் பாரடி.



பொது-வசனம்.

அதேதெப்படியென்றால், இந்தப்பிரகாரங் கூறிய வடபத்திரகாளியைப்பார்த்துக் கங்கையம்மனானவள் மிகவும்வக்ரத்தோடுகூறுவாள்.



கெங்கையம்மன். பத்திரகாளி.

கங்கையம்மன்சொல் தரு ஜம

பல்லவி.

ஏதடிகாளியேயென் னெதிர்நிற்குந்திறமேது
பெண்ணடிவகைகிசால்ல டி.

அநுபல்லவி.

வாதுகள்செய்வது நீதியுமல்ல டி
வந்தேனேயுனை யடக்கியாள்வதற் கு (ஏத)

சரணங்கள்.

வாட்டமுற்றேறுச்சிலே பீட்டிசாங்கள்பூட் டி
வாளுளமிகதேயுனை யோட்டுவேன்பார டி (ஏத)

(காளிசொல்-தரு-இ-ம்)

அச்சமில்லாமல்வந்தாய் நீரொந்தவூரடி
அறியச்சொல்லடிதந்தை தாய்களின்பேரடி
மெச்சியேவந்திட வுசிதமாமோடி
மீறியேபிணிகளை விடுக்கலாமோடிநீ
மீறிவந்தனைப் பாரில்வீழ்ந்தி ட
கூறுசெய்குவேன் பாரடியிப் போ (அச்ச)

(கங்கை சொல்-தரு)

காஞ்ஞெிருப்பதிமாநகை குலந்தனில்வர்தவள்-இந்த
காளிலமெச்சவேகங்கை யானெனப்பெயர்தந்தவள்
யேஞெவீண்மதிகொண்டு யெந்தனைவந்தெதிர்த்தாய்
யெதிர்க்கவுன்னலாமோடீ ஏண்டி வீரியந்தந்தாய்
மீடில்லாதபல வாட்டூமிஞ்ச வே
தேடிவந்தையே யோடிப்போடி நீ (கா)

(காளிசொல்-தரு)

கங்கையேவுன்னிட சவுரிய வீரியங்கண்டேனே
காலனுக்கிறைபாக்க வேதிறங்கொண்டேனே
கங்கையேயுந்தனைப் பங்கமதுசெய்ய
காடினேன்பாரிதோ சரங்களையெய்ய
காடிவந்நீ மோடிசெய்வ து
வாடிநல்லதே யோடிப்போடி நீ (கங்கை)

கங்கையம்மன் சொல்-விருத்தம்.

ஓடிநீபோடி யென்று வுலகெலாமெனக்குச்சொந்தம்
வாடிநீயுலகளந்த மாயவன்றங்கைநீயே
காடியேயீசனோடு நாட்டியஞ்செய்தகாளி
தேடியேயதனுவிந்த திறம்பேசவந்தாய்போடி.

வசனம்,

ஆ-ஆ ஆரடிவட பத்திரகாளியே, நீ இவ்வுலகையளந்த நெடுமாலுக்குத் தங்கையானதினாலும் பரமசிவமாகிய உமாமயேசனோடெதிர்த்துவாதாடிய பராசமுடையவளாலும் உலகமெலாம் எனக்குச் சொந்தமென்று கெர்வப்பட்டு என்னை ஓடிப்போவென்று சொன்னாயல்லவா கல்லதடி.

பத்திரகாளி சொல்-விருத்தம்.

கன்னியேமலைகுலத்துக் கங்கைடேசொல்லக்கேளாய்
யென்னிடவலுமையெல்லா மெவர்களோசொல்லக்கேட்டும்
துன்னியேகட்சிகூறிப் பயமின்றிப்பேசவந்தாய்
சின்னபின்னங்களாகச் செய்குவேன்பாராய்வாடி.

வசனம்.

ஆ ஆ அடியாரடி கங்கையென்னும்பெயருடைய நீபிராம்மணப்பெண்ணாகையால் எனதுவல்லமையை வுனக்குயெவர்களோசொல்லக்கேட்டு இகட்சியாய்ப்பேசவந்தவுன்னை சின்னாபின்னப்படுத்துவேன் பாரடி.



கங்கையம்மன்சொல்-தரு இ-ம்

கண்ணிகள்.

நீண்டசிலைதன்னைவளைப்பேன் காளிகையேயான்
வேண்டியசரங்கள் தொடுப்பே ன்
கோரச்சரங்கள்பூட்டி மாருமலுநபூட்டி
வாராதயிடர்காட்டி பீருமலுன்னையோட்டி
நீட்டியேயெனதுவீரம் பூட்டியேமோகச்சரங்கள்
மீட்டியம்பரம்போலே யாட்டியுனைத்தண்டிக்க (நீண்ட)

பத்திரகாளிசொல்-தரு-இ-ம்

கண்ணிகள்.

வில்லெடுத்தேவந்து குதித்தேன்-கங்கையடியுன்
வல்லமையறிய யெதிர்த்தே ன்
வெற்றிபூதங்கள்பாடவே யெத்திசைகளும்வாடவே
பத்திகளச்சாடவே தத்தளித்து வோடவே
பாரடியுலகந்தன்னி லாரடியென்னைவெல்வது
கூறடியுயிர்பிழைத்துத் தேறடிபுவியின்மீது (வில்)

கங்கைசொல்-தரு-இ-ம்

கண்ணிகள்.

சந்திரமுகப்பாணமெடுத்தேன் அகோரமாக
வந்துவுந்தன்மீதுதொடுத்தே ன்
தாட்டாண்மைகளுமோகவே வாடாதமுகம்வாடவே
தேடாதவகையாகவே வோடாமல்மனம்நோகவே
கேட்கவுஞ்ஜெயமங்களம் பாடவும்பூதங்கள்சேர்ந்து
வோடவும்வுக்ரமிகுத்து ஜாடவுஞ்சின்னத்துமீறி (சந்தி)

பத்திரகாளிசொல் தரு-இ-ம்

கண்ணிகள்.

தண்டாயுதந்தன்னை யெடுப்பேன்-சுழன்றெழும்பி
மண்டியிட்டுமோதி யடிப்பே ன்
தாவியேமனதுகூச தேவருந்துதிகள்பே ச
பூவியன்றன்னையேச வாவலாய்வாட்டொண்டுவீச
தந்தவுந்தலையுக்கரு கொத்தவுங்காகங்கள்வந்து
சுத்தவும்வகைகள்தேட மெத்தவுங்கோபமிகுத்து (தண்)

(கந்தார்த்தம்.)

அடிக்கடிபாணம் நொடிக்குள்ளேயேவி
மடக்கவேயுன்னை

பொடிக்குறேன்பாராய்-திறியோட-அடிக்குறேன்பாராய்
வடிக்கண்ணவருகுது வருகுதுபாரடி
கொடிக்குள்ளேயுந்தனை யடிக்கவீரியமுண்டு
நோகநோக்கியேயிஞ்சிப் பார்க்கிறாயென்னடி
வேறகவேபெண்வஞ்சகந் தீர்க்குறேன்றானடி
நோகநோகவே வேகநெஞ்சமும் - போகவுன்னுயிர் சாகச்சாடுவேன்
(பொடி)
(இதுவுமது)
பொறுக்கதாவீரம் க்ருக்தடவேபேசு
கருக்கென்னத்தனையை
அறுக்கிறேன்போடி-போடிபொடியாய-நறுக்கிறேன்வாடி
பொறுக்காதவீரியச் செருக்கடக்கவேண்டி
முறுக்கிக்குலிக்கியே திருப்பிப்பேசவந்தாய்
மூட்டுராவிசத்தைக் காட்டுராயென்னடி
ஊட்டுராய்நலசங்கனே யாட்டுராய்வாதடி [ன் (அறு)
முட்டமுட்டவே விட்டசாமத்தை தட்டியுன்றனை வெட்டியெறிகுவே
(இதுவுமது)
சத்திசாமுண்டியே மெத்தவேவீரக்கள்
பெற்றவளென்றுநீ
வெற்றிக்குவந்தாய்-பூட்டினேன்பாணம்-இத்தோடேசெத்தாய்
அத்தனோடாட்டவுற செருக்காலே
தத்திக்குதிக்காதே புத்தியுனக்கிது
சஞ்சலமிஞ்சியே யஞ்சாயபாரடி
யென்சொல்லுறேன்வீரம் வஞ்சிறேனடி
சாடுவேனுனைமூடுவாய்விழு-போடியிப்பவேசெகிவாய்வழி வெற்ற
(இதுவுமது)
அந்தணப்பெண்ணே யெந்தனையெதிர்க்க
உந்தனவர்மோ
கொந்திடச்செய்வேன் நமனுக்கேடி வந்திடச்செய்வேன்
உந்தன்மடித்தாலே வந்திடுமேபாவங்கள்
அந்தவிதத்திமகே சிந்தைபொறுத்திட்டேன்
வுள்ளத்திலேசங்கொள்ளாதேகன்னியே
துள்ளத்துள்ளவேதன்-தன்னுவேனுன்னையே
வோதவோதவேவாதநெருடுமே-காதகாதமேயோடவாட்டுவேன்(



கங்கையம்மன்சொல்-விருத்தம்

சங்கரனையெதிர்த்தாடுந்தகையோயென்றுந்
தாழ்வில்லாமகிடனைச்சங்கரித்தாளென்றும்
மங்கைபுகீமாயனுக்குத்தங்கையென்றும்
வரிசைபுளவாயிரமாஞ்சிரத்தாளென்றும்
யெங்குமிரண்டாயிரமாங்கரத்தாளென்றும்
பேயம்பிடும்வார்த்தைக்காகவிருந்தினேரம்
கங்கைபுகான்தங்கிமனம்பொறுத்துக்கொண்டேன்
காணலாமென்வலுவைகடிந்துபாரே

வசனம்

ஆ-ஆ-பளாபளாநன்றாயிருக்கிறது ஓ காளியே உன்னை ஸ்ரீகயிலாசபதி யாகிய பரமசிவனோடு எதிர்த்து நடனஞ்செய்த மேன்மை ... ளென்றும் தேவர்களுக்கு யிடர்செய்துவந்த மகிடாசூரனைச ... றும் மங்கையாகிய நீ-ஸ்ரீவைகுந்தநாதனென்னும் மாயவனுக்கு ... தரியென்றும் அழகிய ஆயிரஞ்சிரமும் இரண்டாயிரங் கரங்களையுமுடையவளென்றும் இயம்புந் தன்மையால் இதுபரியந்தம் மனம் பொறுத்துக்கொண்டிருந்தேன் இனிமேல் எனது வலுவைக்காணலாம் நில்லடி காளியே.

பத்திரகாளிசொல்-விருத்தம்

சந்தசொல்லதுவுமெய்தான் சடைபடாக்காளிநானே
அந்தணர்குலத்தில்வந்த வரிவைநீயாகையாலே
எந்தகாரியமுடிப்பாயெப்படி அணியுஞ்சிந்தை
உந்தானுன்னைக்கொல்ல மனதில்லாச்சமர்செய்தேனே

வசனம்

ஆ-ஆ-வாராய்கங்கையே நீகூறியவிதமெல்லாஞ்சரியே அப்படிப்பட்ட பராக்ரமமுடையயெனக்கு பிராமண குலத்தில் ஜனித்த வுன்னைக் கொல்லுவதும் வெல்லுவதும்பெரியகாரியமல்ல ஆனதால்உன்றால் என்ன கட்டத்தக்கூடுமென்றும் உன்னைக்கொல்லலாகாதென்றும் மனத்தளர்வுகொண்டு எனது வீரத்தைக் காட்டாமலிருந்தேன் இனியொருகைபார்த்து விடுவோம் வாராய்கங்கையே

பொது-வசனம்

அகோ தெப்படியென்றால் இந்தப்ரகாரம் கங்கையம்மனானவள் வட... பத்திரகாளிகூறிய வீரவார்த்தையைக்கேட்டு அதியுக்ரங்கொண்டவளாய் அ

11690

டிகாளியேபாரடி யுன்னுண்மையை யறிகிறேனென்று ஒருவருக்கொரு
ர் வீரகேசரியைப்போல் கெற்சித்துச்சமர்செய்யும் விதங்காண்க.

கங்கையம்மன்சொல்-தரு-இ-ம்

கண்ணிகள்

பாரடிகாளியேநீயே-யுக்ரமிருந்துப்
பாரடிகாளியேநீ ...யே
பாரடியுந்தன்மீதிப்போ-வீரமாய்ச்சரந்தொடுத்தே
யம்பரம்போலாட்டிவிடுவேன் மாரிபோற்கணை
தென்புட்னேபூட்டிவிடுவேன்
பக்குவமறிந்திடா-வுக்ரமுகக்காளிகையே
மிக்கவேயென்வாளியொற் செக்கைசெக்கையாகச்செய்வேன்.

பத்திரகாளிசொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்

ஏதடிகங்கையேவல்லமை ... அடியுனக்கு
யேதடிகங்கையேவல்ல ... மை
யேதடிகோரமாக வாதுகள்செய்யவேவந்தாய்
யிடிவாச்சரங்கள்தொடுத்தேன் - பயமிருந்தே
யோடவதியுக்ரமடுத்தேன்
வொட்டியிந்தவாளினாலே - கட்டியிருதுண்டமாக
வெட்டியேமன்பதிக்கு-அட்டியில்லையுனைச்சேர்க்க—ஏதடி.

கங்கையம்மன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

நேரமாமோவுந்தனைவெல்ல-அடியெனக்கு
நேரமாமோவுந்தனைவெல் ... ல
நேரமாமோவுன்னைவெல்ல கோரமாகவந்தெதிர்த்தேன்
கண்டகுலந்தன்னையெடுப்பேன் - உக்கிரங் கொண்டே
தாண்டிவந்துன்மீதுவிடுப்பேன்
நேசமுமுன்மீதுவைத்த-பாசமுமகற்றியிதோ
வீசியேயென்கதெண்டாலேதூசுபோற்பறக்கச்செய்வேன்(நே

பத்திரகாளிசொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்

என்னமாயமோநீசெய்குறுய்-அடியம்மம்மா
யேதுபாயமோநீசெய்குறு ... ய்



என்னமோமறைகுலத்துக் கன்னியென்றிருந்தேனமமா
யெந்தனுலாகுமோவெல்ல - கங்கையேநீயும்
வந்தவகைதன்னைச்சொல்லவே
யின்புமுள்ளத்தருளுமம்மா-வும்பர்புகழ்நாயகியே
சம்பிரமந்தோடுந்தன்கீர்த்தி-யிம்பரினிறைந்திடவே—என்

கங்கையம்மன்சொல்-விருத்தம்

ஆண்டகைச்சடைவாழெனனை யக்ரமந்தன்னைப்போக்க
வேண்டியேவந்தயேரன் வேலையைக்குறைக்கும்வண்ணம்
நீண்டவேலேந்துந்தேவி நீமகிழ்ந்துதவிசெய்யத்
தாண்டிநீவருகுவாயேற் றருநிவேதனஞ்செய்வேனே

வசனம்

வாருமம்மாகாளிகாதேவியே இப்பூமியின்கண் அக்ரமங்கள் மிகுந்து
அந்தகனுக்குவோய்வில்லாமற் றொழில்மிஞ்சியதால் அவன் எனது நாய
கனுகிய பரமசிவனிடத்தில்வந்துமுறையிட அவர்சடாடவியிலிருக்கு மெ
ன்னை அக்ரமங்களையகற்றிப் புண்ணியத்தைப் பெருகும்படியாகச்செய்யு
ம்பொருட்டு விடைதந்தனுப்ப அதுபோலியான்வந்தவளாதலால் எனது
செய்யுளை அறிந்தநீ இன்றுதுவக்கி யெனக்குதவியாகவிருப்பாயாகில் உ
னக்குவேண்டிய நிவேதனங்கள்செய்து வருவேனம்மாகாளியே.

பத்திரகாளிசொல்-விருத்தம்

திரையெறிகடல்சூழ்வையத் திலகுறுங்கங்கையானே
விரைசெறிகயிலைவாழும் வித்தகன்விடையையேற்றுத்
தரைபுகழோங்கவந்த தயாபரியாகுமுந்தன்
வுரையதுபோல்நடப்பே னுத்தமிமகிழ்கொள்வாயே

வசனம்

ஆ-ஆ-நெடியகடல்சூழ்ந்த இப்புவனத்தில் கண்ணேங்கும் கங்கையே
தேவர்முதலியவராலும் புகழத்தக்க ஸ்ரீகைலாசகிரியில்வித்தகனாகிய உமாம
யேசனது விடையைக்கொண்டு இத்தரைமீதில்வினையும் இருட்கூட்டம்
போன்றபாரங்களைபருதி முன்பனிபோல விலக்கச்செய்து புண்ணியத்தை
விளைவிக்கும் பொருளாய்விளங்குந்தயாபரியாகிய வுனது வுரையைப்போ
ல் நடந்துக்கொள்ளுவேனுதலால் சித்தங்களிப்பாயம்மா வுத்தமியாகிய
கங்கையே.

பொது-வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்ரகாரம் மகிஷாசுரசங்காரியாகிய வட
பத்திரகாளியம்மனானவள் கங்கையம்மனுக்குக் கைவசமாகியபின்னர் உல
கரட்சகனுகிய ஐயனாரப்பன் வருகிறவிதங்காண்க.

☞ ஐயனாரப்பன்வருகிற பொது-விருத்தம்.

மலையதனுன் மழைதடுத்தவா இமயன்
மதியணியும் பரமசிவன்மகிழுஞ்செல்வன்
சிலைபிடித்துவயிராணி மானககார்த்த
தீரனவன்பொற்பணிகளலங்கரித்தே
கலையணியும்பளபளென மாதர்குழக்
கரிபரிமஞ்சனிகூத்தர் வணங்கிநிற்க
அலைகடல்சூழுலகமெலாந் துதித்தேபோற்று
மையனாரப்பனுமே வருகின்றாரே

இதுவுமது-தரு-இ-ம்.

பல்லவி.

அகிலத்திற்புகழ்பெற்ற-மிகவெற்றிமணிசித்ர
அரிஹரபுத்திரர்வந்தார்-மிகுபொற்புள (அகி)

அநுபல்லவி

இகல்பொருதுந்தோளணி-மிகவிலங்கவகை நில்
யிரொண்டுகுண்டலமெழிற்கொளரா மும்
திரண்டமார்பணி யுருண்டசைக் திட (அகி)

சரணங்கள்

நீண்டஜடாமகுட நெடியகற்கடகமின் ன
நிகரிலாப்பணிஜொலிக் க
ஆண்டவன்றனைத்தானை வேண்டித்துதிக்குமன்ப ர
அடுக்கடுக்காய் நடக்கவீரர்க ள்
படிக்கபூரிபேரியடிக்கத்தொனியுட ன் (அகி)

அஞ்சவியஸ்தர்களாகமஞ் சனிகூத்தரு ம்
ஆனைசேனை நடக்க வே
என்சொற்படியல்லாமல் மிஞ்சிவந் தொருகன் னி
இதக்கமுள்ளவன் துதிக்கமாகிட ர்
எதிர்க்கும்வீரியம் வதைத்துப்போக வே (அகி)

வில்லம்புகேடயமும் வீரவாளாயுத மும்
விருதுக்கொடிபறக்க வே
சொல்லும்காஞ்சாலை துலங்கியுலாவும்வாச ன்
சூரரெவரையு நாறிப்பொடிப ட
கூறுசெய்நிகேத்ரவீரிய ன் (அகி)



ஐனாரப்பன்சொல்-விருத்தம்

கதித்ததோளுடையகாவற் காரனேசொல்லக்கேளாய்
யெதிர்த்தவீரியர்கடம்மை யிமையினிறசெயித்துவெட்டி
மதித்துயேமெலிகொணடிந்த வையகமெல்லாமஞ்சித்
துதித்திடுஞ்சூரவீர துரைதனையழைத்துவாராய்

வசனம்.

அடா திணிந்ததோட்களையுடைய காவற்காரனே எதிர்த்தவீரர்களை அஞ்சும்படியாக ஆக்ரமித்து பெலிகொள்ளும் பராக்ரமசாலியான வீரப்பதேவனை யழைத்துவாரும்பிள்ளாய்.

☞ (வீரப்பதேவன் வருகிற-பொது-விருத்தம்.)

செடிபெறவேயம்பலத்தி லாடுமீசன்
கேசவனுமகிழ்ந்தளித்த வையன்பாதம்
அடிபணியுமன்பர்கண்மீ தின்பமுள்ளோன்
அடல்வாகுவல்லயமும வாளகடாரி
நெடியசிலைசுக்குமாந் தடியுமேந்தி
நிதியிகுத்தபலபணிக ளலங்கரித்தே
வெடிபடவேயண்டரண்ட மதிரத்தாண்டி
வீரப்பதேவனுமேவருகின்றாரே.

வீரப்பதேவன்வருகிற-தரு-இ-ம்

நொண்டிச்சிந்து.

ஆணிமுத்துவீரதுரைவந்தார் - நல்ல
ஐயனருளாக்குந் துய்யமொழிக்கு
மாணிக்கமகுடமுடி வேந்தர் - வந்து
வரிசையுடனேபணியுஞ் சரசகெம்பீரன்
ஆகேயூரகடகம் - - - நல்ல
அணிமுத்துமணிமாலைப் பணிஜொலிக்க
வீரமுள்ளசூரர்கள்வாட - - வெய்ய
மிண்டுசெய்யும்பேய்பூதங்கள் கண்டுகெதற
வரிச்சிலைகேடயம்வாளும் - நல்ல
வலைதடிசக்கரம் பாலாவொடிருங் கட்டாரி
துரிதமுடன்விருதணிந்தே - - கையிற்
சுக்குமாந்தடியுடனே யுக்ரவீரன்
தட்டிஜல்லடங்கச்சைபூண்டு - இந்தத்
தாரணியிற்புகழ்பெற்ற வீராதிவீரன்

வெட்டிவேர்களபமவிச - - காவில்
வெண்டயங்கெலிக்கமண் டலங்கொண்டாட (ஆணி)

வீரப்பன்சொல்-விருத்தம்.

தேவர்கள்பணிந்துபோற்றுந் தேவேந்திரன்மகிழுந்தேவி
ஆவலாய்ப்பதமடைந்த வயிராணிதன்னைக்காத்தே
பூவுலகத்தைத்தாக்குப் புண்ணியநாதாபோற்றி
மேவிடவரவழைத்த விதமெனக்கருளுவீரே

வசனம்.

பொன்னுலகவாசிகளாகிய தேவர்கோனாவமுதக்குந் தேவேந்திரனது மனத்துக்கினியவளாகிய அயிராணியென்னு மங்கையைக்காத்தும் இவ்வுலகத்தையும் பாதுகாக்கவெழுந்தருளியிருக்கும் புண்ணியமூர்த்தியே உனது பாதமலர்போற்றி போற்றி தேவரீர் சிறியேனை வருவித்தவிதத் திருவாய்மலர்ந்தருளவேண்டுஞ் சுவாமி.

ஐயனாரப்பன்சொல்-விருத்தம்.

அருணம்வீரப்பாமிக்க வகிலலோகத்துளன்பர்
தருபூசைகொண்டுவோங்குக் காயனிதன்னைக்காக்க
வருகிறுளோர் [illegible] பூசைகொள்ளக்
குருகிகியவளைவென்று கூறுவாய்பதிலெனக்கே.

வசனம்.

நெடியகடல்சூழ்ந்த இப்புவனமுழுதும் நாம் மானிடராற்செய்யப்பட்ட பூசைகளையேற்று அன்னவர்களுக்கு யாதொருகுறைவின்றிப் பாதுகாத்து வருகிறோம் இப்போது கங்கையென்னும் பெயராவகித்தவோர் கன்னியானவள் தன்மகிமையைச் செலுத்திவருகின்றுளாதலால் அவளை செயித்து ஜெயங்கொண்டுவருவாய் வீரப்பனே.

வீரப்பன்-கங்கையம்மனிடஞ் சமர்செய்யச்செல்லுந்-தரு-இ-ம்

பல்லவி.

அப்படிவருபவளாரிங்கே-யவளை
யதஞ்செய்துவருகிறேன் பாருங்கள்

அநுபல்லவி.

எப்படிவந்துவர ளெண்ணமில்லாமலே
யெட்டியிருதுண்டாய் வெட்டியெறிகுறேன் (அப்)

சரணங்கள்.

ஆலைக்கரும்புபோலாட்டுவேன் - - அவளைக்
காலுங்கைறைாாகக்கட்டுவேன்



கோலாகாலிதிரிசூலியென்றாலு - - மே
கொஞ்சத்தில்விடுவேனோ வஞ்சியான்படுவேனே (அப்படி)
புலியைப்பூனைகண்டுமிஞ்சுமோ - - வீட்டி
னெலியைக்கண்டேதேனுமஞ்சு - - மோ
கெலிக்கவெண்ணங்கொண்ட கெம்பீரமறிகிறேன்
கெதைகொண்டுவலனைநான் சிதறவேயடிக்குறேன் (அப்படி)
கெங்கையேயுந்தனைக்கண்டேனே - - யிப்போ
பங்கப்படுத்தவெண்ணங்கொண்டே - - னே
பெங்குங்கீர்த்திபெற்ற வெற்றியையழிக்குறேன்
யிப்போதேவெல்லுவேன் தப்பித்துக்கொள்ளுவாய் (அப்படி)

இதுவுமது-விருத்தம்.

கங்கையேவுன்னைப்போலக் கருத்தில்பேராசைகொண்டோ
ரெங்கும்நான்கண்டதில்லை யெப்படிமிஞ்சிவந்தாய்
அங்கமுந்துடிதுடிக்க வதட்டியேவில்லைப்பூட்டி
பங்கமேபடுத்தவில்லிற் பாணத்தைச்சந்திப்பேனே.

வசனம்.

ஆ-ஆ கங்கையே இக்கடல்சூழ்ந்த புவனின்கண் உன்னைப்போல் வீறாப்புகொண்டுதிரிபவர்களை எங்கும் நான்கண்டதில்லை மேலும்நாமே வல்லவியென்றும் நமக்கு மிஞ்சினவர்க ளொருவருமில்லையென்று மிருமாப்புகொண்டு மிஞ்சிவந்தாயன்றோ பளாபளா இதோ கிமைக்கொட்டுவதற்குள்ளாக எனது வில்லினிடமாக பாணங்களைப்பூட்டி ஆக்ரணபரியந்தமிழுத்து உனது வுடலத்தைச் சல்லடைக்கண்களாகச் செய்து பங்கப்படுத்துவேன் பாராய் கங்கையே.

பொது-வசனம்.

அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரம் வீரப்பன்கூறிய வுக்ர வார்த்தையைக்கேட்ட கெங்கயம்மனானவள் அதிகோபங்கொண்டவளாய் அடாதுள்ளுகாளையே யென்னடா தலைசிறாகவிழுகிறுயென்று ஒருவருக்கொருவர் வாதமிடும் விதங்காண்க.

கங்கையம்மனுக்கும்-வீரப்பனுக்குந்-தர்க்கம்-தரு-இ-ம்

கண்ணிகள்.

துள்ளுங்காளையென்றெவர்க்கும் விள்ளவேயுல்கில்வந்த
துடுக்கையடக்கவந்தேன் பார - - - டா
கள்ளத்தனமாகயிங்கே கொள்ளைகொள்ளவந்தேனென்றுஞ்
கருத்திலெண்ணுவதென்ன பேர - - - டா

காரியமறிந்திடாமல் வீரியம்பேசாதேபோ - - டா
கீறிலாதெய்வமுண்டோ மாறிலாதசெல்வமுண்டோ (துன்)

வீரப்பன்சொல் தரு-இ-ம்

கண்ணிகள்.

அண்டரும்மடுக்கலோக கண்டருக்குதெண்டனென்று
வச்சமற்றுப்பேசவந்ததேத - - - டி
மண்டலத்திலெனை வெல்ல வுண்டோவொருவராலமோ
மார்க்கமறியாமற்செய்யும்வாத - - - டி
வையமெல்லாமுண்டருளுந் தூய்யமாலுமீசன்றந்த
வையனாணுப்பவந்த செய்யவீரனென்றெண்ணாமல் (அண்ட)

கங்கையம்மன் சொல்-தரு இ-ம்

கண்ணிகள்.

மங்கைபாகனார்சடையிற் றங்குமந்தகங்கையென்பேர்
மகிமைதனையறிவதேத - - - டா
எங்குமிறைந்தவனாகினை விங்கினி வீரமதிவேனே
யெந்தனையெதிர்க்கும்வீரனாக - - டா
எப்படியுமுன்னைவெல்வேன் செப்புமிந்தவீரமேக
வற்பமாய்நினைக்கவேண்டா மொப்பிலாதசெல்வினானே (மங்கை)

வீரப்பன்சொல்-தரு-இ-ம்

கண்ணிகள்.

கோலாகலிதிரிசூலி மாலினிகபாலியென்றே
குறித்துச்சொல்வதான்மனதஞ்ச - - மோ
காலகாலிபரஞ்சோதி நீலிசிடாசங்க - - ரி
கங்கைநானென்றாலுன்வீரமிஞ்ச - - மோ
கற்றமொழிபேசவேண்டா முத்தமகுலநாய - - கி
மெத்தசவுரியங்கூறிச் செத்துநீமடியவேண்டாம் (கோலா)

கெங்கையம்மன் சொல்-விருத்தம்.

எதிரிக்குவிறக்குமுற்று லெப்படிவீரஞ்செல்லும்
பதறிக்கைசமர்தொடுத்தால் பார்க்கலாமெனதுவீரம்
வுதறிக்கைபோட்டுக்கொள்ள வுன்னிடபடைகளெல்லாங்
கதறிக்கைசேர்ந்துவாடக் கணைகளைபொழிகுவேனே.



வசனம்

ஆ-ஆ-அடாவீரனே உலகத்தில்நம்மையெதிர்த்த வெதிரிகண்மீ திறக்க ங்கொண்டால்வீரம்வெளியாகுமோ அதுபோல் நாம்பதறிச் சமர்செய்யப் புகுந்தால் அப்போதுஎனதுதிரம்தெரியவரும் ஆதலால் உனதுசேனைகளைத்துங்கைசோர்ந்துமெய்சோர்ந்து வில்வேல்முதலிய ஆயுதங்களைவிட்டு க்கையையுதறிக்கொண்டு வோட்டம்பிடிக்கும்படியாய்க் கணைகளைச் சேர் னைமாறிபோற்பொழிவேன்பாரடா

வீரப்பனுக்குங்-கங்கையம்மனுக்குந்தர்க்கம்

தரு-நொண்டிச்சிந்து

ஸ்ரீதிவுக்ரகோபமிகுத்தேன்-கங்கையேநான்
வில்லைவளைத்தேயிதோபல்லைகடித்தே
காரினுமுன்வீரமதிப-கொடிக்குள்ளே
கண்டவர்திடுக்கிடவே-கொண்டவிடிபோல்
காட்டிசகணைமீட்டிவிடவே-வாட்டியுனை
கண்டவர்நகைத்திடவென்-துண்டத்தனத்தால்—ஸ்ரீதி

(கங்கைசொல்-சிந்து)

பாரொக்குமதிரடுங்க-வில்வளைத்தேதன்
பாணங்களைத்தொடுக்க-நாணமடுக்க
வீரங்களடங்கிடவே-கொடிக்குள்ளே
விண்டலத்திதேவர்களுங்கண்டுநகைக்க
வெற்றிபெருஞ்சித்தமுடனே-சுற்றிவந்த
செத்தசேனைதத்தளிக்க வெற்றிவிடுவேன்—பாரொ

(வீரப்பன்சொல்-சிந்து)

விதிகுலக்கன்னியேகேளாய்-யிப்படிக்கொத்த
வீரியம்படைத்துவந்த காரியமேதோ
துதிபெறவந்தவளோ உலகத்தில்
துண்டந்துண்டங்களாக மண்டைச்சிதற
தூறிக்கணைமீறிவிடவே-பாரிலுடல்
துண்டுதுண்டாயறுவிழப் பண்டுஜாடுவேன்—விதி

(கங்கையம்மன்சொல்-சிந்து)

இடுபடாவீரப்பனேகேள்-கொடிக்குள்ளே
வெண்ணாதும்நீயெண்ணி மனங்குண்ணிவாடவே
தேடும்வகையறியாமல்-வந்தெதிர்த்த
இன்றோருமல்லமையாவுங் கண்டுகளித்தேன்

தேரும்வகை கூடாயினி-ஓடிமறைந்தே
சேருமிடம்பாரடா நீ-விறுகொள்வையோ—ஈடு

(வீரப்பன்சொல்-கந்தார்த்தம்)

செடியகுலமும்வேலுடன்வில்லும்-நீதாங்கிப்
படியில்வீரியஞ்செல்லவேவந்திடும்பாவையே
கடுகிதண்டமுமேந்தியேசினந்துகையோங்கி
மூடிவந்துனையடர்ந்துநான்வீசி
மோதுவேனே-தலைசிதற மோதேனோ
மோதிவிட்டவடிமீதுபட்டிட-வேதுமீறுவதேதுபோடி நீ-மோது

(கங்கைசொல்-கந்தார்த்தம்)

பட்டிடவோங்கியதண்டமு மூரிபடப்பாரதனைத்
தட்டிவிலக்கியுன்விருதுகள் பொடிபடச்சாக்கிகளை
கொட்டிநொறுக்கியேமழைபோற் சொரிந்ததிகோரமுடன்
வட்டவில்வாங்கியே யெய்யவருககளை
வாடிநானே-மதிகலங்கி-போடிநானே
வாடிசிறகேயேதேடிவெற்றிகள்-நீடுகெங்கைநாங்கொடிகிங்கே—வாடி

(பொது-விருத்தம்)

வீரனும்திகலங்க வெகுண்டிடனையனாரந்
தாரணிதத்தளிக்கத் தனிச்சகட்போர்செற்சித்து
மாரனைப்போலவல்லும் வளைதடிகொண்டு வேந்தி
வாரணிகங்கைமுன்னே வருகிறதறிகுவீரே

ஐயனாரப்பன்வருகிற-தரு-இ-ம்

கண்ணிகள்

ஆலமுண்டகண்டராதி காவலுமதிகலங்க
வாக்ரமித்தே வரியுதங்கள்காங்கிறார்
அப்படிப்பட்டவன்னையிப்போதேகொல்லுவேனென்று
வரட்டிப்பதிவைவிட்டேகினார்
காலாந்தருத்திரனைப் போலவேகடுகடுத்து
கண்டவர்திடுக்கிட்டேகநாடினார்
கங்கையாளொருநொடியிற் பகைப்படவேயடிக்க
கத்திகேடயங்களெடுத்தேநாடினார்
மண்டலத்தவர்களஞ்சத் தண்டமதுகரத்தேந்தி
வச்சிரக்கவசம்பூண்டு நீங்கினார்
மட்டிலாச்சினமிகுத்து வெட்டியெறிகுவேனென்று
மாறுபாடாய்வீரபாதைகூறினார்



தண்டையொடுகிண்கிணியும் வண்டையங்கலகலென
தாண்டியேகடந்துவீரங்காட்டினார்
சக்கரமலைதடியமிக்கவேயாயுதங்கொண்டு
தாரணியோரஞ்ச வில்லைப்பூட்டினார்

(ஐயனாரப்பன்-கங்கைக்குச்சொல்-விருத்தம்)

சிவனுமோகைபுரிந்து திரிபுரமெரித்தாப்போலும்
தவநிலைகலைத்த காமன் தகனஞ்செய்தாற்போலுன்னை
அவனியோரறிந்துவாட வதைக்கவேயாகச்செய்து
புவனத்திலுன்பேரில்லாப் போர்செய்யவந்தேன்பாராய்

வசனம்

ஆரடி மறைகுலக்கங்கையே முன்னம் ஸ்ரீகயிலாசபதியாகிய பரமசிவ ன் கோபகைசெய்து திரிபுரத்தையெரித்ததுபோலும் தவநிலையைக் கலைக்கும் பொருட்டாய் புட்பபாணந்தொடுத்த காமனை நெற்றிக்கண்ணால் தகனஞ் செய்ததுபோலும் உன்னைத்தாவிப்படுத்துந்துன்பத்தைக்கண்டவிந்தபூமி யோர்கள் வாட்டமுறும்படியாக வதைக்கிறதற்கு இப்புவனத்தில் வுனது பெயரில்லாமற்போக்கப் போர்செய்யவந்தேன் பாராய்கங்கையே

(பொது-வசனம்)

அகோதெப்படியென்றால் இந்தப்ரகாரம் ஐயனாரப்பனுரைத்தமொழி யைக்கேட்ட கங்கைகூறுகின்ற விதங்காண்க.

கங்கைக்கும் ஐயனாரப்பனுக்கும் தர்க்கம்-தரு-இ-ம்

கண்ணிகள்

எரிப்பேனென்றனை யெதிர்த்துப்பேசி யே
யெங்குசினந்திடுமைய னே
விருப்பமாகவேப்சிந்துனாத்திவ ன்
வெகுண்டெழுந்திட்ட மெய்ய னே
நெருப்பையீவந்துமொய்ப்பதுமுண் டோ
நீயாயெதிர்த்தென்மேல் வருவதுநன் றோ
நிகரிலாதவெந்தன் வில்லையெடுப்பே ன்
திருதிகென்றெரியுங்கணைகள் தொடுப்பேன்—எரி

(ஐயனாரப்பன்-சொல்-தரு-இ-ம்)

கண்ணிகள்

கணக்கிலாதசரங்கள்வருகு து
கண்டுக்கொள்ளுநீகெங்கை டே
வணக்கமற்றுவந்தெதிர்த்திட் ட

விலுமையேநடி நங்கை யே
துணிக்கவேயுனைச்சினமாகிக்கொண்டேன்
தோகையுன்னிடவல்லமையைக்கண்டே ன்
ஜோடுஜோடாகபாணமெடுத்தே ன்
வாடியோடிடமாட்டிவிடுத்தே ன்—கணக்

(கங்கையம்மன்சொல்-தரு-இ-ம்)

கண்ணிகள்

ஆனைசேனையமோடிமெளிக்கவே சொல்
அமோகபாணங்களிதொடுத்தேன் ன்
கானிலவகளுஞ்சவெக்கணைமீறவு ம
நாரியிற்றொடுத்திதோமீட்டினே ன்
வானவர்கள்ஜெயம்ஜெயமெனக்கூறவு ம
வாடிவந்தகந்தமனமதுதேறவு ம்
வட்டவக்கனலதுபோல் வாளிகள்ஜொலித்திட
மான்புசேருங்படைகள்வாடித்திகைத் கிட—ஆனை

ஐயனாரப்பன்சொல்-தரு-இ-ம்

கண்ணிகள்

கற்றவித்தைகள்பேசியெதிர்த்திடுக்கங்கை க
கன்னியேயுன்மனம்வாட வே
பற்றியேதீக்கணை வருகுதுவருகு து
பறித்துன்றன்சிரமதைதவிழ்த்த வே
சற்றுநேரத்திலுன்னுடலத்தைவாட்டி யே
ஜதயலேயுன்னையுமிடக்கூட்டி யே
ஜட்ஜடவெனக்கூவிச் சரங்களுமவருகு து
சுட்டுடன்மெய்யினிற்றுருக்கள்பெருகு து—கற்ற

கங்கையம்மன்சொல்-விருத்தம்.

அரிஹரபுத்ரதேவா வந்தனன்செல்வியென்றும்
பரிவுளமனமிலாமற் பாலகிதனையெதிர்க்க
செறிவலவென்றுகூறும் நீதியையகற்றிக்கிட்டி
வரிசிலையெடுத்துநாண்ட வருமப்ஜெயமுனக்கே

வசனம்.

ஸ்ரீகைலாசபதியாகிய பரமசிவனுக்கும் சொற்கமத்தியபாதாளமென்னும் மூன்று லோகத்தையும் உண்டுபண்ணிய திருமாலுக்குமபுத்திரனாகவிளங்கும் மகாவீரியவானே நீர் உலகெங்கணும்பிராமணஸ்திரீகளைக் கொலைசெய்ய லாகாதென்றும் சிறுபிள்ளைகளை எதிர்க்கலாகாதென்றும் நீதியாற்கூறியிரு




திருந்தும் சற்றேனும்யிரக்கமில்லாமல் சமர்செய்யவந்தபடியால் அபஜெயமேயடைகுவீரய்யனே.

(ஐயனாரப்பன்சொல்-விருத்தம்.)

வையகத்திற்பிறப்பவர்க்கு மியானபேது
வஞ்சமிலாவென்றுமன வருகுகொண்டே
தையலேபிறவுனக்குத் தாமேதோன்றச்
சராசரத்திலுறறச்சய லறிகுவாயோ
மெய்யமழங்குயுன்ஜெனன மெய்த்தசிறும்
விதிகுலத்தில்கெங்கையென்று விளம்புவாரும்
பொய்யுரையாச்சேதியிஃதின்னதென்று
பிரியமுடனுத்தென்பீதுவுனா செய்குவாயே,

வசனம்.

கேளுங் கெங்கைநாயகியே பூலோகத்திலே ஜெனித்த மானிடர்களுக்குப் பூர்வக்கியானமில்லையென்பது யாவருக்குந் தெரிந்திருக்க நீ என்னுடையவரலாறனைத்துங் கண்டறிந்தவள்போறகூறியது மெய்யலவ அன்றியும் இச்சராசரங்கள்தோன்றுதலையும் அறிதலையும் பகுந்துச்சொல்லியநீ சத்தியநெறியுடையவளென்றும் வஞ்சமில்லவென்றும் முன்னமே பூரணமாகவறிந்திருக்கின்றேனாதலால் இனிமேல் உனது பூர்வஜெனனமும் இச்ஜெனனத்தில எவ்வூரிலெந்தப்பிராம்மணனால்வரப்பட்டதோவதையும் இல்லறத்தைவிட்டு நீயெந்த துறவாரமெபெற்று எங்களுடன் போராடுகின்றமையை விபரமாய்ச்சொல்லுமம்மா கன்னிகையே,



(☞ கெங்கையம்மன்சொல்-அகவல்.)

ஆரணத்தாலு மாகமத்தாலு
தேறொணுப்பொருளாய் திகழுமைம்பூதமாய்
ஓங்கியபொருளா முமாயேசற்கும்
பாங்குநம்பன்னகப் பாயலோர்தனக்குஞ்
சேயாய்ஜெனித்தொளிர் செல்வமேகேண்மோ
மாயாப்பிரவி மயக்கத்திலுலையும்
மாந்தர்கட்டிமரல் மாநிலமதனில்
ஆந்துயரதனை லகவிருட் செறிய
அந்தகன்றனக்கு வழிவிலாத்தொழிலாற்
சிந்தைமெலிந்தே சிவன்பாலுரைத்திட
வித்தகனென்னும் விமலனுமறிந்தே
கற்றவாசடையொளிர் கங்கையாமென்னை
மறைகுலப்பெண்ணாய் மாநிலத்துதித்தே
பொறையிலாமாந்தர்கள் புந்தியைக்கலக்கவும்
துஷ்டதேவதைகடன் துன்பத்தைப்போக்கவும்
திஷ்டையைப்பற்றினவர்க் கின்பமளிக்கவும்
எண்ணரும்பிணியெலா மீடுருவண்ணம்
புண்ணியமெய்பெறவிப் பூமியிலுதித்தே
வடவேங்கடன்பால் வரமதைப்பெற்றே
திடமுடனடைத்தித் திரும்புவாயென்றே
விடைகொடுத்தனுப்ப வியன்கொளுமணியே
தடையிலாதியானுஞ் சதுர்மறைக்குலத்தில்
வேதநாயகியெனு மேதகுபார்ப்பினி
பிள்ளையில்லாத பெருந்துயரதனால்
வள்ளலேங்கனைய வணங்கிவந்தமைபால்
பெண்ணுருவாகியப் பேசருங்கங்கையில்
அன்னவளேமிகக்க வரிசையுமெடுத்தே
நாயகன்பாற்செல நல்முறுவேதியன்
றாயகன்னீரிற் றுலங்கியபண்பினால்
கங்கையென்றுநாமகரண மேயளித்து
பொக்கமாய்வளர்க்கப் புத்தனோனென்
ஐந்தாம்வயதி லயற்பெண்களுடன்
விந்தைசேர்நதியில் விளையாட்டுப்பூசலாய்
வந்தவணிரங்கியே மறைந்தன்ன்கங்கையில்
மூழ்கியபெண்களு முதியவர்பாற்செல
தேடியெய்யாமையிற் றிகைத்தவணிற்கையில்



நாடியேநானுமென் நலமெலாம்பகர்ந்து
தேற்றியேயவனைச் சீர்மனைக்கனுப்பி
நாற்றிசையும்புகழ் நாரணன்வாழுந்
திருப்பதியானைச் சீரகத்திருத்தியே
விருப்பமாய்த்தவங்கள் வேணநாள்செய்ய
கண்ணனார்தமது கருத்ததிகளித்தே
திண்ணமார்வரங்கள் ஜெயமுறவளித்தார்
ஏற்றவைநானு மினிப்புடவிருக்கையிற்
சாற்றுதற்கரிய சைவசுரமென்றும்
விட்டுணுசுரமெனும் விந்தைசேர்நோய்கள்
துட்டமாயென்னைத் தொடர்ந்தெதிர்பொருதையில்
வினைகளையடக்க மீறியேகாளியும்
எனைவந்தெதிர்க்கையி லிருவரும்வெகுண்டே
அமர்செயப்புகுந்து வவளையுஞ்ஜெயித்தேன்
சமர்செயவந்த தானுவேயும்மைக்
கண்டவென்மனது களிப்படைந்தேனால்
அண்டர்கள்பணியு மையனேநாமும்
ஒருங்குசேர்ந்திருந்தே யுற்றவெம்பிணிகளை
மருக்குறவிருத்தி மாநிலமதனில்
காப்புகள்கட்டிக் கன்னியராக
மாப்பிள்ளைமார்களாய மாவேடங்கொண்டு
வேப்பிலைபிடித்தே வீதிக்குவீதி
சாப்பாடுகொண்டு சம்பிரமமாகவே
கூழுவார்ப்பித்துங் கும்பங்களேற்றும்
தாழ்விலாப்பூசை நானுமேநடத்தியும்
சந்திகடோறுந் தனிப்பலியேற்றும்
அந்தணர்தமக்கு வன்னதானங்களும்
பலவகைநடாத்திப் பாவங்கடர
நலமாய்விழாக்க ணடத்தியபின்னர்
பாவாடைபோட்டுப் பரிமளகந்தமும்
பூவாடைகளைப் பொற்கரத்தேந்தி
சகலவன்பர்களுந் தவுத்தியர்சூடனே
வெகுவிதவாத்திய வேடிக்கையாக
கங்கையில்விடுத்துக் களித்தெந்தன்கிருபை
தங்கியமானிடர் சந்தோஷம்பெறக்
தீவினையகற்றிச் சென்மமீட்டறப்

பாவங்கள்போக்கிப் பரகதிதரவே
கன்னியான்வந்தவென் கருத்தின்படிக்கு
என்னுடன்வந்தவர்க் கெழில்கொள்பூசைகளும்
தந்திடவந்தேன் தக்கதோர்நீங்கள்
எந்தனுக்குதவி யிருந்திடுவீரோ.

(ஐயனாரப்பன்சொல்-விருத்தம்.)

அப்படியாவுன்பெருமை சொல்லக்கேட்டு
வானந்தசாகரத்துட் டோய்ந்தேனம்மா
எப்படிப்பூஜன்மகிமை யளவிற்செல்லும்
விடரின்றியுதவிசெயச் சந்தோஷித்தோம்
ஒப்பிலாதாயகியே யொன்றுகேண்மோ
உடன்பிறவிகளென்றே யுனக்களித்தேன்
அப்பிலாவீரய்யன் சோபந்திரச்
சந்தோஷமாகவரந்தருகுவாயே.

வசனம்.

கேளும்மா கங்கையே பெறுதற்கரிய உனது மகிமையைக்கேட்ட நாங்களனைவரும் சந்தோஷமென்னும் கடலின்மூழ்கி ஆனந்தபரவசராகி னோமாதலால் இனி இக்கடல்சூழ்ந்த உலகின்கண் யாதொருபிடரின்றி யனது பெருமை சொல்லும்படியாய் நாங்களும் உதவிசெய்யச் சித்தமாக வேயிருக்கின்றோம் ஒப்பொருவரில்லாத கற்பகம்போன்ற நாயகமே உனக்கோர் மறவுண்டு அஃதியாதெனில், குற்றமற்ற குழந்தையாகிய வீரப்ப சோபந்தனியம்படியாகச்செய்து சந்தோஷக்ரமாய் அவனுக்குவேண்டிய வரத்தை யருட்செய்வாயம்மா.

கங்கையம்மன் சொல்-விருத்தம்.

அப்பனே யெழுந்துவாடா வழகுகண்மணியேவாடா
ஒப்பிலாமதனேவாடா வுலகெலாந்துதிக்கவாடா
மெய்ப்புளவெண்ணீர்வேம்பும் வீசினேன்வினைகளோடச்
செப்பினேன்வீரமுத்துச் செல்வனேயெழுந்துவாடா.

பொது-விருத்தம்.

வெண்ணீறுபட்டவுடன் வினைகளோட
வெகுண்டெழும்பிக் கண்விழித்துக் கடுகடுத்தே
கண்ணினாக் கவறுகின்ற வனலைப்போலத்
தாவியவனண்டபிண்ட மதிறத்தாண்டி.



விண்ணோருமண்ணோருந் திடுக்கிட்டேடக்க
வீரசண்டக்ரோதனே யுக்ரங்கொண்டிப்
பெண்ணானகங்கையையான் வெல்வேனென்று
பேரிடிபோற்கொக்கரித்தே யெதிர்த்திட்டானே.

வசனம்.

அதேதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஐயனாரப்பன்சொல்லிய வார்த்தைக்கு மகிழ்ச்சிகொண்டவளாய்க் கங்கையம்மனானவள் தனது கொங்கைகளால் தேகமுழுதுந் துளைப்பட்டுச் சாவுக்குச்சரியான மூர்ச்சை யடைந்திருக்கும் வீரப்பன்மீது வெண்ணீற்றையும்வேப்பிலையைத்திரியும் வீசி ஒப்பிலாக்கற்பகம்போன்ற அப்பனே எழுந்துவருகவென்று வாழ்த் தியமாத்திரத்தில் அவன் சோபந்தீங்கிக் கண்ணைவிழித்துப்பார்த்து தனக் கெதிரில்நிற்குங் கங்கையம்மனைக்கண்டு அதிகோபங்கொண்டு கண்களில் நெருப்புப்பொறிகள்சிந்த நோக்கி அண்டபிண்டங்களதிரும்படியாய்த் தோள்கொட்டிச் சிங்கம்போல்கர்ஜித்து வச்சிரதண்டத்தையொத்த ஓர் கதையைக்கையிலேந்திக் கரகரவென்றுசுழற்றி இப்பெண்ணாகிய கங்கை யைக்கொல்லுவேனென்று குதிக்கிறதைக்கண்ட கங்கையம்மனுக்கும் வீர ப்பனுக்குந் தர்க்கநேரிடும்விதங்காண்க.

வீரப்பனுக்கும்-கங்கையம்மனுக்குந்-தர்க்கம்-தரு-இ-ம்

கண்ணிகள்.

வீரனே-யுலகின்மிக்க-தீரனே
வீரமாகவென்மேற் போர்செய்யமுடியாமே
மாறுமயக்கஞ்செய்த மந்த்ரசாலிவாடி — வீர

கங்கையம்மன் சொல்-தரு

கண்ணிகள்.

தங்கம்நீயே-சண்முக-சிங்கம்நீயே
கங்கையென்றேயென்னைக் கருதியுனதுமனம்
பொங்கியீரவந்ததேன் பொறுக்கத்தானேவேண்டும் — தங்

வீரப்பன்சொல்-தரு

கண்ணிகள்.

மித்ரசவேண்டாம் யாதொன்றுசெய்யும்-அந்தசவேண்டாம்
பத்ரியிவள்கங்கை மாதாவென்றேயெண்ணி
தத்ரமுமக்கென்றே சரணஞ்செய்துகொள்வேன் — மித்ர

இ

கங்கையம்மன் சொல் தரு

கண்ணிகள்.

அச்சமேனு-மணியுமென்ற மிச்சையேனு
அச்சமெனக்குண்டோ வடிப்பெண்களேபோடா
வுச்சிதகெங்கையா ளென்றாதேயெதிர்நில்லு — அச்ச

வீரப்பன் சொல் தரு

கண்ணிகள்

வந்துபாரும்-என்றுவென்னை-சிந்தை தேறும்
மைந்தர்கள்செய்பிழை மாதாபொறுப்பதென்றும்
அந்தவிதத்திற்கு கோபமிடாமல்மீறி — வந்து

கங்கையம்மன்சொல்-தரு

கண்ணிகள்

அன்னை வேண்டாம்-அதிககோபம்-கொள்ளவேண்டாம்
தென்னுமணியேசொல்லைத் தள்ளிவிடக்கூடாதே
வெள்ளத்செஞ்சடைதன்னி லுள்ளதேயாகாதே — அன்ன

வீரப்பன் சொல்-விருத்தம்.

தந்தைசொன்மிக்கமந்திரமில்லை யென்றவ்வை
அந்தசொல்லாலேகோப மடக்கியேயனாண்டாகி
வந்தேனுமதுதிவ்ய மலரடிசரணமம்மா
சிந்தையிலப்பாய்மைந்தன் செய்பிழைபொறுத்தாள்வாயே

வசனம்

ஓ-அம்மணி தந்தைசொன்மிக்க மந்திரமில்லையென்று ஔவையார் கூறியிருக்கும் நீதிச்சொல்லைக் கோபத்தைமாற்றிவிட்டேன் ஆதலால் தாயகமாகிய உமதுதிவ்யசரணாரவிந்தங்களுக்கு வந்தனம் அடியேன்செய் தபிழைபனைத்தும் பொறுத்தாட்கொள்ளுவாய் அம்மணி.

(மாரியம்மன் கெங்கையம்மன்மீ தமர்செய்யவரும்-பொது விருத்தம்.)

பகலவன்போல் நவமணியார் மகுடமின்னப்
பாரொக்கும் விலமதியாப் பணிகட்மைந்த
தகதகென வொளிக்க வலங்கரித்தே
நனிவில்வேல் வாளுடன் சூலமேந்தி
மிகவுதனிப் போற்றுதார் காளிமாலி



விண்ணவருற கொண்டாட வரவமாட
ஜெகமுழுதும் பணிந்தேத்து மாரியம்மன்
சினமிகுந்து கங்கைமுன்னே வருகின்றாளே

இருவுமது-தரு-ரூபம்

பல்லவி.

வாசவன் மிகத்துதி பேசும்பிரகாசமுறு
மகமாரியம்மன்வந்தாள் ஜெகப்பிரகாச — மகா

அநுபல்லவி.

மாசில்லாதமணி மகுடம்பளபளென்ன
வஜ்ரமிழைந்தகொந்தளமோலையுமின்ன [வாச]

சரணங்கள்

காகபாலியாலியரகபுஜ வல்லி
கடகம்பளபளென்ன வே
சரிகையுடுக்கைவாகுடன் சூலகரத்திலேந்தித்
சோதிமிகுந்தமிலக்கிட வாருமொதித்திடுஞ்சூரர்கலங்கிட (வா)

எங்கும்நிறைந்தரி சிகையாகனமேறி
பிணையில்லாதவீரர்சூழ வே
மங்களாகரி கௌமாரிவிசித்தேகாதரி
மண்டலமெங்கும்புகழுறவுந்தேசு அண்டமெல்லாமதர்களரிகள்வீச (வா)

தண்டைகொலுசுமவிர கண்டாமணியொலிக்க
சகளவாத்தியங்கள்முழங்க வே
தொண்டனிட்டருமிகுதொண்டாடிப்பூசைப்ரேதம்
தேசுபொசசெறு கங்கையைமிக மாசறாதவம் யரிபுராரி (வாச)

மாரியம்மன் தனதுகாவற்காரிக்குச்சொல்-விருத்தம்.

பார்த்தவர்மனங்களிக்கும் பண்புகாவலியேகேளாய்
போற்றவேயுலகமெல்லாம் பூசைகொண்டிருக்குங்கீர்த்தி
மாற்றமேவந்தகெங்கை வல்லமையறியவேண்டிக்
காத்தவராயன்றன்னைக் கடுகியேயழைத்துவாராய்

வசனம்.

வாராய் எனதுஏவற்கிசைந்த காவலியே இவ்வாயில் இக்கடல்சூழ்ந்த உலகமெங்கு மென்னைக்கொண்டாடிப் பூஜித்துவரும் கீர்த்தியைப்பெற்றிருந்த எனதுபெருமையை மாற்றுவதற்காகவந்திருக்கும் கெங்கையினுடைய சவுரியத்தையறியவேண்டி என்மைந்தனாகிய காத்தவராயனையழைத்துவருவாய் பெண்ணே,

பொது-விருத்தம்.

மண்டலமெலாம்வணங்கும் மாரியம்மன்
மகிழ்ச்சியுடன்வரவழைத்த சேதிகேட்கக்
குண்டலங்கள்தனதனொளிது செவியிலாடக்
கொடியபிணிப்பேய்பூதங்கள் கதறியோட
தண்டமுடன்சிலைவேலும் வாளுமேந்தித்
தரணியுளோரெவர்களும் பணிந்துபோற்றக்
கண்டவர்களதிசெயிக்கக் காத்தமுத்து
கவலையெல்லாம்வாட்டியுடனே வருகின்றானே.

(காத்தவராயன் வருகிற-தரு-இ-ம்)

பல்லவி.

அருள்மொழியுமகம் மாரியம்மனளித்த
காத்தவராயனவந்தான் உக்ரமிருக்க—காத்தவ

அநுபல்லவி.

தாணியுளோருமோங்குஞ் சர்வபரிபூரணி
தாயுமெனத்தரு மாயன்சகோதரி-நேயமுடன்பணியுந் தூயதமை

சரணங்கள். குணல(கரு

வட்டச்சிலையுடனே வடிவேற்கேடயமண
வாளை சக்கரந்தம்விச வே
எட்டுத்திசைகளுக்க யிடிவல்லமைப்பூட்டி
எங்குமுளோர்மஞ்சச் சங்கமதைமுழக்கிப்
பொங்கிநாதகவே தங்கச்சிரோன்மணி (கரு

ஜல்லடமுங்கச்சையுந் தருமிடையில்வரிந்து
தனிவிருதுகள்கூறி யே
சொல்லுஞ்சொருகுடனே பல்லக்காட்டிகளைத்து
அன்னம்பலபணி யின்னதேகத்தில்
மன்னுமன்மதன் போல்வுண்ணிதக (கரு

காலுக்கிலைசந்தவீர தண்டாயணியொலிக்க
கடகம்பனம்பொன்ன வே
மேலுக்கிசைந்தநல்ல வியன்சொருந்தரமாட
மெத்தவேமாதர்கள் சித்தமயங்கிட
வுத்தமவன்பாகன் தேதிபுரிந்திடக் (கரு

(காத்தவராயன்சொல்-விருத்தம்.)

திரிசூலிபுலிகாளி ஜெகமெலாநிறைந்தவே
அரிசகோதரியேயுந்த னரவிந்தமலர்த்தாள்போற்றி



பிரியமாயென்னைகாக்கும் புண்ணியவதியேயன்றே
பரிவுடனென்னையழைத்த பான்மையையருட்செய்வாயே

வசனம்.

ஆதியந்தாக்காரசிதனாக விளங்கும் மாயன்சகோதரி மகம்மாரி திரிசூலி கோலாகலிநீலிகபாலி நினைந்தபட்சாட்சரிஉன துகபாதாம்புயங்களுக்கு அனேகவந்தனம்அம்மணி அடியேனைப்பரிவோடு யழைத்தகாரணத்தைப் பகர்ந்தருளவேண்டுந்தாயே.

மாரியம்மன்சொல்-விருத்தம்.

கட்டழகுடையவெந்தன் காத்தவராயாவாழி
மட்டிலாவுலகிற்கொண்ட வண்மைசேர்த்திட போக்க
பட்டணந்தனிலேலங்க பார்ப்பாரக்கன்னிதன்னை
அட்டியில்லாமல்வெற்றி யடைந்திவண்வருகுவாயே

வசனம்.

வாருமப்பா பெறுதற்கரிய மைந்தனே இதுபரியந்தம் நமதுபெயரைச் சொல்லி இவ்வுலகெங்குங் கொடியுண்டாக வழிபாடிப்பூசைசெய்துவந்த பெருமையைப்போக்குபடியாய் இப்போதுபிராம்மணகுலத்திற்றோன்றி கெங்கையெனப்பெயர்பூண்ட ஓர்கன்னிபாலவள்வந்திருப்பதால் நீசென்று அவளைசெயித்துவரக்கடவாய் அப்பனே

பொது-வசனம்

அகோதெப்படியென்றால் இச்சப்ரகாரம் மாரியம்மனைவள் தனதருமாரனைய காத்தவராயனுக்குக் கெங்கையைப்பெறுதிச்சமாஜெயித்துவாரக் கடவையென்று விடைதந்ததுபோல் அக்காத்தவன் மிகவுங் கோபங்கொண்டுவருகையில் அவனைக்கண்டு கெங்கை தங்கஞ்செய்யும்விதங்காண்க

காத்தவராயனுக்குங் கங்கையம்மனுக்குந்-தர்க்கம்-தரு

கண்ணிகள்

வாரும்வாரும் கெங்கையே-என்னுடன்வீரந் பே
பாரும்பாரும் கெங்கை
சீரும்புகழ்படைத்த மாரியம்மனளித் த
சேயன்காத்தமுத்தென்றால் வாய்மூடுமுலகெங்கும்
செல்லுமோயிதோ வில்லவனைத்தே ன்
கல்லுமன்றனைக் கொல்வதினைத்தே ள—வாரும்

கன்னையம்மன்சொல்-தரு-இ-ம்-தரு

கண்ணிகள்

கேளுங்கேநாதனுண்டோ-கல்லதாசந்                தே
தானுஞ்செய்துநேன்றெண்டு                           னோ
ஞோனிமுனையாளைக்குட்டியைப்போலெதிர்த்து க்
குதிக்கின்றாயேதடா-மதித்துப்பாரமை                லே
குத்தியிருக்கவேபற்றினேன்றுவ                       ம்
அத்தன்மெச்சிமுந்தமிழ்பெண                       க்—கேளும்

காத்தவராயன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்

என்னபெருமையேபேசுறாய்-பரமன்மெச்ச           க்
கன்னிராணியென்றேதவிக்கறு                        ய்
சின்னவென்னடே யென்னை யென்னைமேதியாமற்
சிந்தையுவந்துவந்த பெருமையதனை                 லோ
[illegible]                                              றி
[illegible]                                              ன்—என்னு

கன்னையம்மன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்

ஏதடாசிறுபையனேயிந்தவெகல                        ம்
வாதடாவருமாதி                                       லெ
மாதடாபெண்ணென்னைவல்லமையதிதா             யோ
மாற்றலர்களைக்குடி பெயர்த்துவெனம்பு            ரி
வந்தபெண் அனைகாதெனுக்கிடவேவேண்டா           ம்
வுந்தனைவெல்லுதற் கொந்துக்கிடுஞ்சொ              ல்—ஏதடா

காத்தவராயன்சொல் விருத்தம்

வீண்திறம்பேசவேண்டாம் பெல்லியேபெண்பிள்ளைக்கு
சாண்பிள்ளையென்றலெந்த வாண்பிள்ளைத்தனம்பராது
காண்டைநீயென்னாடுவீரம் கைக்கினையொந்தவருண்டோ
பூண்பணிசிரத்தைத்தெரியப் பூட்டினேன்பாணம்பாராய்

வசனம்.

ஆ-ஆ-பளாபளா-கல்லதுகெட்டிக்காரிதான்-ஒகன்னைகயே நீ - என்முன்னேநின்று வீறுமாகாரியங்களைப் பேசவேண்டாம்-சாண்பிள்ளையென்றாலும் ஆண்பிள்ளையினுடையதிறம் பெண்பிள்ளைக்குண்டாகாதென்னும் ப



ழமொழியரியாயோ அதுபோல் என துவல்லமையினால் உனது சிரம்வே றுகரம்வேறுகக்கண்டிக்கும்படியாய் பாணப்பிரயோகஞ்செய்கின்றேன் பார் கன்னைகயே

காத்தவராயனுக்கும்-கன்னையம்மனுக்கும்-தற்கம்-தரு

கண்ணிகள்.

பாணம்பூட்டினேனென்றுமெபாணம்பூட்டினேன்
பாணம்பூட்டிப்பறக்கடிக்குஞ்செய                      தி
பன்னவராகிமனோருகாலனோடிட                       த்
தானுவுனக்குத்துணைவந்தபோதினு                    ந்
தந்நனிக்கச்செய்வேனுக்ராவில்லையாத்               தே—பாணம்

கன்னையம்மன்சொல்-தரு

கண்ணிகள்

வீரமேதடா வுனக்கேந்த-வீரமேத                       டா
வீரமேதடா வெறுமைதனைபொய்ய                     னே
வெற்றிகொள்ளவுன்றுபெலப்படிமுடிப்பு                ம்
ஆரவாரமிக்கேயரிமாமறசெய்குறு                       ய்
ஆர்துணைவந்தாலுமடாவுனைக்கொல்லுவே          ன்—வீரமே

காத்தவராயன்சொல் தரு

கண்ணிகள்.

கொல்லத்துணிந்தேன்பார்-கனைத்துநாட் கொல்லத்துணிந்தேன்
கொல்லத்துணிந்தேன்விதிக்குலக்கோதை                  யே
கோத்திரத்திலுன்னை விரகைன்போலக்                    யே
பல்லைக்காட்டியுனைகொஞ்சவேசெய்குவே                ன்
பருதிபோல்வாளியுமோகமாய்ப்பெய்குவே                 ன்—கொல்

கன்னையம்மன்சொல்-தரு

கண்ணிகள்

ஏதுகாலமோஉனக்கிறா-யேதுகால                        மோ
ஏதுகாலமோசீவனைதப்படவெல்ல                        ச்
எரிக்கணையொன்றும் பொசுக்குவேன்பார               டா
நாதன்சடையிலிருப்பதரியா                               யோ
நசுக்கச்சென்றேனவிலாதாடட்டுபே                      டா—ஏது

காத்தவராயன்சொல்-தரு

கண்ணிகள்

என்னகாலமோ-மடிந்திட-வென்னகால                   மே
என்னகாலமோ-வென்றேயெடுத்திட்டுப்பேசுரா            ய்

யிறப்பவளாதலா-லேசோனைவீகரு ய்
இன்னவனென்றுமதித்தாயோநீ யென்னை ச்
சேதிக்குநேனிதோபெ றிக்குறேன்பாரா ய்—என்

கங்கையம்மன்சொல்-விருத்தம்

சிங்கவாகினி மாரியம்மன்றந்தச்
செல்வனென்றுமனத்திற்றகதே சொல்லக்கேளாய்
இங்குன்மதிதனைவெல்லக்கண்டதுண்டோ
கதிரவனைப்பிடிக்கமுட்டமெதிர்ப்பதுண்டோ
செங்கருடன்றனைப்பாம்புவெல்லவதுண்டோ
ஜெகமதனிலென்னைவெல்லுந்திறமுண்டோ
மங்களமாயென்னைப்பொருதாவயனெனவிணி
மலரடியைப்பணிந்துகடைபெருகுவாயே

வசனம்

ஆஆ-உலகின்கண் சிங்கவாகனத்தில் போசணித்திலகாயின்ற மாரியம்மன்றந்த காத்தவராயனே சந்திரசேனை [illegible] திட்டமுட்டப்பொரும் ஆமா ஆயிரங்கிரணத்தோடு கூடிய ஆதித்தனென்னும் சூரியனைப்பணிக்கட்டி [illegible] செங்கருடனைச்செவியென்னும்-பாம்பு எதிர்த்தாற்போல் [illegible] வெலத்தக்கவீரியமுமுண்டோ ஆதலால் [illegible] விடுத்தென்னை [illegible] பணிந்தால் நன்மையைப்பெறுவாயடா காத்தமுத்தே

காத்தவராயனுக்குங்-கங்கையம்மனுக்குந்-தர்க்கம்-தரு

கண்ணிகள்

வீராதிவீரனுமேனா-கங்கையேயுன் னை
யீர்ப்பபறக்கடிப்பே னே
பாராமதிவியாமற் பாதம்பணிபக்சொன்று ய்
பற்றுயிர்தகனைக்கார்மேனெற்றிக்கொள்வனைப்போதில்—ல

கங்கையம்மன்சொல்-தரு

கண்ணிகள்

அஞ்சாதகெங்கைக்காளே ஆங்காரனுன்னை ப்
பஞ்சாய்ப்பறக்கடிப்பே னே
வஞ்சியெந்தன்னைக்கைக்கு மிஞ்சுங்காரநுமுண்டோ
வாட்டிக்கனைபூட்டியிதோ-வோட்டுவேனபதிக்கு—அஞ்



காத்தவராயன்சொல்-தரு

கண்ணிகள்.

சுக்குமார்தடியை யெடுப்பேன்-கங்கையேயுன்னை ச்
செக்கைச்செக்கையாகவடிப்பே ன்
திக்குவேறேயில்லையென்று-மிக்கபுகழ்கொண்டுவந்தா ய்
தேசமெங்கும்பேசத்துதி-வீசியேபறகக்டிப்பே ன்—சுக்கு

கங்கையம்மன்சொல்-தரு

கண்ணிகள்

கண்டங்கரத்திலெடுப்பேன்-கரகரவென் றே
நின்றுசுழற்றியேவிடுப்பே ன்.
மண்டலமும்விண்டலமுங்கண்டேநடுங் க
வாடிப்பயந்தோடிடவே-நாடியேவுக்கிரங்கொண் டு—கண்ட

(காத்தவராயன்சொல்-கந்தார்த்தம்)

சக்கரஞ்சூலம்வேலும்-தனிக்கதைபிண்டிபாலம்
மிக்கவாயுதங்களோடும்-வேண்டியவிருதுமுண்டு
கைக்கிணையில்லையென்று-கருவிக்குங்கங்கையாளே

உக்கிரகோபங்கொண்டு

ஓங்கினேனே-ஆயுதங்கையிற்-றாங்கினேனே
தேங்கித்தேங்கியுந்தன் சிந்தைதிகைத்திட
வாங்கிவாங்கிக்கணை-வந்துமிகுத்திட (ஓங்கி)

(கங்கையம்மன்சொல்-கந்தார்த்தம்)

வையகம்போற்றுகின்ற-மகம்மாரிமைந்தனென்றே
ஐயமிலாமலென்னோ-டமர்செயுமகனேகேளாய்
கையிலாகுமோடா-கடிந்தமர்புரியவந்தாய்

செய்யவேவேணுமன்பம்

தீரமுண்டு-உந்தனைவெல்ல-வீரமுண்டு
காரியமறியாமற்-காத்தவராயனே
மாரியின்சுதனென்றே-மனமில்லையுனைக்கொல்ல (தீர)

(காத்தவராயன்சொல்-கந்தார்த்தம்)

நலமிகுமொழியுரைத்த-நங்கையேகங்கையாளே
வலதிலர்வின்பமென்று-மனதிலேகண்டுக்கொண்டேன்
பலபலகணைகள்சிந்திப்-பாரெலாமதிசயிக்க

சலமதுமிகநீகொள்ளச்

ஜாடிவேனே-இரண்டுதுண்டாய்ப்-போடுவேனே.
நாடுநகரமெல்லாம்-நற்றுதிகொண்டநீ
வாடும்படியிங்கே-வந்தகப்பட்டாயே (ஜாடி)

(கங்கையம்மன்சொல்-கந்தார்த்தம்)

கன்னியென்றெனிதாய்ச்சொன்ன-காத்தவராயாகேண்மோ
உன்னையுமறிவேனுன்ற னைகந்தாயானமாரி
தன்னையுமறிவேனெந்தன்-சங்கதியறியாய்நீயும்

என்னிடமிலைகாண

எண்ணினேனே-மணிமந்தரம்-பண்ணினேனே
வெண்ணீறைவிடு-வீரமொழிந்தேயே.
குண்ணிவாடநீயுங்-கொஞ்சம்பரயோசித்தேன் (எண்ணி)

பொது-விருத்தம்

கங்கையேவியமாயத்தாற் காத்தவராயன்சேர
அங்கமுந்துடிதுடித்தே யாக்ரமித்தெழுந்துமீறி
சிங்காரகனத்திலேறி திரிசூலப்படையேந்தி
மங்கைபாங்கங்கைமுன்னே மாரிவந்தெதிர்த்திட்டாளே

வசனம்

அதேதெப்படியென்றால் இந்தப்ரகாரம் கங்கையம்மனானவள் தன்னுடனமர்செய்துவந்தகாத்தவராயனுக்கு யெத்தனையோவித கன்மைசொல்லியும் அவைகளை அசட்டைசெய்தும் துவைநதக்கண்டுகோபங்கொண்டவள் யத்தனைத்துக்கவசப்பட்டிருந்த மனமந்தரசித்துகளிற் சிலவற்றை யவன்மேற்றூண்டியபோது அதனால்மெய்சோர்ந்து சாவுக்குச்சரியானமூற்கைகொண்டுவிலதன்மேற்சாய அதைக்கண்ட அவன் அன்னையாகிய மகமாரிதுடிதுடித்துக்கோபங்கொண்டு சூலப்படைமுதலியவாயுதங்களேந்திஅண்டமாடுங்கக்கெற்சனைசெய்து கங்கைக்குமுன்வந்துநின்று போர்புரியும்விதங்காண்க.

மாரியம்மனுக்கும்-கங்கையம்மனுக்கும்-தற்கம்-தரு.

கண்ணிகள்.

ஆரடிநீவாடி-கங்கையேயிந் த
வமர்க்களந்தனில்மிகச்சமர்புரிந்திடுபவ ள—ஆரடி
ஆரடியுனெங்குக் கிளஞ்செலுத்திட வே
ஆசைகொண்டுவந்தேதடி-உன்னோடு ம



அறிவேனறிவேனடி-கெருவமிகமிஞ்சாதே
நேசங்கொண்டுவந்ததேதடி
ஆட்டியேபொம்பரம்போலே-வாட்டியேகிளைப்பொழுதில்
காட்டியேயெனதுவீர-மோட்டிவிடுவேனேயுன்னை (ஆரடி)

கங்கையம்மஞ்சொல்-தரு

கண்ணிகள்

மறைகுலக்கன்னிநானடி நல்ல
வலுமையிகுத்தேயிந்தவுலகோர்சொலற்கரி ய (மறை)
இறையவனார்மகிழுந்-தனாபுகழ்கங்கைநா னே
யின்பமுற்றுவந்ததேதடி-தீரத்துட னே
யெண்ணியெண்ணியேமனதிலெந்தனையறிந்திடாம ல்
தெம்புகொண்டேவந்ததேத டி
முந்திவந்தகசந்தனைப்போல் கொந்துநீமயங்கிட வே
யெந்தனையெதிர்த்துளம-வெந்துயேன்வீணாகப்போராய் (மறை)

மாரியம்மன்சொல்-தரு,

கண்ணிகள்

சீதறனார்தங்கைநானடி-திளைகுமிந் த
ஜெகமெலாங்கெடிபெற-மிகத்துதிபரவி ய (சீத)
வேதியன்குலந்தன்னில் மாதேநீபிறந்தவ ள்
வீரங்களுந்தனக்கேதடி-மிகுவகோ ர
வெகுவிதவினையுடனே-வியன்கொள்மகிமைகாட்டு ந்
தீரமுந்தனக்கேத டி
மீறவேயருகணைகள் மாரிவேழுந்த கி
யரிவிழுந்திடவுன்னைக் கூறுகூறாகவேசெய்வே ன் (சீத)

கங்கையம்மன்சொல்-தரு

கண்ணிகள்

எல்லாமறிந்தனடி-மிகந்தனி லே
யென்னைவந்தெதிர்த்தவர்கட்கிருக்குமோ ஞ்சிடங்க ள் (எல்)
வல்லோர்களும்மனங்கனல்லோர்களுந்துதிக் க
வயங்குங்கீர்த்திபெறவந்தேன்-இப்புவிமீ து
வாசமாகவேயென்னுடன் கேசமதுசெய்யவந்த ல்
தளருதவாய்மைதந்தே னே
மண்டிச்சமர்செய்குவோரைத்-தண்டிக்கின்றவிதமுண் டு
அண்டாதகோபமுடனே கொண்டேனே-தருகாத்தி ல் (எல்)

(மாரியம்மன்சொல்-விருத்தம்)

பாரில்வாழ்மாந்தராதி பண்புளதேவரெல்லாம்
மாரியேதெய்வமென்னு மகிமைநீயறிந்திடாமல்
வீரியஞ்செலுத்தவந்த விதிகுலப்பெண்ணேயுன்னைக்
கூரியவாளினாலே கொல்லுவேன்வந்துபாராய்

வசனம்.

அடி-அடி-அடி-மறைகுலத்திலுதித்த கங்கையே நெடியகடல்சூழ்ந்த இந்த பூமியின்கண்ணுள்ள மாநிடர்முதற்றேவர்களெல்லாம மாரியேதெய்வமென்றுபுகழும் எனதுமகிமையைநீயோசியாமல் ஏதோவுனதுஅரியாத்தனத்தால்வீரியங்காட்ட என்னைமுற்றுமாதலால் இதோ யெனதுப் பிரகாசம் பொருந்திக்கூரோடுக்கூடியிருக்குஞ் சந்திராயுதத்தினால் வுன்னைக்கொல்லுவேன்வந்துபாரடிகங்கையே

மாரியம்மன்சொல் ஓரடித்-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி

பல்லவி

முத்துமாரிநானே சொலும்
மூதண்டங்களுந்-தீதண்டாதொனிர்
கோதண்டன்-குலவுஞ்சோதரியெனும் (முத்து)

எத்தலமும்புகழு-மெனக்கிணை சொல்லப்போமோ
வெறிக்கங்கையேநீயென்னை-யெளிதில்வெல்லவுமாமோ
பித்துகொண்டறியாமற் பிடித்தாய்கரத்தில்வில்லை
பேசாமலோடுவாயேற்-பின்வருமோவித்தொல்லை

வெலக்கொண்டபுறைமுககணையதனாலே
கலங்கண்டவுந்த னல்லுடமுமண்மேலே
பிணமிவிழுந்தேயிலங்க-வண்டர்கள்கண்ணீர்கலக்க
அண்டமுனைத்துங்குலுங்க-யெண்டிசையென்சீர்துலங்க
பேதைதலைதகாயவி-விழுங்கமுஞ்
சேதிகேட்டுவந்தியாவரும்டி தொழும் (முத்து)

வரிச்சிலைதொடுத்தே ளே-கங்கையேவெய்ய
வாளிகள்-விடுத்தே னே
சரித்திரன்களுடனே-நாயும்பேய்ப்பூதங்களும்
சன்றுயுனைப்பொசித்தே-நடிக்குஞ்சகதிகளும்

இருச்செவியினுங்கேட்டே-யிரும்புவிமெச்சக்கோலம்
யெழிலுறவேசிரிவேனேனுனக்கிந்தகாலம் (முத்து)



கங்கையம்மன்சொல் ஓரடித்தரு-இ-ம்

பல்லவி.

கங்கைநானென்றேபாரடி - ககனர்பணி
கங்கைநானென்றேதேற டி

சங்கரனார்சடையிற் றங்கும்படியெனக்கு
சந்ததமுமுண்டெனத் தரணிசொலுமுனக்கு
அங்கமேதுகதனை லருப்புண்டநிருமூடி
ஆறென்றெண்ணினாய்நல்ல தாகட்டென்னெதிர்வாடி
அறங்கொண்டுயிர்த்த வகிலத்துள்ளவர்வினை
திறங்கொண்டொழியச் செய்யவுந்துதித்தவெனை
அற்பமதாகவேயெண்ணி விற்பிடித்தாயெதிர்நண்ணி
ஆயன்வந்தாலுந்துணையால் சேயஞ்செய்வேனேயிணையாய்
அந்தரக்காத்தாடிபோலே மூந்துமெந்தன்கணையாலே
ஆழியலைந்திடச்செய்யும் மூவுலைச்சூலங்களையும் (கங்கை)

பொது-வசனம்.

அகோ தெப்படியென்றால், இந்தப்பிரகாரம் ஸ்ரீகைலாசபதியாகிய சந்திரஜடாதரமூர்த்தியினது சடாடவியிலிலங்கும் கெங்கையம்மனும் ஸ்ரீவைகுந்தநாதனென்னும் மாயவன்சகோதரியாகிய மாரியம்மனும் லோகலோகங்களெல்லாம் நடுங்கும்படியாய்ச்செய்யுஞ் சமராக்கண்டு அச்சமுற்றவராய் அவர்களைச் சமாதானஞ் செய்யும்பொருட்டு திருமால் வருகிற விதங்காண்க.

இதுவுமது-விருத்தம்.

அடவுளமாரியென்னு மருமைசேர்கங்கையென்னுந்
திடமுளவிருவருந்தான் செய்சமர்நலமோவென்று
கடுகியதேவர்சூழக் கரத்திற்சங்காழியேந்தி
வடமலைவேங்கடேசன் வந்தவர்க்குரைசெய்வாரே.

திருமால்சொல்லுந்-தரு-இ-ம்

பல்லவி.

தங்கையேமாமறைக் கங்கையேநீங்கள்
சமர்செய்யலாகுமோ நில்லுங்கள்

அநுபல்லவி.

செங்கைப்படைகளெல்லா மென்கையிற்றருங்கள்
சினம்விடுத்தேயன்பாக மனமகிழ்வுற்றுவாருங்கள் (தங்

சரணங்கள்.

முத்துமாரியத்தன் சடைதனிலேவாழும்
மூர்க்கமுள்ளகங்கை நீதானு ம்
சுத்தபரிசோதி சரதிவாச தி
சொல்லுகாரங்காரி தாய்மறைக்குலமா தே (தன்)
கன்னபுரமாரி யென்னமேயிதவரு ந்
கனிந்துவொருமிக்கா தேவின்னா மே
வன்னியேந்துமீசன் வரத்தினாலேவந் து
வண்மைசேரும்புண்யம் வழங்கச்செய்யவந்தவர் (தன்)
சண்டாளர்சொரூபின்மிஞ்சிக் கொண்டதனலைச்
சங்கரனுருமெ கண்டவ ர்
கண்டித்தே துஷ்டரைக் காத்திடவன்ப னா
காசிதனில்வந்த பராயக்காரியிவ ள் (தன்)

இருவுமது விருத்தம்.

அம்மணியிவளோர் கெங்கை யானசெயலாலேவந்து
நம்மிலுமொருவனாகத் தங்கநெறிலடக்கவந்தாள்
செம்மையாயிவளை வேண்டிச் செனனசெனாதெமாழவேவேண்டு
யும்மிடம்வந்தாளம்மா வுளங்களித்திருந்திடீரோ.

வசனம்.

கேளுமம்மா தங்கையே பூமியிலக்ரமங்கள் மிகுத்ததால் நமனுக்குவே லையதிகமாகிவருந்த அதைக்கண்டயீசன் கெங்கைக்கருள்செய்ய அதுபேச ல் பூலோகத்தில் பிரம்ம தலகெங்கையென்று திருப்பெயர்கொண்டு என் னிடத்தில் வேண்டியவரங்களைப்பெற்று சர்வபிடைகளையும் வசப்படுத்தி காளியம்மன்-ஐயனார் முதலானவர்களையும் வசப்படுத்தியபின் உன்னிடம் வந்தவளாதலால் நீயும் உளமகிழ்ந்து வொருங்குபட்டிருப்பாயாகில் இவ ள்பெயரைச்சொல்லி மானிடர்கள் நம்மையெல்லாங் கொண்டாடுவார்கள் இதுவுத்தமமானகாரியம் அதன்பேரில் நாமனைவருங்கூடிப் பூலோகத்தா ருக்கு நலங்கள்தருவோமம்மா தங்கையே.

மாரியம்மன்சொல் விருத்தம்.


அன்புசேர்கங்கைநீறு வண்ணாவுன்பாதம்போற்றி
இன்புள திருமொழிக்கு விடவுமதுண்டோவோர்கள்
உம்பர்நாயகனேயிந்த வுத்தமியாள்மனைக்கு
நம்பிநேர்க்கரும் நாடவேசெய்குவீரோ.



வசனம்.

சரணம்-சரணம் அண்ணாவே உமது திருவாக்கிற்கு பதில்வார்த்தையு ண்டோ, கெங்கையின்மீது பேசுதற்கரிய பிரியமுற்றேனாதலால் யாவரும் அவளது அழகியமனைக்கு எழுந்தருளவேண்டும் அண்ணாவே.

—(*)—



திருமால்சொல் வாழி விருத்தம்.

பத்தியுருந்தங்கையரோ வாழிவாழி
பாசமுடன்கெங்கையம்மன் குணம்வாழி
வைத்தியல்விருன்யமுடன் குன்பநோயும்
வாதபித்தசீதசுரம் பலவுநீங்கி
புத்திரமித்திரருடனே சம்பத்துண்டாய்ப்
பூலோகத்துள்ளவரும் வாழ்வாரம்மா
சத்திமகம்மாரி கெங்கை யிருவருந்தான்
சந்ததமுங்களிப்புடனே வாழ்குவீரே.

# கெங்கையம்மன்

நாடகாலங்காரம்

முற்றிற்று.

உ

# மங்களம்

—*—

இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

கெங்காபவானிபெண்ணுங் கருணாகடாக்ஷிக்கு
மங்களம்-ஜெயமங்கள ... ... ...ம்
சங்கரனாருந்தந் திரிகோணக்கரனுக்கு
மங்களம்-ஜெயமங்கள ... ... ...ம்
சேரமுனைத்தரித்த தாளிர் சுகுணரஞ்சிதனுக்கு
மங்களம்-ஜெயமங்கள ... ... ...ம்
வரம்பெற்றிலகும் வனராஜபுதல்விக்கு
மங்களம்-ஜெயமங்கள ... ... ...ம்
துன்னுமயின்மேல்வருஞ் சுப்பிரமணியற்கு
மங்களம்-ஜெயமங்கள ... ... ...ம்
மன்னும்வள்ளிதெய்வயானையிருவருக்கு
மங்களம்-ஜெயமங்கள ... ... ...ம்
வண்ணமனைகள்பணி வடவேங்கடத்தாருக்கு
மங்களம்-ஜெயமங்கள ... ... ...ம்
தண்ணுலவுங்குழற் றையலலர்மேலுக்கு
மங்களம்-ஜெயமங்கள ... ... ...ம்
மாமறைகட்கு மன்னும்புவியினோர்க்கு
மங்களம்-ஜெயமங்கள ... ... ...ம்
சேமமுடனேகெங்கை நீள்புகழ்படித்தோர்க்கு
மங்களம்-ஜெயமங்கள ... ... ...ம்.

மங்களம்-முற்றிற்று.